

ஆசிரியர் உரை

# டைனோசர்கள் உண்மையாகவே வாழ்ந்தனவா?

# Did Dinosaurs Really Exist ?

Louis Rushmore

**ஆ**ம், இப்பூமியில் டைனோசர்கள் வாழ்ந்ததற்கான படிமச் சான்றுகள் கணிசமாக உள்ளன. டைனோசர்கள் உண்மையாகவே இவ்வுலகில் இருந்திருக்கின்றன. டைனோசர்கள் ஒரு காலகட்டத்தில், இப்பூமியை வலம் வந்தன என்பதற்கு படிமச் சான்றுகள் ஏராளம் இருக்க, மறுபுறம் இவ்விலங்கினம் இப்பூமியில் வாழ்ந்ததென்பதற்கு வரலாற்றுச் சுவடுகளும் சான்றுகளாக உள்ளன. டைனோசர்கள் இப்பூமியில் ஒரு காலகட்டத்தில் வாழந்தன என்பதற்கு வேதாகமமும் சாட்சி பகர்கின்றது. ஏனெனில், வேதாகமமும் ஒரு வரலாற்றுச் சுவடுதானே.

டைனோசர் என்னும் வார்த்தையின் பொருள் **பயங்கரமான பல்லி** என்பதாகும். Dinosaur என்னும் வார்த்தை ஆங்கில மொழி அகராதியில் 1841-ல் தான் சேர்க்கப்பட்டது. அதனால்தான், அதற்கு முன்பு அச்சடிக்கப்பட்ட King James போன்ற ஆங்கில வேதாகமங்களில் **டைனோசர்** என்னும் வார்த்தை இடம் பெறவில்லை. ஆயினும், வேதாகமம் அதன் பக்கங்களில் டைனோசர் போன்ற விலங்கினங்களைப் பதிவு செய்திருக்கிறது.

யோபு 40 : 15-24 வசனங்களில் **பிகெமோத்** என்னும் விலங்கினத்தைப் பற்றி பார்க்கிறோம். 1. இது பூமியில் மனிதனோடு சேர்ந்து வாழ்ந்திருக்கிறது 2. இது மாட்டைப் போல் புல்லைத் தின்னும். வசனம் 16 அதினுடைய பெலன் அதின் இடுப்பிலும், அதின் வீரியம் அதின் வயிற்றின் நரம்புகளிலும் இருக்கிறது என்று சொல்லுகிறது. வசனம் 17 அதன் வாலை கேதுரு மரத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறது. இம்மரம் சுற்றளவைப் பொறுத்தவரை மற்ற மரங்களைவிட மிகப்பெரியது. பிகெமோத்தின் வால் இப்பூமியில் மிகப்பெரிய விலங்குகளான யானை அல்லது நீர் யானை போன்றவைகளின் வால்களை விட வித்தியாசமானதாகவும் மிகப் பெரியதாகவும் இருந்திருக்கிறது. 18-ஆம் வசனம், அதின் எலும்புகள் கெட்டியான வெண்கலத்தைப் போலவும், அதின் விலா எலும்புகள் இரும்புக் கம்பிகளைப் போலவும் இருக்கிறது என்று குறிப்பிடுகிறது. வசனம் 19 இந்தப் பிகெமோத் தேவனுடைய கிரியைகளில் பிரதானமான கிரியை என்று குறிப்பிடுகிறது. 20 ஆம் வசனம் காட்டு மிருகங்கள் யாவும் விளையாடுகிற மலைகள் அதற்கு மேய்ச்சலை விளைவிக்கும் என்று சொல்லுகிறது. இவ்விலங்கினம் சதுப்பு நிலங்களிலும், ஆறுகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டாலும் கூட பயமில்லாமல் சுற்றித்திரியும்.

மேலும், 23-ஆம் வசனம், இந்த பிகெமோத் இப்பூமியில் வாழ்ந்த இடங்களில் ஒன்றை அடையாளப் படுத்துகின்றது. அது யோர்தான் நதிக்கரையில் வாழ்ந்திருக்கிறது. பிகெமோத் போன்ற பெரிய விலங்கினங்களுக்கான எபிரெய வார்த்தை, பழைய ஏற்பாட்டில் 190 முறை இடம் பெற்றிருக்கிறது. அவைகளில் சில இன்று டைனோசர்களைக் குறிக்கின்றன.

டைனோசர் போன்றே, கடல் பிராணியான **லிவியாதான்** யோபு 41: 1-34 வசனங்களில் இடம்பெற்றிருக்கிறது. இந்த லிவியாதானைப் பழக்கவும் முடியாது, அதை ஒரு செல்லப் பிராணியாக வளர்க்கவும் முடியாது (வசனங்கள் 4,5). பழங்காலத்திலிருந்த வாள், ஈட்டி, கணை, அம்பு, கவண், கவசம் போன்ற எந்த ஆயுதங்களைக் கொண்டும் அதை வெல்ல முடியாதிருந்தது. அது பயமில்லாத ஒன்றாகவும் திகழ்ந்திருக்கிறது (வசனம்33). மனிதர்கள் இந்த லிவியாதானை நெருங்கினால் அது உடனடியாகத் தாக்குதலில் ஈடுபடும் (வசனம் 10). அது ஆழத்தை உலைப்பானையைப் போல் பொங்கப்பண்ணி கடலை தைலம் போல கலக்கிவிடும். அது தனக்குப் பின்னாகப் பாதையைத் துலங்கப் பண்ணும். ஆழமானது வெளுப்பான நுரையைப் போல் விளங்கும். (வசனங்கள் 31, 32).

இது ஒரு மிகப்பெரிய கடல்வாழ் உயிரினமாயிருந்திருக்கிறது. இதற்கு இயற்கையாகவே பாதுகாப்புக் கவசங்கள் இருந்திருக்கின்றன (வசனங்கள்13-17). அது எழும்பும்போது பலசாலிகள் அஞ்சி பயத்தினால் மயங்கித் திகைப்பார்கள் (வசனம் 25). அது இரும்பை வைக்கோலாகவும், வெண்கலத்தை உளுத்த மரமாகவும் என்னும் (வசனம் 27). பிகெமோத் தேவனுடைய கிரியைகளில் மிகப்பெரிய கிரியையாக இருந்தாலும் கூட (யோபு 4:19) லிவியாதான் கடலில் பயங்கரமான ஜீவராசியாக இருந்திருக்கிறது (யோபு 41:9,10, 33,34).

இந்த லிவியாதானைப் பற்றி வேதாகமத்தில் தேவன் விவரித்திருக்கிற காரியங்கள் மனிதனுடைய சிந்தனையைத் தூண்டுகிறது. ஏனென்றால், இன்றைய நாட்களில் லிவியாதானைப் போன்ற ஒரு ஜீவராசி உலகில் இல்லை. இதற்கு வலிமையான கழுத்தும், பயங்கரமான பற்களும் இருந்திருக்கின்றன.

அதின் கீழாகக் கூர்மையான கற்கள் கிடந்தாலும் அது சேற்றின் மேல் ஓடுகிறது போலக் கருக்கானவைகளின் மேலும் ஓடும் (வசனம்30). அதின் கண்கள் அருணோதயத்தின் புருவங்களைப் போல் இருந்தது (வசனம்18). இந்த லிவியாதானைப் பற்றிய வியப்பூட்டும் விவரிப்பு என்னவென்றால், அதின் வாயிலிருந்து அக்கினிப் பொறிகள் பறந்தன என்பதாகும் (வசனங்கள் 18-21). 20ஆம் வசனத்தில் நாம் பார்க்கும் போது கொதிக்கிற சட்டியிலும், கொப்பரையில் இருந்தும் புறப்படுகிறது போல, அதின் நாசிகளிலிருந்து புகை புறப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பழங்கால நாகரீகங்களின் வரலாற்றுச் சுவடுகளில் **பெரிய பல்லி** போன்ற ஜீவராசிகள் நெருப்பைக் கக்கினதைப் பதிவு செய்திருக்கின்றன.

சங்கீதம் 148:7-ல் கடல்வாழ் உயிரினமான மகாமச்சத்தைப் பற்றி விவரிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான எபிரெய வார்த்தை (Tannin) என்பது ஒருமை என்றால், (Tannim) என்பது பன்மை என்றிருக்கிறது. இந்த எபிரெய பதம் பழைய ஏற்பாட்டில் 28 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது, புலம்பல் 4:3-ல் திமிங்கிலங்கள் என்றும், ஆதியாகமம் 1:4-ல் மகாமச்சங்கள் என்றும், சங்கீதம் 74:13-ல் வலுசர்ப்பம் என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

வேதாகமத்திற்கு வெளியே மனித வரலாறும் கூட நாம் இன்று டைனோசர்கள் அல்லது டைனோசர்கள் போன்ற உருவங்கள் இப்பூமியில் உயிர் வாழ்ந்ததாக உறுதி செய்கின்றன. கீழ்க்காணும் சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

1. கி.மு 550–ஆம் காலத்தைச் சேர்ந்த குவலையில் மனிதப்படமும் டைனோசரின் படமும் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மனிதர்களோடு இந்த டைனோசர்களும் வாழ்ந்திருக்கின்றன என்பதையே இது காட்டுகிறது.

2. சுமார் கி.மு 450–ல் பழங்கால வரலாற்று ஆசிரியர் (Herodotus) பறக்கும் பாம்பு போன்ற பிராணியைப் பற்றி எழுதியிருக்கிறார்.

3. 1896–ல் அமெரிக்காவில் அரிசோனா என்னும் இடத்தில் உள்ள ஒரு பள்ளத்தாக்குச் சுவரில் டைனோசர்களை உள்ளடக்கிய மிருகங்களின் சித்திரங்களைக் கண்டுபிடித்தார்.

4. அமெரிக்காவிலுள்ள தேசிய நினைவுச்சின்ன மையத்தில், பழங்கால கற்சிலையில் டைனோசரின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

5. நூற்றுக்கணக்கான வருடங்களாக ஜனங்கள் பெரு நாட்டிலுள்ள ICA நகரில் உள்ள கற்களைக் பொக்கிஷமாகச் சேகரித்துக் கொண்டு வருகிறார்கள். அவைகளில் பல வேறுபட்ட டைனோசர்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கற்களில் டைனோசரின் தோற்றம் அருமையாகப் பொறிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் நடந்த ஒரு தொல்பொருள் ஆராய்ச்சியில் கண்டறியப்பட்ட படிமங்களில் டைனோசரின் தோலின் தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது. அக்கற்கள் கி.பி 500 லிருந்து கி.பி 1500 காலகட்டத்தைச் சேர்ந்தவைகளாகும்.

6. 1944–ல் Waldear Julsru என்பவர் மெக்சிகோவில் டைனோசர்கள் உருவத்திலான அலங்காரச் சிலைகளைக் கண்டுபிடித்தார். கையால் செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான டைனோசர்கள் உருவத்திலான அலங்காரச் சிலைகள் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளில் சில ஐந்து அடி நீளம் உடையவைகள்.

7. 1983–ல் துர்க்மெனிஸ்தான் நாட்டிலுள்ள ஒரு பெரிய பாறையில் மனித கால் தடமும், டைனோசரின் கால்த்தடமும் பதிக்கப்பட்ட ஒரு படிமம் கண்டுபிடிக்கப்பட்டது.

டைனோசர்கள் சிருஷ்டிப்பின் ஆறு நாட்களில் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன (யாத். 20:11). அவைகள் அழிந்து போகும் காலம் வரை இப்பூமியில் நிச்சயமாகவே மனிதனோடு வாழ்ந்திருக்கின்றன. மனிதர்களும், டைனோசர்களும் ஒரே காலகட்டத்தில் இன விருத்தியில் ஈடுபட்டதை வரலாறும், மனிதக் கண்டுபிடிப்புகளும், வேதாகமமும் உறுதிசெய்கின்றன. அது மாத்திரமல்ல, டைனோசர்களின் படம் பொறிக்கப்பட்டுள்ள கற்சிலைகள், அலங்கார மண்சிற்பங்கள் போன்றவைகள் நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பு உண்டாக்கப்பட்டவைகளாக இருந்தாலும், சரி ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு உள்ளாக்கப்பட்டவைகளாக இருந்தாலும், அவைகள் டைனோசர்கள் இப்பூமியில் வாழ்ந்ததற்குச் சான்றுகளாகவே இருக்கின்றன. ✝

நிர்வாக ஆசிரியர் உரை

# பவுலின் மார்ஸ் மேடைப் பிரசங்கம்

## *Paul's Sermon On Mars Hill*

*E.Z.S. Rajanayagam*

**ப**ண்டைய கிரேக்கத்தில் மிக முக்கியமான பட்டணமாக இருந்ததுதான் அத்தனே பட்டணம். பாரம்பரியமிக்க பின்னனி இப்பட்டணத்திற்குச் சொந்தம். உலகில் உள்ள மிக அழகிய பட்டணங்களில் ஒன்றாக அந்நாட்களில் இப்பட்டணம் கருதப்பட்டது. அன்றைய உலகத்தின் கவனத்தை ஈர்த்த சர்வகலா சாலை ஒன்று அந்நாளில் இங்கு இருந்தது. ஆகவே, அறிவாளிகளுக்கு இப்பட்டணத்தில் பஞ்சமில்லை. இன்றைக்கும், புகழ்மணம் வீசிக் கொண்டிருக்கும் சாக்ரடீஸ் போன்ற தத்துவ மேதைகள் இம்மண்ணுக்குச் சொந்தமானவர்களே. கிரேக்கருடைய ஞானம் வேதாகமத்திலும் இடம் பிடித்துவிட்டது (1.கொரி. 1:22). இப்பட்டணத்திலிருந்து 5 மைல் தொலைவில் துறைமுகம் ஒன்று இருந்ததால் வியாபாரத்திலும் சிறந்து விளங்கிற்று. இப்பட்டணத்தைச் சுற்றிலும் புகழ்மிக்க 4 மலைகள் இருந்தது. இதன் இயற்கையழகிற்கு மேலும் மெருகேற்றியது. அத்தோடு புகழ்மிக்க 4 குன்றுகள் இப்பட்டணத்திற்குள் இருந்தது. அவைகளில் ஒன்றுதான் *மார்ஸ் மேடை* ஆகும்.

இந்த மார்ஸ் மேடை ஒரு நியாய ஸ்தலம். இம்மேடை மீது ஏறக்கூடிய பாக்கியம் அந்நாளில் அத்தேனே பட்டணத்தில் வாழ்ந்த அனைவருக்கும் கொடுக்கப்படவில்லை. பட்டணத்தின் **மேன்மை தங்கிய** மக்கள் மட்டுமே அங்கு அடிக்கடி கூடுவார்கள். ஆம், பெரும் பதவிகளில் அமர்ந்து ஆட்சி செய்யும் அரசியல்வாதிகள், முதல் தரமான அரசு அதிகாரிகள், நீதிபதிகள், தத்துவமேதைகள், பெரும் பேச்சாளர்கள் போன்றவர்களுக்குத்தான் இம்மேடை தாரை வார்த்துக் கொடுக்கப்பட்டிருந்தது. சாதாரண ஜனங்களுக்கு மார்ஸ் மேடைப் பக்கம் வேலையே இல்லை. ஆனால், புற ஜாதிகளுக்கு சுவிசேஷம் சொல்ல வேண்டுமென்ற பெருநோக்கோடு தெரிந்தெடுக்கப்பட்ட பவுல், தத்துவ மேதைகள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கனவான்கள், பிரமுகர்கள் அடங்கிய இடத்தில் சொற்பொழிவாற்றும்படியான சிலாக்கியத்தைப் பெற்றார்.

இவ்வளவு சிறப்புகள் பெற்ற பிரசங்கத்தில், பவுலடியார் அத்தேனரின் மூட நம்பிக்கைகள், உண்மையான தேவன், மனந்திரும்புதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், வரப்போகும் நியாயத்தீர்ப்பு ஆகியவைகள் பற்றியே பேசுகிறார்.

சரி, இம்மார்ஸ் மேடைப் பிரசங்கத்திலிருந்து நாம் இப்பொழுது சில பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். அவைகளைக் கவனிப்போம்.

**I. பவுலின் ஊழிய வாஞ்சை, வைராக்கியம் [வசனம் 16,17]**

பவுலடியார் அத்தேனே பட்டணத்திற்கு வருமுன் தெசலோனிக்கே, பெரோயா பட்டணங்களில், பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் ஊழியம் செய்தார். பெரோயா பட்டணத்திலிருந்த கலகக் கும்பலிடம் சிக்காமல், பவுலை உயிரோடே அனுப்பிவிடுவது அப்பட்டணத்தாருக்குப் பெரும்பாடாகிவிட்டது. சமுத்திர வழியாய் அவரை அனுப்பி விடுகிறார்கள் (வச.15). ஆனால், அப்பொழுது ஏற்பட்ட அமளி துமளியில் தீமோத்தேயுவும், சீலாவும் அங்கேயே தங்க நேர்ந்துவிட்டது. தீமோத்தேயுவும், சீலாவும் தன்னிடத்தில் சீக்கிரமாய் வரவேண்டுமென்று கட்டளை கொடுத்து, அவர்கள் வருகைக்காக அத்தேனே பட்டணத்தில் காத்துக் கொண்டிருந்தார். அந்தக் காத்திருப்பு நாட்களை அத்தேனரின் ஆன்மீக நிலையை அறிந்து கொள்ள விரும்பிப் பட்டணத்தை வலம் வருகிறார்.

பவுலடியார் ஆதாயத்திற்காக ஆத்துமபாரம் உள்ளதைப் போல் காட்டிக் கொண்ட பிரசங்கி அல்ல. யாராவது நோட்டீசில் பெயர் போட்டு, மேடை அமைத்து அழைக்கட்டும், பிறகு பிரசங்கிக்கலாம் என்று காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கவில்லை. மாறாக, விக்கிரக வணக்கத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் ஆத்துமாக்களை எப்படி விடுவிப்பது என்பதுதான் அவருடைய பேச்சும், மூச்சுமாக இருந்தது. ஆகவே தான், ஜெப ஆலயங்களிலும், சந்தை வெளிகளில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணை செய்தார். ஆனால், பிரசங்கிகளே! கிறிஸ்தவர்களே! நம்முடைய நிலை என்ன? பவுலுக்கிருந்த ஊழிய வாஞ்சை யும் வைராக்கியமும் நமக்கு உண்டா? சிந்திப்போம்.

**II. ஜனங்கள் எல்லா சமயத்திலும் சரியாகப் புரிந்துகொள்வதில்லை [வசனம் 18]**

ஆத்தும பாரத்தால் நிறைந்து பவுல் பேசின காரியங்களை அத்தேனரால் புரிந்து கொள்ள முடியவில்லை. பவுலுடைய காலந்தொட்டு இன்று வரை அநேக காரியங்களில் பெரும் முன்னேற்றம் கண்டிருக்கும் மானிடம், சத்தியத்திற்கான அணுகுமுறையில் மட்டும் ஒரு அடி கூட முன்னேறாமல் அப்படியே சிலைபோல் நின்றுகொண்டிருக்கிறது. எப்பிக்கூரரும், ஸ்தோயிக்கருமான ஞானிகளால் கூட பவுல் பேசியதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. வாயாடியாகவும், அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகவும், நூதனமான காரியங்களைப் பேசுகிறவனாகவும் பவுல் அவர்கள் பார்வைக்குக் காணப்பட்டான்.

ஆனால், அதற்காக நாம் சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. பவுல் மனம் தளர்ந்து விடவில்லை. உறுதி குன்றி, நிலை குலைந்து போய்விடவில்லை. வாஞ்சையோடும், வைராக்கியத்தோடும் ஊழியத்தைத் தொடர்ந்தார். வெற்றியும் பெற்றார். நாமும் தூய சத்தியத்தையும், கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த ஒரே சபை பற்றியும், இன்னும் வேதம் வெளிச்சம் போட்டுக் காட்டும் ஏனைய உபதேசங்கள் குறித்தும் தொடர்ந்து போதிப்போம், வெற்றி பெறுவோம்.

**III. அறிந்ததிலிருந்து அறியாததைச் சொல்கிறார். வசனம். [22-23]**

எதிர்மறை உபதேசத்தைத் தவிர்த்த ஓர் அணுகுமுறையை இப்பிரசங்கத்தில் நாம் காணலாம். அவர்களுடைய மத நம்பிக்கையை, தேவ பக்தியை மெச்சுகிறார். ஒருவேளை, அது மூட நம்பிக்கையாகக் கூட இருந்திருக்கலாம். இருப்பினும், அவர்களுக்கு என்ன இருந்ததோ அதையே முதலீடாக வைத்து காரியத்தைச் சாதிக்க முயற்சி செய்கிறார்.

நீங்கள் இதுகாறும் ஏறெடுத்த ஆராதனைகள் தவறு என்று நேரிடையாகக் குற்றம் சாட்டி கூண்டில் ஏற்றி, நீங்கள் பாவிகள் என்று அவசர கோலத்தில் தீர்ப்பளிக்காமல், நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே உங்களுக்கு அறிவிக்கிறேன் என்று மெல்லத் தன்னருகில் இழுத்து வருகிறார். அவர்களுக்குள்ளாக இருந்த பக்தியை, மெய்யான தேவ வணக்கத்திற்கு மாற்றப் பாடுபடுகிறார்.

புதிய ஏற்பாட்டில் கர்த்தரை ஏற்றுக்கொண்ட பெரும்பாலோர் மத நம்பிக்கையுள்ளவர்களாகவே இருந்தனர். ஆனால், தவறான நம்பிக்கையில் சிக்கியிருந்தார்கள். அப் . 2-ம் அதிகாரத்தில் நாம் பார்க்கும் யூதர்கள் மத நம்பிக்கையுடையவர்கள்தான். அப். 8 -ல் சமாரியர்களும், எத்தியோப்பிய மந்திரியும் மத நம்பிக்கை கொண்டவர்களே. அப். 10-ம் அதிகாரத்தில் நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியுவைப் பற்றி நாம் சொல்லவே வேண்டாம். தேவையானால் இப்பட்டியலை நீட்டிக்கொண்டே போகமுடியும். இவர்களின் மத நம்பிக்கைகள் சரியான அடிப்படையில் இல்லாதிருந்ததால், ஜீவ மார்க்கத்தை அவர்களுக்குக் காட்ட வேண்டியிருந்தது. அவர்களும் மெய்யான உபதேசத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

**IV. பிரசங்கத்தின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறார் வசனம் 30**

*அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்* என எச்சரிக்கிறார். இந்நாள் வரை நீங்கள் செய்தது சரி, இனி சாக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. முடிவெடுக்க வேண்டிய தருணத்திற்கு வந்து விட்டீர்கள் என்று அவர்களை நெருக்குகிறார். மணிக்கணக்காக, அழகாகப் பிரசங்கித்து இறுதியில் கேட்கின்ற மக்கள் என்ன செய்ய வேண்டு மென்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லாமலே அநேகப் பிரசங்கிகள் நழுவி விடுவர். ஒருவேளை சொல்வதை அநேகர் விரும்பாவிட்டால் அடுத்தமுறை வரமாட்டார்களோ என்ற பயம். ஆனால், பவுலோ மனந்திரும்புங்கள் என்று எச்சரிக்கிறார்.

மனந்திரும்புங்கள் என்று சொல்வதற்கு முன்னால் *கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார் ; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே என்றும் சொல்கிறார்* (வசனம் 27). மெய்யான தேவனைக் கண்டுபிடிப்பது கொஞ்சம் சிரமம் தான். ஆனால், அது முடியாத காரியம் அல்ல என்பது தான் அதன் பொருள். அதைப் போலவே, மெய்யான சபையைக் கண்டுபிடிப்பதும், தெருவுக்கு ஒன்றாக உள்ள இத்தனை சபைகளில் உண்மை எது என்று கண்டுபிடிப்பதும் இந்நாட்களில் கொஞ்சம் சிரமமே. ஆனால், முடியாது என்று ஒருவராலும் சொல்ல முடியாது. ஆம், முடியாது என்று சொல்வோமானால் நாம் வேத வாக்கியங்களைப் பொய்யாக்குகிறோம்.

அருமையான வாசகரே! எல்லாப் பிரசங்கத்தைப் போல, இந்த மார்ஸ் மேடைப் பிரசங்கத்தையும் அற்பாக எண்ணப் போகிறோமா? வேண்டாம். நாட்களை வீணாகக் கழித்தது போதும். மெய்யான தேவனைக் கண்டு கொள்வோம். மெய்யான சபையை அடையாளம் காண்போம், மனந்திரும்புவோம், இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வோம், நியாயத்தீர்ப்பிற்கு ஆயத்தமாவோம், மறுமையை சுதந்தரிப்போம். ✞

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| டைனோசர்கள் உண்மையாகவே... | Louis Rushmore | ...1 |
| பவுலின் மார்ஸ் மேடைப்பிரசங்கம் | E.Z.S. Rajanayagam | ...4 |
| தகப்பனாகிய ஆபிரகாமின்... | Jerry Bates | ...9 |
| சிலருக்கு நரகம் சம்பந்தமான... | Byron Nichols | ...13 |
| கர்த்தருடைய ஜெபம்... | J.C. Choate | ...16 |
| ஆவிக்குரிய சுதந்திரம்... | P.C. Philemon Rajah | ...20 |
| கிறிஸ்து இயேசுவுக்குள்... | B. Arjunan | ...25 |
| ஏன் முடியவில்லை ?... | E.Z. Selvanayagam | ...29 |
| இரண்டில் ஒன்று... | Benny Martin | ...31 |
| **தேவன்** | **God** | |
| கெத்சமனே தோட்டத்தை... | Ardron Hinton | ...34 |
| அளவில்லா ஞானமுள்ள... | Wayne Jackson | ...35 |
| இயேசுவும், பெண்களும் | Tom Kelton | ...38 |
| **சாட்சியங்கள்** | **Evidences** | |
| தேவன், வேதாகமம் மற்றும்... | Travis L.Quertemous | ... 41 |
| அவருக்குள் ஜீவன் ... | Stanley E. Sayers | ...42 |
| வெளிச்சம் உண்டாக்க கடவது | Wayne Jackson | ...44 |
| **தேவனுடைய வார்த்தை** | **The Word Of God** | |
| வேதாகமம் | N.B. Hardeman | ... 45 |
| நீங்கள் புரிந்து கொள்ளத்தக்கதாக... | Rod Kyle | ... 47 |
| தன்னிகரில்லா புத்தகம் | Grady Miller | ... 49 |
| வசன ஆராய்ச்சி | Jery Bates | ...51 |
| **இரட்சிப்பு** | **Salvation** | |
| கர்த்தருடைய நாள்... | Wyne Barrier | ... 54 |
| நீங்கள் எந்த நுகத்தை... | Danny Boggs | ... 56 |
| ஒரு நாத்திகத்தின் விசுவாசத்தில்... | Bill Dillon | ... 58 |
| **சபை** | **The Church** | |
| சபை தேவனுக்கான... | Ronald D. Bryant | ... 59 |
| இத்தலைமுறைக்கான... | Rick Cumingham | ... 60 |

| | | |
|---|---|---|
| தெய்வீகச் சூழல் | Perry. N. Hall | ... 61 |
| என் குடும்பம்... | David Deffenbaugh | ... 63 |
| **வாழ்வதற்கான உபதேசம்** | **Doctrine to Live by** | |
| தேவனுடைய குடும்பத்தில்... | | ... 64 |
| தேவ தூதர்கள் | Allan Turner | ... 65 |
| பக்தி வரலாற்றில்... | Wes Mc Adams | ... 67 |
| விலையேறப்பெற்ற விசுவாசம் | O.P. Baird | ... 70 |
| **செயலில் கிறிஸ்தவம்** | **Christianity in Action** | |
| பிரதான கட்டளையா... | Jerry A.Jenkins | ... 72 |
| **ஆராதனை** | **Worship** | |
| மறக்கப்பட்ட செயல் | Time For Lines | ... 74 |
| நீங்கள் விரும்பியபடி... | Hugo Mecord | ... 76 |
| நீங்கள் கவனித்திருக்கிறீர்களா ? | Dalton Key | ... 79 |
| **அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை** | **Daily Christian living** | |
| பவுலின் வாழ்க்கையில் நான்... | Rebecca Rushmore | ... 80 |
| கிறிஸ்தவப் பெண்மையின்... | Jimmy Jividen | ... 81 |
| ஈவும், அதைக் கொடுத்தவரும் | Rex Banks | ... 83 |
| இந்த வாரத்தில் நீங்கள்... | Mark Ray | ... 85 |
| ஊழியப்பணியில் ஒரு... | Frank Chesser | ... 86 |
| மேகம் போன்ற இத்தனை... | Tim Nichols | ... 89 |
| உக்கிரானத்துவத்தின் பரிபூரண... | Demer Elam | ... 92 |
| தேவனுக்கு முதலிடம் கொடுத்து... | Marilyn Lastrap | ... 95 |
| பவுலின் வாழ்க்கையில் நான்... | Rebecca Rushmore | ... 97 |
| **கிறிஸ்தவ இல்லம்** | **The Christian Home** | |
| குழந்தையில்லா வீடு ... | Brod Harrub | ... 98 |
| விவாகம் எதை உள்ளடக்கியது? | Ian Mcpherson | ... 100 |
| ஆத்துமாவின் அளவீடு | | ... 103 |
| **வசனப்பகுதி பாடங்கள்** | **Textual Studies** | |
| நீங்கள் வாழ... | Neal Pollard | ... 104 |
| பரிசேயர்களின் நீதி | | ... 106 |
| அன்பின் வாழ்க்கை | Demar Elam | ... 107 |



# தகப்பனாகிய ஆபிரகாமின் விசுவாசம்

## THE FAITH OF FATHER ABRAHAM

Jerry Bates

**த**ற்கால மார்க்க உலகில் விசுவாசத்தைப் பற்றி நாம் அதிகமாகக் கேள்விப்படுகிறோம். அநேகருடைய கூற்று ஒருவர் விசுவாசத்தினாலே மாத்திரம் இரட்சிக் கப்படுகிறார் என்பதாகும். இன்னும் சிலர், தங்களுக்குள்ளே விசுவாசம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ரோமர் நான்காம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் ஒருவர் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அவர் விசுவாசிக்க வேண்டுமென்று சொல்லுகிறார். அதற்கு உதாரணமாக, அவர் ஆபிரகாமை மேற்கோள் காட்டுகிறார். நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களுக்கு அவர்கள் விருத்தசேதனம் பெற்றவர்களாக இருந்தாலும் சரி விருத்தசேதனம் பெறாதவர்களாக இருந்தாலும் சரி அதாவது, யூதர்களாக இருந்தாலும், புறஜாதிகளாக இருந்தாலும் அவர்களுக்கு ஆபிரகாம் தகப்பனாக இருக்கிறார் என்று பவுல் குறிப்பிடுகிறார். ஆபிரகாமுக்கு எப்படிப்பட்டதான விசுவாசம் இருந்ததோ, அதே விதமான விசுவாசம் நமக்கிருந்தால் அது நம்மை இரட்சிக்கும். அவர் செய்தபடியே நாமும் செய்து விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும்.

### உறுதியான விசுவாசம் ஆபிரகாமுக்குள் இருந்தது

ஆபிரகாமின் விசுவாசம் தேவன்மீது இருந்ததை நாம் கவனிக்க வேண்டும். ரோமர் 4:17 ல் ஆபிரகாம், தேவன் மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவர் என்று விசுவாசித்தார். அநேகமாக, வயது சென்று, கர்ப்பம் செத்துப்போன சாராளிடமிருந்து கூட ஈசாக்கை பிறப்பிக்கச் செய்ய தேவனால் முடியும் என்பதை மனதில் வைத்துத்தான் அவர் இப்படி விசுவாசித்திருக்க வேண்டும். ஆனால், ஆபிரகாம் அதற்கு முன்பு தேவனுடைய எந்தவொரு அற்புதத்தையும் காணாமல், இப்படி தேவனை விசுவாசித்தது நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. மேலும், ஆபிரகாமிடம் உன்னை ஒரு மாபெரும் தேசத்துக்குத் தகப்பனாக்குவேன் என்று தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை ஆபிரகாம் அப்படியே விசுவாசித்தார். தேவன் இது நடக்கும் என்று சொன்னால் அது

எவ்வித தங்குதடையுமின்றி அப்படியே நடக்கும் என்பதை நாமும் விசுவாசிக்க வேண்டும்.

**உங்கள் விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கிறது ?**

அநேகர் தங்களுக்குள் விசுவாசம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், அவர்களுடைய விசுவாசம் எதன் மீது இருக்கிறது? சிலர், தங்களிலும், தங்கள் உடமைகளிலும் விசுவாசம் வைக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தாங்கள் ஒழுக்கமான வாழ்க்கை வாழ்கிறதினாலும், நல்லவர்களாக இருப்பதினாலும் இரட்சிக்கப்படுவதாக நம்பிக்கை கொள்கிறார்கள். வேறு சிலர், மத சம்பந்தமான காரியங்களிலே நம்பிக்கை வைக்கிறார்கள். அதாவது, எந்த மதத்தைப் பின்பற்றுகிறார்களோ அதிலே உண்மையுள்ளவர்களாயிருக்கிறபடியால் அதுவே போதுமானதென்று நினைக்கிறார்கள். இன்னும் சிலர், ஏதோ ஒரு காரியத்தில் நம்பிக்கை வைக்கிறார்கள். குறிப்பாக, ஞானஸ்நானம் பெறுதல், ஞாயிற்றுக்கிழமை சபைக்குப் போதல் போன்ற காரியங்களைச் செய்வதால் நிச்சயம் பரலோகம் போகமுடியுமென்று விசுவாசிக்கிறார்கள். இவைகள் எல்லாவற்றிலும் நம்முடைய விசுவாசம் தேவன் மீதும் அவருடைய குமாரனுடைய சபையின் மீதும் இருக்க வேண்டும். இதிலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்தெழுதலை விசுவாசிப்பதும், பரிசுத்த ஆவியானவரால் இன்றளவும் வழிநடத்தப்படுகிறோம் என்பதும் உள்ளடக்கம் (ரோமர் 4:24;8:26).

**ஆபிரகாமின் விசுவாசம் தேவனுடைய வல்லமையின் மீது இருந்தது**

**உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை: அவன் ஏறக்குறைய நூறு வயதுள்ளவளாயிருக்கும் போது தன் சரீரம் செத்துப்போனதையும் சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான்** என்று ரோமர் 4:18,19 - ல் வாசிக்கிறோம். ஆபிரகாம் குழந்தைக்காக ஏங்கிக் கொண்டிருந்தாலும் சரீரப்பிரகாரமாக அது சாத்தியமில்லை என்பதை அறிந்தே இருந்தார். அப்படிப்பட்ட நிலையிலும் அவருக்கு ஒரு குமாரனைக் கொடுப்பதாக தேவன் வாக்குதத்தம் பண்ணினார். அவர் வார்த்தையின்படியே ஆபிரகாம் விசுவாசத்தோடே காத்திருந்தார். அந்த ஆணித்தரமான விசுவாசத்திற்கு ஆதாரம் என்ன? அது, தேவனுடைய வல்லமையின் மேல் அவருக்கிருந்த உறுதிப்பாடேயல்லாமல் வேறொன்றுமில்லை. அப்படிப்பட்ட விசுவாசத்தைதான் தேவன் இன்றும் நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

சிலருக்கு இது நியாயமற்றதாகவும், பகுத்தறிவற்றதாகவும் இருக்கும். ஆகவே, இன்று கிறிஸ்தவர்கள் உண்மையை எதிர்கொள்ள மறுக்கிறார்கள் அல்லது நடைமுறைக்கு அப்பால் இருக்கிறார்கள் என்றும், இது குருட்டு நம்பிக்கை என்னும் விளைவுகளைப் பற்றிய கவலைப்படாத செயல்பாடு என்றும் சிலர் குற்றம் சாட்டுகிறார்கள். இருந்தபோதிலும், ஆபிரகாம்

இக்காரியங்களில் உண்மைகளை எதிர்கொள்ள மறுக்கவில்லை, நடை முறைக்கு அப்பாலும் இருக்கவில்லை. தன்னுடைய சரீரம் பிள்ளை பெறுவதற்கு ஏற்றதாக இல்லை என்பதை ஆபிரகாம் நன்றாகவே அறிந்திருந்தார். அதே நேரத்தில் தேவனுடைய மகத்துவமான வல்லமையையும் நன்கு அறிந்திருந்தார். எப்படியெனில், சரீரப்பிரகாரமாக தனக்கு குழந்தை பாக்கியம் இல்லை என்பதை அவர் அறிந்திருந்தாலும் அதைத் தனக்கு தேவனால் தரக்கூடும் என்ற விசுவாசத்தில் உறுதியாக இருந்தார். வேறுவிதமாகச் சொன்னால், தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதில் அவர் உறுதியான விசுவாசம் கொண்டிருந்தார் (லூக்கா 1:37).

**உங்களுக்குள்ளே இப்படிப்பட்ட விசுவாசம் இருக்க வேண்டும்**

வேதாகமத்தில் உள்ள அற்புதங்களையும், இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் சிலர் விசுவாசிக்க மறுக்கிறார்கள். அவைகள் அசாத்தியமானவைகள் என்றுஎண்ணிக்கொண்டே, தாங்கள் தேவனோடிருப்பதாகவும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுடைய விசுவாசம் தகப்பனாகிய ஆபிரகாமின் விசுவாசத்தைப் போன்றதல்ல. ஆனால், நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளைக் கண்டு கொள்ளாமல் இருக்கக்கூடாது. மேலும், அவைகளால் நாம் அச்சுறுத்தப்படவும், மேற்கொள்ளப்படவும் கூடாது. ஏனென்றால், நம் தேவன் பிரச்சனைகளை மேற்கொள்ளும் திராணியை நமக்கு கொடுக்க வல்லவர். அப்படிப்பட்ட விசுவாசத்தை உடையவரான ஆபிரகாமின் விசுவாச அறிவு நமக்குப் புலப்படாத ஒன்றாக இருந்தபோதிலும், தேவனுடைய வாக்குத்தத்தத்தை அப்படியே விசுவாசித்தார். ஆனால், இன்று பலர் தங்களால் காரணகாரியங்களைக் கண்டறிய முடியவில்லை என்று கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

கடைசியாக, ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களின்மீது, தான் கொண்டிருந்த விசுவாசத்தில் அசையாத நம்பிக்கையுடையவராயிருந்தார். **தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாக நம்பி, தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான்** (ரோமர்4:20). தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்பதை ஆபிரகாம் நன்றாக அறிந்திருந்தார். இப்படி விசுவாசிப்பது கடினமான காரியமாகும். ஏனென்றால், தேவனுடைய வாக்குத்தத்தத்திற்கும், ஈசாக்கின் பிறப்பிற்கும் இடையே இருபத்தைந்து வருடங்கள் ஆனது. அதுவரை ஆபிரகாம் தன் விசுவாசத்தில் அசையாதவராக இருந்தார். எப்படியெனில், அவர் தன்னுடைய விசுவாசக் கண்களைத் தேவனிடத்திலிருந்து ஒருபோதும் விலக்கவேயில்லை. ஒருவேளை அவருடைய மனதிற்குள் ஏதாவது கேள்விகள் எழுப்பியிருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யாமல், தொடர்ந்து தேவனைத் தொழுது கொள்வதன் மூலம், தேவனை மகிமைப்படுத்தினார்.

ரோமர் 1:21 –ன் படியாக தேவனை அறிந்தவர்களென்று சொல்லியும் தேவனை மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்தரியாமலும் இருந்த மனிதர்களைப் போலல்லாமல் அவர் முற்றிலும் மாறுபட்டவராக இருந்தார்.

**தேவனுடைய வாக்குத்தத்தங்களில் உறுதியான விசுவாசம் இருக்க வேண்டும்**

அவர் நம்மை பராமரிப்பதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (மத். 6:33). இவ் வாக்குத்தத்தத்தில் உறுதியில்லாத பலர், தங்கள் வங்கிக் கணக்குகளின் மீதும், ஆஸ்திகளின் மீதும் தான் அதிக நம்பிக்கை வைக்கின்றனர். இன்னும் சிலர், தாங்கள் விரும்பிய ஆசீர்வாதங்கள் தேவனிடத்திலிருந்து கிடைக்காதபடியினால், தாங்கள் தேவனுக்குப் பிரியமாயிருந்தும் சோதனை வந்து விட்டதே என்று எண்ணி விசுவாசத்தைவிட்டு விலகிச் சென்றுவிடுகிறார்கள். ஆகவே, ஆபிரகாமின் விசுவாசம் இப்படிப்பட்டவர்களின் விசுவாசத்தோடு ஒப்பிடவே முடியாதபடி மிக உறுதியான விசுவாசமாயிருக்கிறது என்றால் அது மிகையல்ல.

இங்கே, நாம் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான காரியம், ஆபிரகாமின் விசுவாசம் தேவன் சொன்ன வார்த்தைகளில் இருந்ததே தவிர, தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புகளில் இருக்கவில்லை என்பதாகும். ஆகவே, தேவன் மீதான நம்முடைய விசுவாசம் வேதமாத்திலுள்ள தேவனுடைய வார்த்தைகளையே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஆனால், இன்று பலருடைய விசுவாசம், தேவனுடைய வார்த்தைகளில் இல்லாமல் தாங்கள் எதை விரும்புகிறார்களோ, நினைக்கிறார்களோ அதில்தான் உள்ளது. **கர்த்தர் சொல்லுகிறார்** என்ற வார்த்தை பலருக்கு எட்டியாகவே இருக்கிறது.

**ஆபிரகாமின் விசுவாசத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் காரியங்கள்**

ஆபிரகாம், விசுவாசத்தினால் எப்படி இரட்சிக்கப்பட்டாரோ, அதேபோல, நாமும் விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட முடியும். அதற்கு நம்முடைய விசுவாசம் ஆபிரகாமின் விசுவாசத்தைப் போலிருக்கவேண்டும். ஆபிரகாமுக்கு தேவனுடைய வல்லமையின் மீதும், வாக்குத்தத்தங்களின் மீதும் இருந்த உறுதியான விசுவாசத்தின் விளைவுதான், தேவன் கட்டளையிட்டபடியெல்லாம் செய்ய அவரைத் தூண்டியது. மேலும், அவர் தன்னுடைய விசுவாசத்தை வெறும் வார்த்தைகளில் வெளிப்படுத்தாமல், தான் எதை விசுவாசித்தாரோ அதற்காகத் தன்னுடைய வாழ்க்கையையே கொடுத்து, தேவன் என்ன சொன்னாரோ அதை அப்படியே செய்து, தன்னை முழுவதுமாக தேவனுக்கு அர்ப்பணித்தார். நாமும் நம்முடைய வாழ்க்கையில் ஆபிரகாமின் விசுவாசத்தைப் பின்பற்றி தேவனுடைய வார்த்தையின்படியே செய்கிறவர்களாயிருப்போம். நாம் நம்முடைய விசுவாசத்தை மனந்திரும்புதலிலும், அறிக்கையிடுவதிலும் வெளிப்படுத்தி ஞானஸ்தானத்தின் வாயிலாக கிறிஸ்துவுடனே கூட இணைக்கப்படுவோம் (ரோமர் 6:3-6). **நீ மரண பிரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்** (வெளி.2:10) என்று வாக்குத்தத்தம் செய்த கர்த்தரின் வாக்கை அப்படியே விசுவாசிக்கும் செயல் வீரர்களாகச், செயல்பட்டு பரம வாழ்வுக்கு பங்குள்ளவர்களாக மாறுவோம். ✞



# சிலருக்கு நரகம் சம்பந்தமான தெளிவு தேவை

# Some Needed Clarity Regarding Hell

Byron Nichols

மத உலகில் உள்ளவர்களில் கணிசமான பேர் நரகம் உண்மையானது என்னும் கருத்தைச் சந்தேகிப்பது மாத்திரமல்ல, அதை வெளிப்படையாக நிராகரிப்பதும் நாளுக்குநாள் அதிகரிக்கின்றது. இப்படிப்பட்டவர்களில் சிலர், மதப்பிரிவுகளின் தலைவர்களாகவும் இருப்பதுதான் வேதனையாக உள்ளது. இன்றும் சிலர் நரகம் இருப்பதை ஏற்றுக்கொண்டாலும் கூட, அது நியாயமானது என்பதை நம்ப மறுக்கிறார்கள். முக்கியத்துவம் வாய்ந்த இந்த நம்பிக்கை குறித்து தேவனுடைய வார்த்தைகள் என்ன சொல்லுகிறது. என்பதை நாம் எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும்.

**நரகம் இல்லை – மக்கள் விரும்பத்தக்க ஒரு உபதேசம்**

வேதாகமத்தில் நரகம் என்னும் ஓர் இடத்தைப் பற்றிக் குறிப்பிடவே இல்லை. அந்த வேதனை ஸ்தலத்திற்கு ஆதாரமே இல்லை என்னும் நிலை இருந்தால் நிச்சயமாக அது மக்கள் விரும்புகிறதாக இருக்கும். அப்படித்தானே? இருந்தபோதிலும், அநேகரின் பக்கமாக நாம் சாய்வதற்கு முன்பாக, அதைப்பற்றி வேதவாக்கியங்கள் நமக்கு என்ன வெளிப்படுத்தியிருக்கின்றன என்பதை நாம் திரும்பிப் பார்க்கவேண்டும். ஏனென்றால், இக்காரியத்தை நாம் எளிதில் எடுத்துக் கொள்ள வேண்டுமா? அல்லது அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமா? என்பதற்கு இது அதிகப் பிரயோஜனமாயிருக்கும்.

நரகம் என்பது நிச்சயம் என்று பேசும் வேதாகமம், பாதாளத்தைப் பற்றியும் பேசுகிறது. நரகம், பாதாளம் ஆகிய இரண்டும் ஒரே இடத்தைக் குறிக்கிறது என்று நினைக்கிறார்கள். ஆனால், அது சரியான கண்ணோட்டமல்ல. இவ்விரு இடங்களுமே வித்தியாசமானவைகள். புதிய ஏற்பாட்டில், பாதாளம் என்பது, துன்மார்க்கருடைய ஆத்துமாக்கள் நியாயத்தீர்ப்பிற்கு முன்பாக வேதனைப்படும் ஓர் இடமாக இருக்கிறது. இது நரகத்திலிருந்து வேறுபட்ட இடமாகும்.

## பரலோகம் மற்றும் நரகத்தின் காலம்

இழந்துபோனவர்கள், அவிசுவாசிகள் மற்றும் உண்மையில்லாதவர்களின் தண்டனைக் காலம் ஒரு குறுகிய காலத்தை உள்ளடக்கியது என்றும், தண்டனை என்பது ஒட்டுமொத்த அழிவு வடிவத்தில்தான் இருக்கும் என்றும் நினைக்கிறார்கள். இந்த எண்ணம் வேத வாக்கியங்கள் நரகத்தின் தண்டனைக் காலம் பற்றி போதிப்பதற்கு முற்றிலும் முரண்பாடானதாகும். வேதாகமம், நரகத்தின் தன்மையைப் பற்றிச் சொல்லும்போது, நித்தியம் என்னும் வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறது. இதன் பொருள், முடிவேயில்லாமல் என்றென்றும் நிலைத்திருப்பது என்பதாகும். மத்தேயு 5:41-ல் நியாயத்தீர்ப்பு நாளில் இயேசு கிறிஸ்து துன்மார்க்கரைப் பார்த்துச் சொல்லும்போது, நரகத்தின் தன்மையை இவ்விதமாகக் காட்டுகிறார். **சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்** என்று சொல்லுகிறார்.

இதேபோல் யோவான் ஆசிரியர் நரகத்தின் தன்மை பற்றி எழுதும்போது **அவர்களுடைய வாதையின் புகை சதா காலங்களிலும் எழும்பும்** என்று எழுதுகிறார் (வெளி.14:11). நமது இரட்சகராகிய இயேசு கிறுஸ்து பரலோகம் மற்றும் நரகத்தின் கால அளவைப் பற்றி விவரிக்கும்போது, *அந்தப்படி* **அவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்** என்றார் (மத்தேயு 25:46). நீதிமான்கள் பரலோகத்தில் எப்படி நித்தியகாலமாக வாழ்வார்களோ அதேபோல் துர்மார்க்கரும் நரகத்திலே நித்தியமாகத் தங்கள் காலத்தைக் கழிப்பார்கள்.

## யாருக்கு நரகம் பற்றிய பாடம் தேவை?

◊ **தேவனை அறியாதவர்களுக்கும் சுவிஷேத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு**

★ தேவனை அறியாதவர்களும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிஷேத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும் (2 தெச .1:7,8).

◊ **தேவனை அறிந்தும் உபதேசத்திற்குக் கீழ்படியாதவர்களுக்கு**

★ இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கிடவன் (1 கொரி.10:12).

★ முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மத். 10:22).

★ மரணபரியந்தம் உண்மையாயிரு அப்பொழுது உனக்கு ஜீவகிரீடத்தைத் தருவேன் (வெளி.2:10)

## நரகம் பற்றி சுருக்கமாகப் பார்ப்போம்

★ பாதாளம் என்றழைக்கிற இடத்தில் மரித்தவர்களெல்லாரும் நியாயத்தீர்ப்பு வரை தற்காலிகமாகக் காத்திருப்பார்கள்.

★ நரகம் என்றழைக்கிற இடம் உண்டு, இது நித்தியமானது. இது ஒரு போதும் தண்டனை தீராத இடமாகவே இருக்கும். இந்த இடம் தேவனை நிராகரித்தவர்கள் மற்றும் தேவனிடத்திலிருந்து விழுந்துபோனவர்களால் நிரப்பப்பட்டிருக்கும்.

★ இன்னொரு இடத்தைப்பற்றி அழகாக பரலோகம் என்றழைக்கிறது. இந்த இடத்திற்குத் தான் அநேகர் போக விரும்புவார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து சொல்லும்போது அதில் சிலர் தான் பிரவேசிப்பார்கள் என்றார். ஏனென்றால், அநேகர் சுவிசேத்திற்குக் கீழ்ப்படிந்து தேவ சித்தத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்க விருப்பமில்லாதவர்களாக இருக்கிறார்கள்.

★ நாம் ஒவ்வொருவரும் பரலோகத்திலா, நரகத்திலா, எந்த இடத்தில் என்றென்றும் வாசம் செய்ய வேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டும். பரலோகம் நம் விருப்பமாக இருந்தால் மிக ஜாக்கிரதையாக அதற்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்ய வேண்டும். ✞

---

## யாரை, எப்படி சீர்பொருந்தப்பண்ண வேண்டும்?

**குற்றத்தில் அகப்படுகிறவர்களைச் சீர்பொருந்தப்பண்ண வேண்டும்**
**(கலாத்தியர் 6:1, மத்தேயு 18:15–17)**

**சாந்தமுள்ள ஆவியோடு சீர்பொருந்தப்பண்ண வேண்டும்**
**(கலாத்தியர் 6:1)**

**இதன் மூலம் கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்ற முடியும்**
**(கலாத்தியர் 6:2)**

## இரட்சிக்கப்பட்டவர்கள்

**இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் இருக்கிறார்கள்**
**(அப்போஸ்தலர் 2:47; கொலோ. 1:13)**

**இரட்சிக்கப்பட்டவர்கள் பரிசுத்தமானவர்களாயிருக்கிறார்கள்**
**(1பேதுரு 1:22; 1கொரி. 6:11)**

**இரட்சிக்கப்பட்டவர்கள் பரிசுத்தமானவர்களாயிருக்க வேண்டும்**
**(1 பேதுரு 1:15,16)**

# கர்த்தருடைய ஜெபம்

## The Lord's Prayer

*J.C. Choate*



**கி**றிஸ்துவை விசுவாசிப்பவர்களில் பெரும்பாலானோர் **கர்த்தருடைய ஜெபம்** பற்றி பேசுகிறார்கள். அதுமாத்திரமல்ல, தங்கள் ஆராதனைகளில் அதைச் சொல்லுகிறார்கள், சில இடங்களில் பாடவும் செய்கிறார்கள். இப்படிக் கர்த்தருடைய ஜெபத்தை பயன்படுத்தாதவர்கள் கேள்வி கேட்கப்படுவதோடு, விமர்சனத்திற்கும் உள்ளாகிறார்கள்.

**கர்த்தருடைய ஜெபம்** என்று குறிப்பிடப்படுகிற ஜெபம், மத்தேயு 6–ஆம் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. அங்கே இயேசு தம்முடைய சீடர்களிடம் இவ்விதமாகச் சொன்னார். **நீங்கள் ஜெபம் பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்தில் செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக.**

**எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும் ; ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே ஆமென்** என்பதே (மத்தேயு 6: 9-13).

இந்த ஜெபம் பற்றிய நம்முடைய விவாதத்தில், மற்றவர்களைக் காட்டிலும் நாங்கள் வித்தியாசமானவர்கள் என்று காட்டிக்கொள்வது நம்முடைய நோக்கமல்ல. இன்னும், எதிர்மறையான கருத்தைக் கொண்டு மற்றவர்களைச் சங்கடப்படுத்த வேண்டுமென்பதும் நம் விருப்பமல்ல. ஆயினும், இது *கர்த்தருடைய ஜெபம்* அல்ல என்பதை நாம் எப்படியாவது சுட்டிக்காட்டியாக வேண்டும். இந்த ஜெபம் கர்த்தருடைய ஜெபமாயிருக்கும்படி ஒருபோதும் செய்யப்படவில்லை. வேத வாக்கியங்களும் அதை கர்த்தருடைய ஜெபம் என்று எங்கும் சொல்லுவதில்லை. அப்படியென்றால், இந்த வசனங்களின் நோக்கம் தான் என்ன ? அது, இன்றைய கிறிஸ்தவர்களால் எப்படியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் ?

கர்த்தருடைய ஜெபம் போதிக்கப்பட்ட அந்தச் சூழ்நிலையில், கிறிஸ்துவானவர் ஆராதனை குறித்து தம்முடைய சீடர்களுக்குப் போதித்துக்கொண்டிருந்தார். முதலாவது, தானதர்மங்கள் செய்த மாயக்காரர்களின் உள்நோக்கத்தைக் கண்டித்தார். அநேகர், மனிதர்கள் காணவேண்டும் என்பதற்காக தானதர்மங்களைச் செய்துவந்தார்கள். மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக சிலர், தர்மம் செய்வதற்கு முன்பாக தாரை ஊதினார்கள். ஆனால், இயேசு, தானதர்மங்களை அவர்கள் இரகசியமாகச் செய்தால், அதை அறிகிற பிதா தாமே வெளியரங்கமாகப் பலனளிப்பார் என்று போதித்தார்.

மனுஷர் காணும்படியாக பொது இடங்களில் நின்று நீண்ட ஜெபங்களைச் செய்பவர்களிடமும், வீண் வார்த்தைகளினால் அலப்புகிறவர்களிடமும் இயேசு அநேகத் தவறுகளைக் கண்டார். அவர்கள் ஜெபம் பண்ணும்போது, அறைவீட்டுக்குள் பிரவேசித்து கதவைப் பூட்டி, பிதாவை நோக்கி ஜெபிக்க வேண்டும் என்று சொன்னார். ஏனென்றால், அவர்கள் வேண்டிக்கொள்வதற்கு முன்னமே அவர்களுக்கு இன்னது தேவை என்று பரமபிதா அறிந்திருக்கிறார்.

இவைகள் எல்லாவற்றையும் சொன்னபிறகு, கர்த்தர் தம்முடைய சீடர்களுக்கு எப்படி ஜெபிக்க வேண்டுமென்று போதிக்கத் தொடங்குகிறார். அது, கர்த்தருடைய ஜெபமல்ல, அது ஒரு மாதிரி ஜெபமாகத்தான் இருந்தது. ஒருவேளை *கர்த்தருடைய ஜெபம்* என்று வேதத்தில் நீங்கள் அழைக்க

விரும்பினால் யோவான் 17 ஆம் அதிகாரத்திற்குப் போங்கள். அங்கே விண்ணப்பத்துடனும், கண்ணீருடனும் தம்முடைய சீடர்கள் சார்பாக பிதாவை நோக்கி இயேசு ஜெபித்துள்ளார். **அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்கிறேன் என்றார் .**

மத்தேயு 6–ல் உள்ள ஜெபமானது, **கர்த்தருடைய ஜெபமாக** மாத்திரமல்ல, அது நம்முடைய ஜெபமாக இருக்கும்படியாகவும் போதிக்கப்பட்ட ஒன்று அல்ல. ஜெபத்தின் வார்த்தைகளை ஜாக்கிரதையாக ஆராயும்போது அது அந்நாளுக்குப் பொருத்தமாக இருந்தது. ஆனால், நம்முடைய நாட்களுக்கு அது அப்படியே பொருந்துவதாக இல்லை. அது ஏன் என்பதற்கான சில காரணங்களைப் பார்ப்போம்.

**1. யோவான் 14 : 13** ல், இயேசு பிதாவினிடத்திற்கு திரும்பிச் செல்லும் தருணத்தை எதிர்நோக்கியிருந்தார். அப்போது ராஜ்யம் ஆரம்பிக்கப்பட்டிருந்தால், இயேசு தம்முடைய நாமத்தினாலே பிதாவினிடத்தில் ஜெபிக்கும்படியாக சீடர்களை அறிவுறுத்தி இவ்விதமாக பிதாவை, கனப்படுத்தி, மகிமைப்படுத்த வேண்டுமென்று போதித்திருப்பார். ஆனால், 6–ஆம் அதிகாரத்தில் உள்ள ஜெபத்தைக் கவனித்தால், கிறிஸ்து பற்றியோ, கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிப்பது பற்றியோ எதுவும் சொல்லப்படவில்லை என்பதைக் கவனிக்க முடியும்.

**2. மத்தேயு ஆறாம் அதிகாரத்தில்** இடம் பெற்றிருக்கும் மாதிரி ஜெபத்தின் வார்த்தைகளில் கர்த்தருடைய ஆவிக்குரிய ராஜ்யம் உலகத்தில் ஸ்தாபிக்கப்படவில்லை என்று வெளிப்படையாகவே உள்ளது. ராஜ்யமானது தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டு, வாக்குத்தத்தமும் பண்ணப்பட்டிருந்தது. அப்படியானால், ராஜ்யம் இன்னும் வரவேண்டிய ஒன்றாகவே இருந்தது. எனவேதான், கர்த்தர் தம்முடைய சீடர்களிடம் ராஜ்யம் வரவேண்டும் என்பதற்காக ஜெபிக்கும்படி போதித்தார். இந்த ஜெபம் இன்றைய நாட்களின் சூழ்நிலைக்குப் பொருந்தவே பொருந்தாது. ஏனென்றால், கர்த்தர் ராஜ்யம் வருவதாக என்று சீடர்களுக்குப் போதித்த கொஞ்ச காலத்துக்குள்ளாகவே ராஜ்யம் வந்துவிட்டது. அது, பலத்தோடே வந்தது. கி.பி. 33–ல் ராஜ்யமானது எருசலேமிலே ஸ்தாபிக்கப்பட்டது.

இன்று, கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களில் பெரும்பாலானோர், இதுதான் கர்த்தருடைய ஜெபம் என நினைத்து, அதை ஒவ்வொரு வார்த்தையாகத் திரும்ப திரும்பச் சொல்லி, ராஜ்யம் (சபை) ஸ்தாபிக்கப்பட்டு சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனபிறகும், ராஜ்யம் வருவதாக என்று ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். இது, திருமணமாகி பல வருடங்களான ஒரு மனிதன் தனக்கொரு மனைவி வேண்டுமென்று ஜெபிப்பது போன்றதாகும்! ஒருவர் மனைவியை வைத்துக்கொண்டு, இப்படிப்பட்ட ஜெபத்தை செய்வது என்பது நடக்காத காரியம், அப்படித்தானே? அதுபோலவே, வேத வசனங்கள் மூலமாக ராஜ்யம் ஏற்கனவே வந்து விட்டது என்பதைத் திட்டமாக அறிந்த பிறகும், ராஜ்யம் வருவதாக என்று ஜெபிக்கக்கூடாது. ஏனென்றால், ராஜ்யம் ஏற்கனவே இங்கு இருக்கிறது.

கர்த்தருடைய ஜெபத்தின் பிற பகுதிகளைப் பொறுத்தவரை அது சுருக்கமானதாகவும், குறிப்பானதைப் பேசுவதாகவும் உள்ளது. இந்த ஜெபத்திலே தேவனுடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது, ஒருவருடைய சரீரத் தேவைகள் மற்றும் ஆவிக்குரிய தேவைகள் சந்திக்கப்பட வேண்டுமென்பதைத் தெரிவிப்பதாக உள்ளது. இங்கே, ஜெபிப்பவர் தனக்கு விரோதமாகப் பாவம் செய்தவர்களை மன்னிக்க விரும்புவது மட்டுமல்லாமல், பிதாவினிடத்தில் மன்னிக்கும்படியாகவும் கோருகிறார். அவர் மன்னிக்க விருப்பமுள்ளவராக இல்லாதபட்சத்தில், ஒருவன் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது என்பதையும் உணர்த்துகிறார்.

இயேசுவின் நாட்களில் வாழ்ந்த சீடர்களுக்கு அது அருமையான ஜெபமாக இருந்தது. இன்று, கிறிஸ்தவர்களாக வாழும் நாம் நம்முடைய ஜெபங்களோடு சேர்த்துக்கொள்வதற்கு அநேக நல்ல கருத்துக்கள் இந்த ஜெபத்தில் உள்ளன. ஆனால், இந்த ஜெபமானது வார்த்தைக்கு வார்த்தை மாறாமல், திரும்பச் சொல்லுவதற்காகக் கொடுக்கப்பட்ட ஒன்று அல்ல. இந்த ஜெபத்தில் சொல்லப்பட்டுள்ள காரணத்திற்காக, வேத வசனங்களின் போதனைப்படி இன்றைக்கு நாம், அதை அப்படியே சொல்ல வேண்டியதில்லை.நம் ஜெபத்தில் வசனிப்புக்கூடாது, வீண் வார்த்தைகளை அலப்பக்கூடாது என்று இயேசு சொல்வதோடு, ஜெபத்தை ஒரு சடங்காச்சாரமான முறையில் மனப்பாடமாகச் செய்யாமல், இருதயத்திலிருந்து உண்மையான வார்த்தைகளால் ஜெபிக்க வேண்டுமென்றே விரும்புகிறார்.

கர்த்தருடைய ஜெபத்தை தங்களுடைய சொந்த ஜெபம் என்று சொல்லுவோரும், இந்த ஜெபத்தை திரும்பத் திரும்பச் சொல்லும் மற்றவர்களும் இந்த ஜெபத்தின் ஒட்டுமொத்த கருத்து என்னவென்று தெரியாமல் ஒரே விதமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நாம் ஜெபிக்கும்படி போதிக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ், நாம் பின்பற்றுவதற்கான மாதிரி ஜெபங்கள் உள்ளன. ஆகவே, நாம் அவ்விதமாகவே ஜெபிக்க வேண்டும் (அப். 2 : 42 ; I தெச. 5:17 ; பிலி.4 : 6; யாக்.5 : 16).

தேவனுடைய பிள்ளைகள் மாத்திரமே ஜெபிக்கும் சிலாக்கியத்தை ஆசீர்வாதமாகப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அப்படி ஜெபிக்கும்போது ஜெபம் கேட்கப்பட்டு, பதிலளிக்கப்பட வேண்டுமென்றால் ஜெபங்கள் தேவனுடைய சித்தத்தின்படியாக இருக்க வேண்டும் ( I யோவான் 5 : 14,15 ). தேவசித்தத்திற்கிசைவில்லாத மற்றும் தேவன் வாக்குத்தத்தம் செய்யாத காரியங்களை நாம் ஜெபத்திலே கேட்கக்கூடாது. நம் ஜெபங்கள் எப்போதும் தேவனை கனப்படுத்துகிறதாக இருக்க வேண்டும். இப்படி ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவை நோக்கி ஏறெடுக்கப்பட வேண்டும். ✞

# ஆவிக்குரிய சுதந்திரம்

## spiritual FreedOM

***P.C. Philemon Rajah***



**ந**ம்மை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்ட ஆண்டவர் இயேசு கிறிஸ்து நமக்கு உண்டாக்கின, கொடுத்த சுதந்திரத்தைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**கிறிஸ்துவினால் நமக்கு சுதந்திரம் உண்டானது**

பரலோக தேவனால் நாம் இந்த உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் ஆண்டுகொள்ளும்படி படைக்கப்பட்டவர்கள் (ஆதி. 1:28). ஆயினும், தேவ கட்டளையை மீறி நடந்து பாவம் செய்தபடியினால், பரலோகப் பிதா நமக்குக் கொடுத்த சுதந்திரத்தை நாம் இழந்து அடிமைகளாயினோம். அதாவது, நமக்கு கையளிக்கப்பட்ட சுதந்திரத்தை நமது சுய இச்சையினாலே இழந்து, பாவத்திற்கும், உலகத்திற்கும், சாத்தானிற்கும் அடிமைகளாயினோம்.

ஆயினும், நம்மைப் படைத்த தேவன், நம்மை அடிமைகளாகவே விட்டுவிடாமல், தமது குமாரன் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நம்மை மீட்டு, நம்மைப் படைத்த நிலைக்கு மீண்டும் நிலைப்படுத்த விரும்பினார். அந்த சுதந்திரம் (விடுதலை) கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு உண்டானது. கலா.5:1 **ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்.**

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினால் நாம் இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டோம் (கொலோ.1:13). அதாவது, பிசாசின் ஆளுகையிலிருந்து நம்மை விடுவித்தார். நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கும் நீங்கலாகி மீட்கப்பட்டோம் (கலா. 3:13). பாவம் மற்றும் மரணம் என்பவைகளிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டோம் (ரோமர் 6:18; 8:2). இந்த உலகத்தின் செல்வாக்கு மற்றும் வழிபாடுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டோம் (கொலோ.2:16-23).

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 7:24-ல் நிர்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? என்று அறைகூவல் விடுத்தார். பவுலின் இந்த மாபெரும் அறைகூவலுக்குப் பதில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாத்திரமே. ஏனெனில், அவராலேயன்றி விடுதலை இல்லை. அப்.4:12 **அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை நாம் இரட்சிக்கும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.**

இயேசு கிறிஸ்து தருகின்ற விடுதலையே மெய்யான விடுதலையாகும். யோவான் 8:36 **ஆகையால் குமரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.** ஆண்டவராகிய இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தினாலே நம்மை மீட்டுக்கொண்டார் (அப்.20:28). இயேசுகிறிஸ்து இன்றி நாம் பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், சாத்தானிடமிருந்தும் விடுதலை பெறவே முடியாது. இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறார் (யோவான் 14:6). அவரே பாவிகளை இரட்சிக்க வந்த இரட்சகர். 1 தீமோ. 1:15 **பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது...**

**சுதந்திரத்தைப் பெற நாம் செய்ய வேண்டியது என்ன?**

சுதந்திரம் கிறிஸ்துவுக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. கலா.2:4 கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை அனுபவிக்க ஒருவர் விரும்பினால் அவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு (ரோமர் 10:17), விசுவாசித்து (மாற்கு 16:16). பாவத்திலிருந்து மனந்திரும்பி (அப்.2:38) கிறிஸ்துவில் உள்ள தனது விசுவாசத்தை அறிக்கை செய்து (அப்.8:37) பாவமன்னிப்பிற்கென்று திருமுழுக்குப் பெற வேண்டும் (அப்.22:16).

அதாவது, அந்த நபர் தேவனுடைய வார்த்தைக்கு திருமுழுக்கிலே கீழ்ப்படிவதன் மூலம் கிறிஸ்துவிற்குள்ளான சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்கிறார். ரோமர் 6:3-4 **கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்.**

**இயேசு எவைகளிலெல்லாம் நமக்கு விடுதலை கொடுத்தார்?**

**அ) பாவத்திலிருந்து**

கிறிஸ்து நமக்குப் பாவத்திலிருந்து விடுதலை கொடுக்கிறார். அவர் நம்முடைய பாவத்திற்கான விலையைச் செலுத்தினார். ஏசாயா 53:5,6 **நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய**

**அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்கு சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன் வழியிலே போனோம் ; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.**

**ஆ) சாபத்திலிருந்து...**

கிறிஸ்துவினாலே நாம் நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து விடுதலை பெறுகிறோம். கலா. 3:13 **மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்.**

தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதவர்கள் அவருடைய கோபத்திற்கும் சாபத்திற்கும் உரியவர்களாக இருக்கின்றனர். நியாயப்பிரமாணத்திலே பிளவுபட்டிருந்த புற இனத்தாராகிய நம்மையும், ஆபிரகாமின் பூமிக்குரிய சந்தியான யூதர்களையும் இயேசு கிறிஸ்து ஒரே சபையாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார். தேவனோடு சேர முடியாதவர்களாகிய நாம் கிறிஸ்துவினாலே தேவனுடையவர்களாகினோம். எபே. 2:14-16 **எப்படியெனில் அவரே நம்முடைய சமாதான காரணராகி இரு திறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தை தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷராக சிருஷ்டித்து இப்படிச் சமாதானம் பண்ணி பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இரு திறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்.**

**இ) சாத்தானின் அதிகாரத்திலிருந்து**

சாத்தானின் அதிகாரத்திலிருந்தும், அவனது ஆளுகையிலிருந்தும் நாம் விடுவிக்கப்பட்டோம். அதாவது விடுதலை பெற்றோம். கொலே. 1:13 **இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கித் தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவராயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.** சாத்தான் நம்மைத் தொட முடியாத ஒரு மகிமையான நிலையை கிறிஸ்து நமக்கு உண்டாக்கிக் கொடுத்தார். ரோமர் 16:20 **சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக ஆமென்.**

**ஈ) இந்த உலகத்தினுடைய வழிபாடுகள் மற்றும் செல்வாக்கிலிருந்து**

இந்த உலகத்தின் வழிபாடுகளாகிய பாரம்பரியங்கள், சடங்காச்சாரங்கள், தீண்டாமைகள், மூடநம்பிக்கைகள், உயர்ந்தோர், தாழ்ந்தோர் மற்றும் ஏனைய பாகுபாடுகள் எல்லாவற்றிலுமிருந்து விடுவித்து ஒன்றே குலம் ஒருவரே தேவன் என மனித இனம் அனைத்தையும் தமக்குள்ளே சமமாக்கினார். கலா.3:25 **யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை;**

**அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.**

இந்த உலகத்தின் வழிபாடுகள் மற்றும் செல்வாக்குகள் ஞானம் என்று பேர் பெற்றாலும் அவைகள் பிரயோஜனமற்றவைகள். கொலோ. 2:20-23 **நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால் இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் யோசனைகளின்படியும் நடந்து : தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்து போகுமே. இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும் சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது.** அப்பிரயோஜனமான அவைகளிலிருந்து நம்மை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து முற்றும் விடுவிக்கிறார்.

**உ) கவலை மற்றும் பயத்திலிருந்து**

மனிதனை அழுத்துகிற பல்வேறு கவலைகள் மற்றும் பயத்திலிருந்தும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து விடுதலை கொடுத்துள்ளார். அவரது அழைப்பைக் கவனித்துப் பாருங்கள். மத். 11:28 **வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். கவலைகள் மற்றும் பயங்களிலிருந்து வெளியே வரும்படி போதித்தார். மத்.6:27,34 கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.**

மேலும், அவைகளிலிருந்து நம்மை விடுவிக்க இந்தப் பூமியில் மனிதனாகப் பிறந்து தன்னைத்தானே தியாகம் செய்தார். எபிரெயர் 2:14-15 **ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்.** இன்னும் கிறிஸ்து தருகின்ற சுதந்திரத்தின் மேன்மையை இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

**சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தாதீர்கள்**

கிறிஸ்து தருகின்ற சுதந்திரத்தை நாம் நம்முடைய துர்க்குணத்தைத் தொடர்வதற்குப் பயன்படுத்தக்கூடாது. அதாவது, பாவத்திலே நிலை நிற்க பாதுகாப்புக் கவசமாகப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில், கிறிஸ்து நமக்கு அந்த சுதந்திரத்தை பாவத்தினைத் தொடர்வதற்காகத் தரவில்லை. மாறாக, பரிசுத்தமாக வாழும்படியாகவே தந்திருக்கிறார்.

கிறிஸ்து நமக்குத் தந்த சுதந்திரத்தை நாம் முழுமையாக அநுபவிக்கலாம். ஆயினும், அதனை அனுபிவிக்கிற முறை இன்னொரு சகோதரரின், சகோதரியின் ஆத்துமாவிற்கு இடறல் உண்டாக்குவதாக இருந்து விடக்கூடாது. 1 கொரி. 10:29-33 **உன்னுடைய மனச்சாட்சியைக் குறித்து நான் இப்படிச் சொல்லாமல் மற்றொருவனுடைய மனச்சாட்சியைக் குறித்தே சொல்லுகிறேன். என் சுயதீனம் மற்றொருவனுடைய மனச்சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்படவேண்டுவதென்ன? மேலும், நான் அதை ஸ்தோத்தரிப்புடனே அநுபவித்தால், ஸ்தோத்திரித்து அநுபவிக்கிற பொருளைக் குறித்து நான் தூஷிக்கப்படுவானேன்? ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். நான் என் சுய பிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல; நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும்**

கிறிஸ்து நாம் அறிந்து செய்ய வேண்டிய அனைத்தையும் போதித்துள்ளார். அதனைப் பரிசுத்த ஆவியானவர் வேதாமத்திலே எழுதிக் கொடுத்துள்ளார். 2 தீமோ.3:16,17 **வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது.** ஆகையால், கிறிஸ்து போதிக்கிறவைகளுக்கு எதிராகப் போதிக்கிறவர்களுக்கு நாம் விலகி இருக்க வேண்டும். இல்லையேல், சுதந்திரத்தை இழந்து விடுவோம். கலா. 2:4 **கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு உண்டான சுயாதீனத்தை உளவுபார்த்து நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக்கும் பொருட்டாகப் பக்கவழியாய் நுழைந்த கள்ளச் சகோதரர் நிமித்தம் அப்படியாயிற்று.**

ஆகையால், நாம் கிறிஸ்துவினுடைய சுதந்திர (சுயாதீன) பிரமாணமாகிய புதிய ஏற்பாட்டை வாசித்து, தியானித்து அதில் சொல்லப்பட்டவைகளைச் செய்து பாக்கியவான்களாக வாழும்படியாக வேத வசனம் நம்மை ஊக்கப்படுத்துகிறது. யாக்.1:25 **சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.**

**இறுதியாக**

பிரியமானவர்களே! சர்வவல்ல தேவன், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினால் நமக்கு பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், சாத்தானின் ஆளுகையிலிருந்தும், இந்த உலகத்தின் வழிபாடுகள் மற்றும் செல்வாக்குகளிலிருந்தும், கவலை மற்றும் பயங்களிலிருந்தும் கொடுத்த இந்த மாபெரும் மேன்மையான சுதந்திரத்தை நாம் கர்த்தருக்குள்ளே மிகவும் மகிழ்ச்சியோடு அநுபவிப்போம். மேலும், இந்த மாபெரும் சிலாக்கியத்தை அநேகருக்கு அறிவித்து ஆசீர்வாதமாக இருப்போம். ✝

# கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சி

## *Perfect In Christ Jesus*

B. Arjunan

ஒரு மனிதனை கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடையச் செய்ய அப்போஸ்தலனாகிய பவுல் மூன்று காரியங்களை ஒரே வசனத்தில் உணர்த்துகிறார். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு அவரையே நாங்கள் அறிவித்து எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம் என்கிறார் (கொலோ.1:28).

முதலாவது, அவர் சொல்லும்போது, அவரையே நாங்கள் அறிவித்து எனக் குறிப்பிடுகிறார். ஒரு மனிதனை கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடையப் பண்ண வேண்டுமானால், நாம் முதலாவது ஆண்டவர் இயேசுவை அறிவிக்க வேண்டும். அநேகர் இதைச் செய்யத் தவறி விடுகின்றனர். தங்களுடைய யோசனையின்படியும் அல்லது நிர்வாகத்தின் ஆலோசனையின்படியும் எதையாவது கொடுத்து அல்லது அன்பாக அவர்களோடு பழக்கம் வைத்து இன்னும் இப்படிப்பட்ட ஏதாவது ஒன்றைச் செய்து, அவர்களை ஆதாயம் செய்ய விரும்புகின்றனர். **யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்** என்கிறார் பவுல் (1கொரி.1:22,23).

இன்றைக்கு, அற்புதங்களையும், அடையாளங்களையும், ஜனங்கள் நாடுகிறார்கள். வேதாகமத்திலே சொல்லப்பட்ட அடையாளங்களும் அற்புதங்களும் அவர்களுக்குப் போதாமல் இருக்கிறது. **இயேசு செய்த வேறு அநேகக் காரியங்களுமுண்டு: அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புத்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்** என்று அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய சுவிசேஷத்தை எழுதி முடித்திருக்கிறார். வேதாகமத்தில் சொல்லப்பட்ட அற்புதங்கள் ஒரு மனிதனுடைய விசுவாசத்திற்குப் போதுமானது. அற்புத கர்த்தர் தம்மோடு இருந்த காலத்தில் அநேக அற்புதங்களைக் கண்ணாரக் கண்ட தோமா என்ற சீஷன் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, மற்ற சீஷர்கள் சொன்னதை அவன் நம்பவில்லை. அவரைக் கண்டு அவருடைய விலாவில் தன் கையைப் போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான். அவனைக் கர்த்தர் கண்டு: தோமாவே நீ என்னைக் கண்டதினால் விசுவாசிக்கிறாய் காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார். ஆகையால், அப்போஸ்தலனாகிய பவுல், யூதர்கள் மத்தியில் போதிக்கும்போது, தாங்கள் தேவனிடத்திலிருந்து வந்தவர்கள் என்பதற்கு அடையாளமாக ஒரு அற்புதத்தையும் அவர்கள் மத்தியில் செய்து காட்டவில்லை.

ஆனால், அவர்கள் அதை எதிர்பார்த்தார்கள். யூதர்கள் அடையாளத்தையும், கிரேக்கர் ஞானத்தையும் தேடுகிறார்கள். ஆனால் பவுலோ, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை அவர்களுக்குப் பிரசங்கித்தார். என் அன்பு சகோதரனே! சகோதரியே!! நீ எதைத் தேடிக்கொண்டிருக்கிறாய்? அற்புத அடையாளங்களையா? அல்லது சிலுவையில் உனக்காக அறையப்பட்ட இயேசுவையா? நீ தேர்ச்சியடைய அவரைக் குறித்து அறிந்து கொள். பெந்தகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கிக்கும்போது, நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவை தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான் (அப்.2;36). இங்கே, பேதுரு தன்னைப் பற்றியோ அல்லது மற்ற அப்போஸ்தலரைப் பற்றியோ பேசாமல், சிலுவையில் யூதர்களால் அறையப்பட்ட கிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் பற்றி பேசினார். இதைக்கேட்ட **3000** பேர் கர்த்தருடைய சுவிசேஷ சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து, ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டனர். மேலும், பவுல் சொல்லும்போது நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும் எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம் என்கிறார் (2கொரி.4:5). பல இடங்களில் பிரசங்கியார்கள் பிரசங்கிக்கிறார்கள். தங்களுடைய சொந்தக் காரியங்களையும், தங்களுடைய தேவைகளையும் சொல்லி இதற்காக ஜெபியுங்கள் என்கிறார்கள். இவ்விதமான பிரசங்கங்கள் ஒரு மனிதனை கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடையச் செய்யுமா?

இரண்டாவது, பவுல் சொல்லும்போது மனுஷனுக்கும் புத்திசொல்லி என்று குறிப்பிடுகிறார். ஒரு மனிதனை கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்த அவனுக்கு வேதாகமத்திலிருந்து புத்திமதிகளைச் சொல்லவேண்டிய பொறுப்பு இருக்கிறது. நீங்கள் புத்தியைக் கேட்டு ஞானமடைந்து அதைவிட்டு விலகாதிருங்கள் என்று நீதி. 4:13-ல் படிக்கிறோம். ஒவ்வொருவரும் புத்தியைக் கேட்டு ஞானமடைய வழி ஏற்படுத்த வேண்டும். என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள் என திருமறை நமக்குப் போதிக்கிறது. மேலும், புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டுவிடாதே அதைக் காத்துக்கொள்; அதுவே உனக்கு ஜீவன் எனக் காண்கிறோம் (நீதி.4:13). சிலர், புத்திமதியான வார்த்தைகளை அலட்சியப்படுத்துகிறார்கள். ஆனால், அது ஒரு மனிதருக்கு ஜீவனாக இருக்கிறதாகப் படிக்கிறோம். பவுல் தீமோத்தேயு என்ற உத்தம வாலிபனுக்கு எழுதும் புத்திமதியைக் கவனியுங்கள்; உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலை கொண்டிரு இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய் என்றார் (1தீமோ.4:16). அப்போஸ்தலன் பவுலின் இந்தப் புத்திமதிகளை ஏற்றுக்கொண்ட தீமோத்தேயு அந்தவிதமாக ஊழியத்தைச் செய்து தன்னைக் காத்துக்கொண்டான்.

சிலருக்கு இந்தவிதமாகப் புத்திமதியான வார்த்தைகள் சொல்லிவிட்டால் போதும், எனக்கெல்லாம் யாரும் ஒன்னும் சொல்ல வேண்டாம் எனக்கு எல்லாம் தெரியும் என்பார்கள். கற்றுக்கொள்ளுகிற வாலிப வயதில் முதிர்ந்தவர்கள் சொல்லும் புத்திமதியான வார்த்தைகளைக் கவனிக்கவேண்டும். அது ஒருவனுடைய வாழ்க்கைக்குப் பிரயோஜனமுள்ளவையாக இருக்கும்.

நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடைய இந்த விதமான புத்திமதிகளை ஏற்றுக்கொண்டு, உங்களைக் குறித்தும் உங்களுடைய உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிருந்து பேச்சிலும் நடக்கையிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்கப் பிரயாசப்படுங்கள்.

மூன்றாவது, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம் என்கிறார். கடனுக்காக உபதேசிக்கிறவர்களாக இருக்கக்கூடாது. ஞானமான உபதேசம் மிகவும் முக்கியம். ஞானமான உபதேசம் என்றால் உலக ஞானத்தைக் கற்றுக்கொடுப்பதா அல்லது வாழ்க்கையின் ஞானமான காரிங்களைக் கற்றுக்கொடுப்பதா? இவைகளையெல்லாம் கொடுக்க உலகக் கல்லூரிகள் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவுக்குள் தேர்ச்சியடைய வேதவசனங்களை ஞானத்தோடு உபதேசம் பண்ணவேண்டும். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென் என்று பேதுரு சொல்லுகிறார் (1 பேதுரு 4:11). ஒருவர் போதிக்க ஆரம்பித்துவிட்டாலே அவர் வாயிலிருந்து வருவதெல்லாம் வேதாகமத்தின் வசனங்களாகவே இருக்க வேண்டும். ஒரு வசனத்தைச் சொல்லிவிட்டு ஊர் கதையெல்லாம் சொல்லி பின்பு துவக்கின வசனத்தையே மறந்து விடுவார்கள். அந்த விதமாகப் பிரசங்கித்தால் அவர்கள் கர்த்தரையும் அவருடைய உபதேசங்களையும் அறிந்து கொள்ளுவதெப்படி?

**கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால் அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாயிருக்கிறான்** (2யோவான் 9-11). உபதேசம் பண்ணுகிறவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தாலோ, அந்த உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிறவர்களாயிருந்தாலோ அப்படிப்பட்டவர்களை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. ஏனென்றால், அவர்கள் தேவனை உடையவர்கள் அல்ல என்று வேதாகமமே சொல்லுகிறது. அப்படிப்பட்டவர்களை நாம் அடையாளம் கண்டு, அவர்களை நம்முடைய வீடுகளில் ஏற்றுக்கொள்ளாமலும் அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருக்க வேண்டும். அப்படி மீறி அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவர்களுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாயிருக்கிறான் எனப் படிக்கிறோம். ஆகையால், ஞானமான உபதேசம் வேதாகமத்திலிருந்து வெளிப்பட வேண்டும்.

மேலும், அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லும்போது; **நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும்**

**என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்** என்கிறார் (2பேதுரு 3:18). ஒரு மனிதன் கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடைய அவன் அவருடைய கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர வேண்டும். பொதுவாகப் பெயரளவில் கிறிஸ்துவாக இருப்பவர்களிடம் ஏதாவது ஆண்டவரைப் பற்றி சொல்லிவிட்டால் போதும், உடனே அவர்கள் சொல்லுகிற வார்த்தை, நாங்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள்தான் தெரியாதவர்களிடம் போய்ச் சொல்லுங்கள் என்பார்கள். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அநுதினமும் தேவாலயத்திலே கூடினார்கள் எதற்காக? வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படியாகவும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவில் தேர்ச்சியடையும்படியாகவும், ஜெபிக்கும்படியாகவும், ஐக்கியத்தில் வளர்ச்சியடையும்படியாகவும் கூடினார்கள் இதோ சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையாயிருக்கிறது என்று சங்கீதத்தில் வாசிக்கிறோம்.

அப்போஸ்தலனாகிய பவுல், ஆசியா முழுவதுக்கும் சுவிசேஷம் அறிவித்தவர் அவர், கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவர்களாக அநேகரை நிறுத்தும்படி அவரையே அறிவித்து, வேதாகமதத்திலிருந்து புத்திசொல்லி, எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணினார். அதைப்போல நாங்களும் உங்களுக்குப் போதிக்க விரும்புகிறோம். மற்றபடி, மாய்மாலம் பண்ணவும், தந்திரமான வார்த்தைகளால் உங்களை வசப்படுத்தவும், பொய்யான காரியங்களை உங்களிடத்தில் சொல்லி பணம் சம்பாதிக்கவும் விரும்பாமல் சத்தியத்தைச் சத்தியமாகவும், தேவனுடைய விருப்பத்தின்படியும், கர்த்தருடைய ஊழியத்தை அவருடைய திருசித்தத்தின்படியும் செய்யவுமே விரும்புகிறோம். ஆகையால், நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடையும்படி அவரையும் அவருடைய உபதேசத்தையும் அறிந்துகொள்ளுங்கள்.

### சிலுவையின் உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்குமா?

ஆம், இன்றைக்கு சிலுவையைப் பற்றிய உபதேசத்தைச் சொன்னாலே சிலருக்குப் பைத்தியம் பிடிப்பதைப்போல இருக்கிறது என்கிறார்கள். அதைச்சொன்னாலே வேறு ஏதாவது பேசுவோமா? என்று ஆரம்பித்து விடுகின்றனர். வேதாகமம் இதைக்குறித்து சொல்லும்போது, **சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது** என்று காண்கிறோம் (1கொரி.1:18). உன்னதமான நற்செய்தியை ஒரு மனிதன் வேண்டாம் என்று சொல்லுவானேயானால் அவன் கெட்டுப்போவான். அப்படிப்பட்டவனுக்கு அந்தச் செய்தி பைத்தியமாக இருக்கும்.

ஆனால், இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. இச்செய்தி உங்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்பைக் கொண்டுவரும். இதை நீங்கள் விசுவாசிக்கும்போது அது உங்களை அரவணைக்கும், இரட்சிப்பின் வழியில் உங்களை வழிநடத்தும், உங்கள் ஆவி ஆத்துமா சரீரத்திற்கு மீட்பைக் கொடுக்கும். இந்த உபதேசத்தை விட்டுவிடாதிருங்கள். அதை உங்களுடைய இருதயமாகிய பலகைகளில் எழுதிக்கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் இதை எடுத்துச் சொல்லுங்கள். அவர்களும் இந்த இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டு ஆசிர்வதிக்கப்பட உதவிடுங்கள். ✞

# ஏன் முடியவில்லை?
## *Why Not ?*

E.Z. Selvanayagam

**எ**த்தனையோ அருளுரைகள் ஆற்றினேன் பயனில்லை; எத்தனையோ அறிவுரைகள் கூறினேன் கேட்பாரில்லை; எத்தனையோ முயற்சி தோல்வி தான் கண்ட பலன்; எத்தனையோ நற்பணிகள் செய்தேன் எதுவும் எடுபடவில்லை.

அப்போஸ்தலர் காலத்தில் பனிரெண்டுக்கும் குறைவான எண்ணிக்கையுள்ளவர்கள் ஐம்பதாண்டு காலங்களுக்குள் அன்றைக்கு பரவி வியாபித்திருந்த உரோமைப் பேரரசு முழுவதையும் சுவிசேஷத்தால் நிரப்பிவிட்டு இனிப் போவதற்கு இடம் காணோமே என்று அங்கலாய்த்தார்கள் ரோமர் 15:23. அப்பொழுது, இன்றைக்கு இருக்கும் நவீன வசதிகளில் பல அன்று இல்லை. ஒலிப்பெருக்கிகளும், வானொலிகளும், தொலைக்காட்சிப் பெட்டிகளும், பறக்கும் விமானங்களும் கிடையா.

இன்றைக்கு இவ்வளவு வசதிகளையும் கைவசம் வைத்துக்கொண்டு ஆயிரத்தெட்டு அமைப்புகள் சுமார் முன்னூறு ஆண்டுகள் பாடுபட்டு இந்தியாவில் மூன்று விழுக்காடு மக்களைக் கூட கிறிஸ்துவுக்குள் கொண்டுவர முடியவில்லையே!

ஏன் கூடாமற் போயிற்று? முறை தவறா? முயற்சி குறைவா? சத்தியத்தின் வலிமை குறைந்து விட்டதா? பயிற்சி போதாதா? ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் இரண்டு முக்கியமான காரியங்கள் தெளிவாகத் தெரிகின்றன. 1.அர்ப்பணிப்பு உணர்வும், ஐக்கிய உணர்வும் இல்லாத ஊழியர்கள் 2.சத்தியத்தை முறையாகப் பகுத்துப் போதிக்கும் அளவுக்கு வேத அறிவு இல்லாமை.

**நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சித்தீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்** கலா. 5:15 என்று அன்றே சொல்லி வைத்தார் பவுல். அது, இன்று கனகச்சிதமாய் நடந்தேறிக் கொண்டிருக்கிறது. ஒரே ஆவியினால் உந்தப்பட்டவர்கள் இப்படி முரண்பாடாக எப்படிப் பேச முடிகிறது? என்று மக்கள் வியப்படைகிறார்கள். ஆனால், கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நாம் அதைப்பற்றி கவலைப்பட்டதாகக் காணோம். இந்தக் கட்டுரை அச்சேறி வெளியே வருவதற்குள், ஒரு புதிய பிரிவுசபை உதயமானால் கூட ஆச்சிரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. கிறிஸ்தவர்களே! முதலில் ஒன்றுபடுங்கள்.

இரண்டாவது, உங்களைக் கடவுளுக்கு அர்ப்பணியுங்கள். **உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடவழக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்** (1பேதுரு. 1:15) கடவுளுக்கு நம்மை ஒப்படைக்கும்போது, மனிதனின் சித்தம் திருத்தப்படுகிறது. நம்மை பரிசுத்தம் பண்ணுதல் என்னும் போது ஒருவித போலித்தனமான சன்மார்க்க வாழ்க்கை வாழ்வதல்ல, மாறாக, நம்மை அவருக்கேற்ற கருவியாக மாற்றும்படி நம்மை ஒப்புக்கொடுத்து விடுவதாகும். நம்முடைய தவறுகள் நமக்கே தெரியாது. தாவீது அரசன் நாத்தான் தீர்க்கதரிசி சொன்ன கற்பனைக் கதையில் அநியாயமாய் நடந்துகொண்ட மனிதனைக் கண்டு கோபமடைந்தான். ஆனால், அதேபோன்ற தவறொன்றைத் தான் செய்து கொண்டிருந்ததை நாத்தான் தீர்க்கதரிசி சொல்லும் வரையிலும் புரிந்து கொள்ளவில்லை. ஆகவே, கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியில் என்னை நடத்தும் என்று சொல்லுவோமாக (சங். 139 : 1; 24). அப்பொழுது, நம்மைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரை நாம் சந்திப்போம் (லேவி. 21:23). ஏசாயவைப் போன்று, அனுதினமும் நம்மை ஜெபம் என்னும் பலிபீடத்தில் வைக்கும்போது, அவர் தமது தூய்மை என்னும் அக்கினித் தழலால் நம்மை சுத்தமாக்குவார் (ஏசாயா 6:6, 7).

என்ன ஐயா, பெரிய படிப்பு! இயேசுகிறிஸ்து மீன் பிடிக்கிறவர்களையும், ஆயக்காரர்களையும், பாமரர்களையும் தானே ஊழியத்துக்கு எடுத்துக்கொண்டார் என்று எங்கோ முணுமுணுக்கிற சத்தம் காதில் விழுகிறது. ஐயா, தயவு செய்து அப். 4:13-ஐ வாசியுங்கள். அவர்கள் படிப்பறியாத பேதைகளாக ஒரு காலத்தில் இருந்தது மெய்தான். ஆனால், இயேசு கிறிஸ்து அவர்களுக்கு மூன்று ஆண்டுகள் கொடுத்த கடுமையான பயிற்சியின் காரணமாக மெத்தப் படிக்கிறோம் என்று எண்ணி கர்வம் கொண்டிருந்த அந்தக் கும்பலே வியந்து ஒப்புக்கொள்ளக்கூடிய அளவு தெளிவு பெற்றிருந்தார்கள் என்பதை நாம் மறந்து விடலாமா?

இயேசு அவர்களுக்குச் சகல காரியங்களிலும் பயிற்சி கொடுத்திருந்தார். ஜெபம் பண்ணக் கற்றுக்கொடுத்திருந்தார். பிரசங்கம் பண்ணக் கற்றுக் கொடுத்திருந்தார். யாருக்கு எப்படி பதில் சொல்வது என்று கற்றுக் கொடுத்திருந்தார். விருந்து வீட்டிற்கோ, திருமண வீட்டுக்கோ சென்றால் எங்கே உட்கார வேண்டுமென்றும் கற்றுக்கொடுத்திருந்தார்.

**நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்** (மத்.11:29). ஆனால், நாமோ அவருடைய உபதேசங்களை விட்டு விட்டும், மனிதனுடைய ஞானத்தால் கறைபடுத்தி திரித்தும், சேர்த்தும், குறைத்தும் போதிக்கிறோம். சுவிசேஷமே இரட்சிப்புக்குத் தேவபெலன் (ரோமர்1:16) என்ற நிலை மாறி அஞ்ஞானிகள் கூட நம்ப மறுத்து ஏளனம் செய்கிற மூடநம்பிக்கைகளுக்குத் தீனிபோட்டு புது மெருகு கொடுத்து இயேசுவின் பெயருக்கு எவ்வளவு கேவலத்தை உண்டு பண்ணுகிறோம்.

இவ்வளவு காரியங்களையும் நம்முடைய மனதும் மாமிசமும் விரும்பினபடி செய்துவிட்டு, முதலாம் நூற்றாண்டின் அப்போஸ்தலர்களால் பெற்ற வெற்றி நமக்கு கிட்டவில்லையே என்று புலம்பினால் எப்படி முடியும்? ஆகவே, முதலாம் நூற்றாண்டு போல், அப்போஸ்தலர்களுடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் உறுதியாய்த் தரித்திருப்போம், வெற்றி பெறுவோம். ✝

# இரண்டில் ஒன்று

## One in Two

*Benny Martin*

**வா**ழ்க்கை என்பது தீர்மானங்களால் நிறைந்திருக்கிறது. ஒவ்வொருவரும் செய்யவும் செய்யாமலிருக்கவும் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன. எங்கே போகலாம். எங்கே போகக்கூடாது என்றும், யாரிடம் பழகலாம் யாரிடம் பழகக்கூடாது என்றும் வாழக்கையில் சில தீர்மானங்களை எடுக்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு மனிதன் எடுக்க வேண்டிய தீர்மானத்தைக் குறித்து (மத். 7:13,14) வசனங்களில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். **இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலாமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.** உதாரணமாக, இரு சாலைகள் பிரிகின்ற ஓர் இடத்தில் நீங்கள் நிற்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒரு சாலை குண்டும் குழியாகவும், கரடு முரடாகவும் காட்சி அளிக்கிறது. இன்னொரு சாலை நேராகவும், அழகாகவும் காட்சி அளிக்கிறது. அது பயணிப்பதற்குச் சுலபமாகத் தெரிகிறது. நீங்கள் எந்தப் பாதையில் பயணிக்க விரும்புவீர்கள்? பலர் இந்த இரண்டாவது வகை சாலையில் பயணிக்கவே விரும்புவார்கள்.

மேற்கண்ட உதாரணத்தை ஆவிக்குரிய பிரகாரமாகப் பொருத்திப் பார்ப்போம். நாம் எல்லோருமே ஆவிக்குரிய பயணத்தை மேற்கொண்டுள்ளோம். உலகத்தோடு ஒத்துப்போய் அவர்கள் செய்கின்ற காரியங்களை நாமும் செய்துவிட்டால் அந்த விசாலமான பாதையில் பயணிப்பது எளிதே ! அந்தப் பாதையில் பயணிக்கும்போது ஒருவர் எவ்வித தியாகத்தையும் செய்ய வேண்டியதில்லை. அதே நேரத்தில், இடுக்கமான வாசல் வழியாய்ப் பயணிப்பதில் பல சிக்கல்கள் இருப்பதால் அதில் பயணிக்க பெரும்பாலானவர்கள் விரும்புவதில்லை. இந்த வழிகளைப் பற்றி இயேசு கிறிஸ்து மலைப் பிரசங்கத்தில் நமக்கு என்ன ஆலோசனை சொல்கிறார் என்று கவனிப்போம் மத். 7:13,14 வசனங்களில் இயேசு இரண்டு வாசல்களையும் இரண்டு வழிகளையும் இரண்டு வகையான இடங்களையும் பற்றி பேசுகிறார். அவைகளை நாம் சற்று விரிவாக இப்போது பார்ப்போம்.

### I *விரிவான வாசல்*

இந்த வாசல் கேட்டுக்கு அழைத்துச் செல்லுகிற வழிக்கு ஆரம்பமாயிருக்கிறது. இந்த வாசலில் பலர் எவ்வித தியாகமும் செய்யாமல்

பயணம் செய்யலாம். இதில் பயணம் செய்ய எதையும் விட வேண்டியதில்லை. இதில் எந்தக் கட்டுப்பாடுகளும் இல்லாத காரணத்தால், பலர் இந்த வாசலைத் தெரிந்தெடுக்கிறார்கள்.

*II* ***இடுக்கமான வாசல்***

இந்த வாசல் ஜீவனுக்குப் போகிற வழிக்கு ஆரம்பமாயிருக்கிறது. அது ஏன் இடுக்கமாயிருக்கிறது? ஏனென்றால், இதில் ஒருவர் பிரவேசிக்கத் தன்னை வெறுத்தாலும், கீழ்ப்படிதலும் அவசியமாயிருக்கிறது (மத். 6:10,20). மேற்சொல்லப்பட்ட இரண்டு வாசல்களும் வெறும் ஆரம்பம்தான், அடுத்ததாக நாம் அந்த இரண்டு வழிகளையும் சற்று விளக்கமாகப் பார்ப்போம்.

*III* ***விசாலமான வழி***

கேட்டுக்குப்போகிற வழி விசாலமாயிருக்கிறது. ஏனென்றால், அந்த வழியில் பயணிக்கிறவர்கள் எவ்வித மாற்றத்தையும் செய்ய வேண்டியதில்லை. உல்லாசமாக, சுதந்திரமாக வாழவிரும்பும் அநேகர் இந்த வழியில் பயணிக்க விரும்புவார்கள். மேலும், அவர்கள் திறந்த மனதை உடையவர்களாகவும், எல்லோரிடமும் சகஜமாகப் பழகுபவர்களாகவும் இருப்பார்கள். இன்றைய நாட்களில் பெரும்பாலான மக்கள் காரியங்களைச் சுலபமாகச் செய்யவும், கஷ்டப்படாமல் வெற்றி பெறவுமே விரும்புகின்றனர்.

*IV* ***நெருக்கமான வழி***

இவ்வுலகில் பெரும்பாலான மக்கள் இந்த நெருக்கமான வழியில் பயணிக்க விரும்புவதில்லை. ஏனென்றால், இதில் பயணிக்க நீதியாக வாழ வேண்டியது அவசியமாகிறது (அப்.10:35). தொன்றுதொட்டு நாம் பார்க்கும்போது, மக்கள் அநீதியாகவே வாழ்ந்து பழகியிருக்கிறபடியால் இந்த நெருக்கமான பாதையில் பயணிப்பதென்றால் அவர்களுக்குக் கசக்கிறது. மேலும், இந்தப் பாதையில் பயணிப்பவர்களைப் பார்த்து அவர்கள் குறுகிய மனப்பான்மை உடையவர்கள் என்றும், ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே முடங்கிக் கிடப்பவர்களென்றும் குறை கூறுகிறார்கள். ஆனால், இந்த நெருக்கமான வழி நம்மை நேராகப் பரலோகம் அழைத்துச் செல்கிறது என்பதை அவர்கள் பார்க்க மறுக்கிறார்கள். மேலும் மத்.7:14-ல், இயேசு இந்த வழியைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் என்று சொல்கிறார். கடந்த கால சம்பவங்களை நாம் வேதாகமத்தில் படித்துப்பார்த்தால், நோவாவின் நாட்களில் அந்த ஜலப்பிரலத்தின் போது, நோவா மற்றும் அவருடைய குடும்பத்தார் உட்பட எட்டுப்பேர் மாத்திரமே இரட்சிக்கப்பட்டார்கள். லட்சக்கணக்காண மக்கள் நோவாவின் பிரசங்கத்திற்குச் செவிகொடுக்க மறுத்து, மடிந்து போனார்கள். வனாந்திர யாத்திரையில் சுமார் **6-லட்சம்** பேர் பயணம் செய்திருந்தாலும் கூட, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்தில் **யோசுவா, காலேப்** ஆகிய இரண்டு பேர் மாத்திரமே பிரவேசித்தார்கள். எனவே காலகாலமாய் நாம் பார்க்கும்போது, இந்த நெருக்கமான வழியைக் கண்டுபிடித்து அதில் பிரவேசிக்கிறவர்கள் ஒரு சிலராகத்தான் இருக்கிறார்கள்.

மேற்சொல்லப்பட்ட காரியங்களை வைத்துப் பார்த்தால் ஆவிக்குரிய பயணத்தில் நாம் எந்த நிலையில் இருக்கிறோம்? கேட்டுக்குப் போகிற விசாலமான வழியில் பயணிக்கிறோமா? வானவராம் இயேசுவை வாழ்வாராதமாகக் கொண்டு வாழும் நாம் துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி நடக்கக்கூடாது என்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் (சங்.1:1). இன்று அநேகர், பணம், புகழ், பதவி போன்றவைகளை நாடி விசாலமான வழியில் பயணிக்கிறார்கள். நீதி, நியாயம், நேர்மை போன்றவைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு மனம் போன போக்கில் போய் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள்.

ஆனால், இந்த உலகமும் உலகத்திலுள்ளவைகளும் ஒரு நாளில் அழிந்து போகும். அழியாத நம் ஆத்துமாவைக் காத்துக்கொள்ளப் பிரயாசப்பட வேண்டும். அநித்தியமான பாவ சந்தோஷங்களை நம்மை விட்டு அகற்றிவிட்டு தேவன் நமக்காக வைத்திருக்கிற நித்திய ஜீவனை சுதந்திரிக்க அந்த நெருக்கமான வழியில் பயணிக்க வேண்டும். அந்த நெருக்கமான பாதையில் இயேசுவை நோக்கி பயணிக்கும்போது இடையில் தோன்றும் தடைக்கற்களையெல்லாம் வெற்றிப்படிகளாக மாற்ற முடியும். நம்மை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய நமக்கு பெலனுண்டு (பிலி.4:13). இவ்வுலக வாழ்க்கையானது கொஞ்ச காலந்தான். இங்கே நாம் அதிக நாட்கள் வாழும்படியாக நம் சரீரம் வடிவமைக்கப்படவில்லை. நாமும் பாடுகள் நிறைந்த பாழாய்ப் போன உலகத்தில் அதிக நாட்கள் வாழ விரும்புவதில்லை. நம் ஜீவன் கொஞ்ச காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறது. என்று யாக்கோபு சொல்கிறார் (யாக். 4:14). இப்படி நாம் வாழ்கின்ற இந்தக் கொஞ்ச நாட்களில் இந்த நெருக்கமான வழியில் பயணித்தால் தேவனோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டு, நேசர் தம் கரங்களை நீட்டி அழைக்கின்ற அந்த மோட்சக் கரையை அடைவோம் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அதற்குத் தேவன் தாமே நமக்கு உதவி செய்வாராக!

## கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள்

பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன முந்தினவன் **பேதுரு என்னப்பட்ட சீமோன்**, அவன் சகோதரன் **அந்திரேயா**, செபுதேயுவின் குமாரன் **யாக்கோபு**, அவன் சகோதரன் **யோவான்**, **பிலிப்பு**, **பர்த்தொலோமேயு**, **தோமா**, ஆயக்காரனாகிய **மத்தேயு**, அல்பேயுவின் குமாரன் **யாக்கோபு**, **ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு** கானானியனாகிய **சீமோன்** அவரைக் கட்டிக் கொடுத்த **யூதாஸ்காரியோத்து.**

பின்பு அவர்களைக் குறித்து சீட்டுப் போட்டார்கள் சீட்டு **மத்தியா**வின் பேருக்கு விழுந்தது, அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே சேர்த்துக்கொள்ளப்பட்டான். இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும் தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய **பவுல்** (மத்தேயு 10:2-4; அப்.1:26; ரோமர்1:1)




**என் பிதாவே இப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்.** இயேசுவை விட்டு நீங்கும் படியாக அப்பாத்திரத்தில் என்ன இருந்தது? துரோகம், பொய்யான குற்றச் சாட்டுகள், பரிகாசம், கொடூரமாகத் தாக்குதல், முள்முடி, சிலுவையில் அறையுங்கள் என்கிற கூச்சல், சிறுமைப்படுத்துதல், அநியாயம், வியாகுலம் போன்றவைகள்தான் அப்பாத்திரத்தில் இருந்தன. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட காரியங்கள் தம்மைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும் என்று விண்ணப்பம் பண்ணியிருந்தாலும் கூட பிதாவின் சித்தத்தின்படியே ஆகக் கடவது என்று அவர் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்தார். இந்த ஜெபத்தில் அர்ப்பணிப்பு மற்றும் கீழ்ப்படிதலை நாம் காண்கின்றோம். அதாவது, நாமும் உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபிக்கக் கற்றுக் கொள்ளும்படியாக நம் ஜெபம் உயர்வானதாக இருக்க வேண்டும். அதாவது, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று.

**அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி** (எபிரெயர்5:8,9) நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என் பிதாவே இப்பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும் என்று ஜெபித்தார். ஆனாலும், நம் பாவங்களுக்காகச் செலுத்தத்தக்க வேறொரு கிரயம் இல்லாதிருந்தபடியால் நித்திய நீதி விளங்கும்படியாக மேன்மையானதொரு பலி செலுத்த வேண்டியிருந்தது! பிதாவினிடத்தில் நாம் சேர்வதற்கான வழியாக கிறிஸ்துவானவர் இருக்கிறபடியால் நம் பாவங்களுக்காகச் செலுத்தவேண்டிய முழுக் கிரையத்தையும் அவர் தாமாக முன் வந்து நமக்காகச் செலுத்தினார். ஆனால், இம்மானிடரில் அநேகர் தேவனுடைய கிருபையை ஏற்றுக்கொள்ளத் தவறுகிறார்கள், அப்படிப்பட்டவர்களெல்லாம் தங்கள் பாவக்கடனை நியாயத் தீர்ப்பிலே நிச்சயம் செலுத்த வேண்டும்.

நம் ரட்சகர் நமக்காக அந்தக் கசப்பான பாத்திரத்தை கடைசிச் சொட்டு வரை ருசிபார்த்தார். அதன் விளைவாகக் கோரச் சிலுவையிலே தொங்கி, எல்லாம் முடிந்தது என்று சொல்லி, தன் ஜீவனை பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தார். அதுபோல, நாமும் நம் ஜீவனை கிறிஸ்துவின் மூலம் பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுக்கத் தீர்மானிப்போம். இதினிமித்தம் நாம் சுவிஷேத்திற்குக் கீழ்ப்படிய முடியும். எப்படியெனில், என் சித்தமல்ல, பிதாவே, உம் சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று நம் அநுதின ஜீவியத்தில் ஜெபிப்பதின் மூலமாக அவருடைய அளவில்லா ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். அப்படி ஜெபிக்கிறோமோ? ✞

# அளவில்லா ஞானமுள்ள தேவன்
## THE GOD OF INFINITE KNOWLEDGE

*Wayne Jackson*

**ந**ம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார். அவருடைய அறிவு அளவில்லாதது என்று சங்கீதக்காரன் அறிவித்தார் (சங்கீதம் 147 :5) நம்முடைய **சர்வ ஞானியான** தேவனைப் பற்றி என்னே ஒரு நேர்த்தியான வர்ணனை! **யெகோவா** தேவனுடைய அறிவு எல்லையில்லாததாயிருக்கிறபடியால், அதிலே முக்கால சம்பவங்கள் அனைத்தும் உள்ளடக்கமாயிருக்கிறது.

### I. வரலாற்றுக் காரணிகளைத் தேவன் துல்லியமாக அறிவித்திருக்கிறார்

பிரபஞ்ச மற்றும் மனித இனத்தின் ஆரம்பம் பற்றி அவிசுவாசிகளோடு சில வேளைகளில் நாம் விவாதிக்கும்போது, வேதாகமத்திலுள்ள சிருஷ்டிப்பு சம்பவத்தையும், பரிணாமக் கொள்கையையும் நாம் வேறுபடுத்திக் காட்டுகிறோம். இவைகளை நாம் விஞ்ஞானக் கண்ணோட்டத்தில் பார்த்தால் கூட, விஞ்ஞானத்தோடு வேத வாக்கியங்கள் பொருந்துகிற அளவுக்கு பரிணாமக் கொள்கை பொருந்துவதில்லை. சிருஷ்டிப்பு சம்பவங்களோடு விஞ்ஞானத் தகவல்கள் பொருந்துவது மாத்திரமல்ல, அவைகள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறவைகளுமாயிருக்கின்றன. இன்னொரு கோணத்தில் நாம் பார்த்தால், இப்பிரபஞ்சம் மற்றும் அதிலுள்ளவைகளின் ஆரம்பம் பற்றி நமக்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. அவர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார் என்று தேவன் தமது வேதத்தில் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார் (யாத். 20 : 11). ஆகையால், அவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தபடியால் எல்லாமே அவருக்குத் தெரியும்.

**யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றது போல** ( 2தீமோ. 3:8 ) மோசேயை எதிர்த்தவர்களின் பெயர் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு எப்படித் தெரியும். நிச்சயமாகவே, தேவன் இவ்வரலாற்று உண்மையை பவுலுக்கு வெளிப்படுத்தி தீமோத்தேயுவுக்கு எழுதும்படி ஏவியிருக்கிறார். ஏனென்றால், இத்தகவலை பழைய ஏற்பாட்டின் பக்கங்களில் நாம் எங்கும் காண முடியாது.

## II. நம் சிருஷ்டிகர் நிகழ்காலத்திற்கும் தேவனாயிருக்கிறார்

**கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது** (நீதி. 15:3). நம் தவறுகள் அவருக்குத் தெரியும் ( 2ராஜா. 20:5). நம்முடைய எல்லாத் தேவைகளையும் அவர் அறிந்திருக்கிறார் (மத்தேயு 16 : 8) உண்மையாகவே, அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (எபிரெயர் 4:13).

## III. சம்பவங்கள் சம்பவிக்குமுன்னே அவைகளைத் தேவன் அறிந்தவராயிருக்கிறார்.

பழங்கால இஸ்ரவேலின் ஜனங்கள் விக்கிரக ஆராதனையில் தங்களை மூழ்கடித்தபோது, சில கள்ளத்தீர்க்கதரிசிகளுக்குச் சவால் விடப்பட்டது. **உங்கள் பலமான நியாயங்களை வெளிப்படுத்துங்கள் என்று யாக்கோபின் ராஜா உரைக்கிறார். அவர்கள் அவைகளைக் கொண்டுவந்து சம்பவிக்கப் போகிறவைகளை நமக்குத் தெரிவிக்கட்டும். அவைகளில் முந்தி சம்பவிப்பவைகள் இவைகளென்று சொல்லி, நாம் நம்முடைய மனதை அவைகளின் மேல் வைக்கும்படிக்கும்; பிந்தி சம்பவிப்பவைகளையும் நாம் அறியும்படிக்கும் நமக்குத் தெரிவிக்கட்டும்; வருங்காரியங்களை நமக்கு அறிவிக்கட்டும். பின்வரும் காரியங்களை எங்களுக்குத் தெரிவியுங்கள்; அப்பொழுது நீங்கள் தேவர்கள் என்று அறிவோம்; அல்லது நன்மையாவது தீமையாவது செய்யுங்கள்; அப்பொழுது நாங்கள் திகைத்து ஏகமாய்க் கூடி அதைப் பார்ப்போம்** (ஏசாயா 41:21-23). மெய்யான தேவனால் மட்டுமே நடக்கவிருக்கும் சம்பவங்களை முன்கூட்டியே அறிவிக்க முடியும்.

பழைய ஏற்பாடு ஆயிரத்திற்கும் மேற்பட்ட தீர்க்கதரிசனங்களை உள்ளடக்கியுள்ளது. இத்தீர்க்கதரிசனங்கள் வருங்காலத்தில் என்ன சம்பவிக்கும் என்பதைப் பற்றிய துல்லியமான முன்னறிவிப்புகளாக இருக்கின்றன. அவைகளில் சில, 1. தேசங்கள் சம்பந்தமான தீர்க்கதரிசனங்கள் (தானியேல் 8;ஏசாயா 13) 2. தனி நபர் சம்பந்தமான தீர்க்கதரிசனங்கள் (1ராஜா. 13:2 ) மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இன்னும், மேசியாவின் வருகையைப் பற்றி **300-க்கும்** மேற்பட்ட தீர்க்கதரிசனங்கள் கால வரிசையின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், நம் தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் உண்மையாகவே அழைக்கிறவராயிருக்கிறார் (ரோமர் 4:17). அப்படிப்பட்ட வல்லமையுள்ள யெகோவா தேவன், வருங்காலத்தைப் பற்றி நன்கு அறிந்தவராயிருக்கிறபடியால், நடக்கப்போகிறவைகளை முன்னறிவிக்கும்படி தம்முடைய தீர்க்கதரிசிகளைப் பணிக்க அவரால் முடிந்தது (ஏசாயா 9: 6 ; 53 : 4-6)

## IV. சர்வ ஞானியான சிருஷ்டிகருக்கு நடந்தவைகளும், நடப்பவைகளும் தெரியும்

சவுல் மற்றும் தாவீது சம்பந்தமாக 1 சாமுவேல் 23 –ம் அதிகாரத்தில் ஒரு சம்பவம் இடம் பெற்றுள்ளது. சவுல் ராஜா தாவீது மீது பொறாமை கொண்டு தாவீதை அழிக்க அவரைப் பின் தொடர்ந்தான். தாவீது கேகிலா பட்டணத்தைப் பெலிஸ்தரிடமிருந்து மீட்டு, பின்பு அங்கேயே இருந்தான். சவுல் அதைக் கேள்விப்பட்டு அந்த அரணான பட்டணத்திற்குள்ளேயே தாவீதைக் கொல்லத் திட்டமிட்டான். ஆனால், அத்திட்டத்தை தாவீது கேள்விப்பட்டு அது சம்பந்தமாக யெகோவா தேவனிடம் போய் விசாரித்தான். கேகிலா பட்டணத்தார் என்னை அவன் கையில் ஒப்புக்கொடுப்பார்களோ உம்முடைய அடியான் கேள்விப்பட்டபடி சவுல் வருவானோ. இஸ்ரேவின் தேவனாகிய கர்த்தாவே இதை அடியானுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றான். அதற்குக் கர்த்தர் அவன் வருவான் என்றார். அதன்படி தாவீது தன் படையைக் கூட்டிக்கொண்டு அப்பட்டணத்தை விட்டு வெளியேறி வனாந்தரத்திலே அடைக்கலம் புகுந்தான்.

அப்பட்டணத்திலிருந்து தாவீது தப்பியோடியதைக் கேள்விப்பட்ட சவுல் அங்கே வராமல், வேறு இடங்களில் தாவீதைத் தேடினான். தேவன் தாவீதோடு இருந்தபடியால் சவுலின் கைக்கு அவனைத் தப்புவித்தார். அதுமாத்திரமல்ல, சர்வ ஞானியான நம் தேவன் சம்பவிக்கப்போகிற காரியங்களை எவ்வளவு துல்லியமாக முன்னறிவித்திருக்கிறார் பாருங்கள். இச்சம்பவம் நம் சிருஷ்டிகரின் ஒப்பிடமுடியாத அறிவுக்கு மிகவும் அருமையான வர்ணனையாயிருக்கிறது என்றால் அது மிகையல்ல. ✝

### தேவனுக்கு மாத்திரமே தெரியும்.

**தேவனுக்கு மாத்திரமே** கடந்த காலம் பற்றி முழுமையாகத் தெரியும்.

**தேவனுக்கு மாத்திரமே** நிகழ் காலம் பற்றி முழுமையாகத் தெரியும்.

**தேவனுக்கு மாத்திரமே** எதிர் காலம் பற்றியும் முழுமையாகத் தெரியும்.

தேவன்

# இயேசுவும், பெண்களும்

## Jesus and Women

*Tom Kelton*



**யூ**தன் ஒருவன் ஒரு ஸ்திரீயை வழியிலே பார்த்தால் அவளுக்கு வாழ்த்துச் சொல்லுவதுமில்லை, அவளிடம் அதிகமாகப் பேசுவதுமில்லை. அவன், தன் காலைநேர ஜெபத்தில் தான் ஒரு புறஜாதியானாக, அடிமையாக, ஒரு பெண்ணாகப் பிறக்காததற்காகத் தேவனை ஸ்தோத்தரிப்பானாம். ஏனென்றால், யூதர்களைப் பொறுத்தவரை, பெண்களுக்கு நியாயப்பிரமாணத்தின் காரியங்களைப் போதிப்பதை அவமரியாதையாக நினைத்தனர்.

அப்படிப்பட்ட நாட்களில் பெண்களைப் பற்றிய கிறிஸ்துவின் மனநிலை மிகவும் மேலானதாக இருந்தது. கிறிஸ்து இப்பூவுலகில் பிறந்ததே கன்னி மரியாளின் உண்மைத் தன்மையின் காரணமாகத் தான். மரியாள் பரிசுத்த ஆவியானவர் தன்னில் கிரியை நடப்பிக்க எளிமையாகவும், உண்மையாகவும் ஒத்துழைப்புக் கொடுத்தாள். அதேபோல், அன்னாள், எலிசெபத் போன்ற ஸ்திரீகளும் தேவசித்தத்திற்குத் தங்களை முழுமையாக ஒப்புக்கொடுத்து, மற்ற ஸ்திரீகளுக்கு மத்தியில் தனித்துவம் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்தார்கள் என்பதை நாம் வேதத்தின் வாயிலாக நன்கு அறிந்திருக்கிறோம். இயேசு கிறிஸ்து தம்முடைய ஊழியத்தைத் தொடங்கினபோது, ஸ்திரீகளில் சிலரும் அவரோடு கூட ஊழியத்தில் உடன் இருந்தார்கள் என்று வேதம் சாட்சி பகருகிறது (லூக்கா 8:1-3; மாற்கு 15:40-41).

### கிறிஸ்துவின் பார்வையில் பெண்கள் மதிப்பு மிக்கவர்கள்

ஒரு சமயம் இயேசு கிறிஸ்து, சீகார் என்னும் ஊரில் ஒரு கிணற்றருகே அமர்ந்திருந்தார். அப்பொழுது, அவருடைய சீஷர்கள் உணவு வாங்கி வரச் சென்றார்கள். உணவுடன் வந்த அவர்கள் அங்கே கண்ட காட்சியைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். அவர்கள் அப்படி ஆச்சரியமடைந்ததற்குக் காரணம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சமாரியா ஸ்திரீயிடம் பேசிக்கொண்டிருந்தார். இயேசு கிறிஸ்து தன்னிடம் பேசினதால் அவளும் ஆச்சிரியத்தில் மூழ்கிப் போயிருந்தாள். ஏனென்றால், யூதர்கள் சமாரியர்களுடனே பேசுவதை அவமரியாதையாக நினைத்தனர். ஆனால், இயேசுவோ சமாரியர் மாத்திரமல்ல, அவள் ஒரு பெண் என்றபோதிலும் அவளிடம் உரையாடின செயலின் மூலமாக பெண்ணின் மதிப்பு கிறிஸ்துவின் மூலமாக மேலோங்கியுள்ளதை நாம் காண்கிறோம். பெண்கள் மதிப்பு மிக்கவர்கள்.

**இயேசுவுக்கு பெண்களின் மீது மிகுந்த அக்கறை இருந்தது**

மற்றொரு சமயம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக விபச்சாரக் குற்றத்தில் அகப்பட்ட ஒரு ஸ்திரீயைக் கொண்டு வந்தார்கள். ஏனென்றால், கிறிஸ்துவை அவர்கள் சாமர்த்தியமாகச் சிக்கவைக்க முயற்சித்தார்கள், எப்படியெனில், கிறிஸ்து அந்த ஸ்திரீயைக் கல்லெறியச் சொன்னால் ஜீவனுக்கும் மரணத்திற்கும் அதிகாரம் உடைய ரோம சாம்ராஜ்யத்திற்கு எதிராக செயல்படுகிறார் என்பதற்காகவும், அவளைத் தண்டிக்காமல் விட்டுவிட்டால் மோசேயின் பிரமாணத்தின்படி விபச்சாரத்தில் ஈடுபடுகிறவர்கள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்பதற்காகவும் அவளை அவர் முன் அவர்கள் நிறுத்தினார்கள்.

ஆனால், கிறிஸ்துவோ அவர்களுடைய வஞ்சகப் பசிக்கு இரையாகாமல் மிகவும் சாதுர்யமாக, உங்களில் பாவம் இல்லாதவன் எவனோ, அவன் இவளை முதலில் கல்லெறியட்டும் என்று சொன்னார். அப்பொழுது, அங்கே பெரியோர் முதல் சிறியோர் வரை ஒருவரும் நிற்கக் கூடத் தகுதியில்லாமல் சென்றுவிட்டனர். அப்பொழுது, **இயேசு அவளைப் பார்த்து: நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை நீ போ இனிப் பாவஞ்செய்யாதே** என்றார். இச்செயலிலிருந்து நாம் காண்பது, இயேசுவுக்கு ஸ்திரீகளின் மீது இருந்த அக்கறையை வெளிப்படுத்துகிறது.

**இயேசுகிறிஸ்து தமது சபையில் பெண்களுக்கு ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார்.**

இயேசு கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் போது, ஸ்திரீகள் அவர் மீது கொண்ட அக்கறையை நம்மால் காண முடியும். எப்படியெனில், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு அவர்கள் தான் முதல் சாட்சிகளாயிருந்தார்கள். கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்த செய்தியை சீஷர்களுக்கு முதலில் அறிவித்தவர்களே ஸ்திரீகள்தான்.

நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் மற்றும் நிருபங்களில் பார்க்கும் போது கிறிஸ்துவப் பெண்கள் மிகவும் உற்சாகமாகச் செயல்பட்டிருக்கிறார்கள். இது, இந்நாட்களில் இருக்கும் பெண்களின் மன நிலையோடு முற்றிலும் மாறுபட்டு இருக்கிறது. அன்று சத்தியத்தைக் கேட்டு விசுவாசித்த பெண்கள் ஞானஸ்நானம் பெற்று சபைக்குள் சேர்க்கப்பட்டனர். கிறிஸ்துவுக்குள் ஆணென்றுமில்லை, பெண்ணென்றுமில்லை. ரோமர் 16:1-3-ம் வசனங்களில் பெபேயாள் என்ற பெண் அப்போஸ்தலன் பவுலால், நம்முடைய சகோதரி என்று அழைக்கப்பட்டாள்.

இன்னும் சில ஸ்திரீகள் பவுலின் நிருங்களில் உடன் வேலையாட்கள் என்று அழைக்கப்பட்டிருக்கிறாகள். மேலும், பிரிஸ்கில்லா என்னும் ஸ்திரீதன் கணவனாகிய ஆக்கில்லா, அப்பொல்லோ என்னும் மாபெரும் மனிதனுக்கு வசனத்தைப் போதித்தபோது உடனிருந்தாள் (அப்.18:26). பிலிப்பு என்னும் சுவிசேஷகனுக்கும் தீர்க்கதரிசனம் சொல்லுகிற நான்கு குமாரத்திகள் இருந்தார்கள் (அப். 21:9).

இயேசு கிறிஸ்துவும் அவருடைய சபையில் ஸ்திரீகளுக்கு என்று மிகப்பெரிய ஆசீர்வாதத்தை வைத்திருக்கிறார். எப்படியெனில், ஸ்திரீகள் விலையேறப்பெற்ற பொக்கிஷங்களாக, சபையிலே மிகச் சிறந்த இடத்தில் தேவனால் வைக்கப்பட்டிருக்கிறார்கள். ✝

# பரிபூரண மேய்ப்பனிடமிருந்து பரிபூரண ஜீவன்

**உ**லகிலுள்ள பெரும்பாலோரின் விருப்பமான வசனப்பகுதி சங்கீதம் 23. பரிபூரணத்தை வாக்குத்தத்தம் செய்கிறது. தேவன் எல்லையில்லா பண்டக சாலையாக இருக்கிறார். சங்கீதக்காரன் வெளிப்படுத்தினபடியே **கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்; நான் தாழ்ச்சியடைேன்** என்பது எவ்வளவு உண்மையாயிருக்கிறது. சங்கீதக்காரனின் கூற்றுப்படி நல்ல மேய்ப்பன் கீழ்க்காணும் காரியங்களைத் தருகிறார்.

| | | |
|---|---|---|
| ஆகாரம் | - | அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து |
| தண்ணீர் | - | அவர் அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் கொண்டுபோய் விடுகிறார் |
| புத்துணர்வு | - | அவர் என் ஆத்துமாவைத் தேற்றி |
| வழிகாட்டி | - | அவர் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார் |
| நிச்சயம் | - | நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் |
| விடுதலை | - | பொல்லாப்புக்குப் பயப்படேன் |
| ஐக்கியம் | - | தேவரீர் என்னோடே கூட இருக்கிறார் |
| ஒழுங்கு | - | உமது கோல் |
| மீட்பு | - | உமது தடி |
| தேறுதல் | - | என்னைத் தேற்றும் |
| செழுமை | - | நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி |
| சுகம் | - | என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர் |
| மகிழ்ச்சி | - | என் பாத்திரம் நிரம்பி வழிகிறது |
| விசுவாசம் | - | நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும் |
| நம்பிக்கை | - | என் ஜீவனுள்ள நாளெல்லாம் |
| சுதந்திரம் | - | நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். |

**நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் (பிலிப்பியர் 3:20).**

# தேவன், வேதாகமம் மற்றும் அறிவியல்

## God, the Bible and Science

Travis L. Quertemous



**வே**தாகமமும், விஞ்ஞான அறிவியலும் முரண்பாடான ஒன்றாகவே பலரால் பார்க்கப்படுகிறது. விஞ்ஞானிகளும், தத்துவ ஞானிகளும் கூட விஞ்ஞானத்தின் முடிவுகளையும் வேதாகமத்தின் அற்புதமான செயல்பாடுகளையும் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், ஒருவர் இவை இரண்டில் ஒன்றைத்தான் தெரிந்திருக்க வேண்டும் என்றும் சொல்கின்றனர். அதாவது, அது விஞ்ஞான அறிவாகவும் இருக்கலாம் அல்லது அது வேதாகம அறிவாகவும் இருக்கலாம் என்பதே அவர்களின் கூற்று.

நவீன விஞ்ஞான அறிவுக்குக் காரண கர்த்தாவாக இருந்த மாபெரும் கண்டுபிடிப்பாளர்கள் எல்லாம், தேவன் மீது விசுவாசம் கொண்டு வேதாகமத்தின் பக்கங்களிலுள்ள தேவனுடைய வியத்தகு மகத்துவங்களைப் பார்த்து ஆச்சரியமடைந்தவர்கள் தான். அத்தகைய விஞ்ஞானிகளில் சிலர் கலிலியோ, காப்பர் நிக்கஸ், ஐசக் நியூட்டன், ரைட் சகோதரர்கள், மார்க்கோனி, அலெக்ஸாண்டர் பிளமிங் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். இந்த அறிவியலாளர்கள் எல்லாம் வேதாகமத்திற்கும், விஞ்ஞானத்திற்குமிடையே எவ்வித முரண்பாடும் இல்லை என்கிறார்கள். ஆகவேதான், அவர்களெல்லாரும் விஞ்ஞான வித்தகர்களாக இருந்தபோதிலும், தேவனைப் பற்றும் விசுவாசத்தில் ஒருபோதும் தளர்ந்து போகவில்லை.

ஆனாலும், டார்வின், தாமஸ் ஆல்வா எடிசன், அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல், ஸ்டீபன் ஹாகிங்யேண்டி போன்ற மிகக் குறைவான எண்ணிக்கையிலான விஞ்ஞானிகள் உண்மையான தேவனை விசுவாசிக்கவில்லை. இவர்களுக்கு விஞ்ஞான அறிவு இருந்தபோதிலும், இயற்கையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்து வேத வாக்கியங்களை மனுக்குலத்திற்கு கொடையாகக் கொடுத்தவர் தேவன் தான் என்னும் உண்மையை இவர்களால் ஏனோ புரிந்துகொள்ள முடியவில்லை. இதுபற்றி, 1தீமோ. 6:20-ல் குறிப்பிட்டுள்ளபடி, **ஞானமென்று பொய்யாய்ப் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கு விலகு** என்னும் பவுலினால் எழுதப்பட்ட தேவ எச்சரிப்புக்கு நாம் செவிசாய்க்க வேண்டும். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், **கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக் கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள் என்றார்** (மத்.7:15). எனவே, விசுவாசக் குலைச்சலைத் தரும் விஞ்ஞானம் நம்மை ஒருபோதும் பரம் சேர்க்காது என்பதால், பரமனின் வார்த்தைக்குச் செவி சாய்த்து பரலோகில் பரம பிதாவோடு என்றென்றும் வாசம் செய்வோம். ✞

# அவருக்குள் ஜீவன் இருந்தது

## In Him was life

*Stanley E. Sayers*



**வி**ஞ்ஞானிகள் பல காரியங்களை அறிந்திருக்கிறபடியால், அவர்கள் பல காரியங்களுக்கு விளக்கம் அளிக்கிறார்கள். ஆனால், உயிர் எப்படி உருவானது என்கிற கேள்விக்கு சாத்தியமில்லாத பதிலைத்தான் அவர்களால் தரமுடிகிறது. ஜீவராசிகளின் தோற்றத்திற்கு அவர்கள் எவ்வளவு பின்னே செல்லமுடியுமோ அவ்வளவு பின்னே செல்கிறார்கள். எப்படியெனில், அவர்கள் டைனோசர்களின் எலும்புகளையும், மண்ணில் புதைந்து கிடக்கும் படிமங்களையும் ஆதாரமாக வைத்து, ஜீவராசிகளின் தோற்றம் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக இருக்கலாம் என்று தோராயமாகச் சொல்லுகிறார்களே தவிர, அதை அவர்களால் குறிப்பிட்டுச் சொல்ல முடிவதில்லை.

டார்வின் இங்கிலாந்தில் உள்ள ஒரு சபையில் ஊழியக்காரராகத்தான் தன் வாழ்க்கையைத் தொடங்கினார். பின்பு ஏனோ தனது மனதை மாற்றிக் கொண்டார். எப்படியெனில், இவ்வுலகிலுள்ள ஜீவராசிகளெல்லாம் தெய்வீக ஆரம்பமில்லாமல் இருந்திருந்தால் எப்படியிருந்திருக்குமென்று ஒரு கொள்கை வகுத்தார். அதை உறுதிப்படுத்த பல இடங்களுக்கும் பயணித்து ஜீவராசிகளை உன்னிப்பாகக் கவனித்து, ஜீவராசிகளின் ஆரம்பம் என்னும் தலைப்பில் ஒரு புத்தகத்தை எழுதினார். அவர் அப்படி எழுதியபோதிலும் ஜீவராசிகளின் தொடக்கத்தை (அ) ஆரம்பத்தை அவரால் தெளிவாக விவரிக்க முடியவில்லை. ஜீவராசிகளெல்லாம் தானாவே தோன்றினது என்பது நூற்றாண்டு பழமை வாய்ந்த வாதமாக இருந்ததாலும், சாத்தியமில்லாத ஒன்றாக இருந்ததாலும் விஞ்ஞானிகள் அதை நிராகரித்து விட்டார்கள்.

ஆதியாகமப் புத்தகம், டார்வினின் மனதிலிருந்து நிச்சயம் மறைந்திருக்காது. ஆனாலும், ஜீவராசிகளெல்லாம் தேவனால் தோற்றுவிக்கப்படவில்லையென்பது அவருடைய வாதமாயிருந்தது. ஆதியாகமம் என்பதின் பொருள் ஆரம்பங்கள் என்பதாகும். அதை மறந்து டார்வின் ஜீவராசிகளின் ஆரம்பம் என்னும் புத்தகத்தை வெளியிட்ட முதல் நாளிலேயே அனைத்துப் புத்தகங்களும் விற்பனையாகிவிட்டன. அப்படி விற்பனையான அப்புத்தகமோ அல்லது வேறெந்த விஞ்ஞானமோ ஜீவனின் ஆரம்பத்தை விளக்க முடியவில்லை என்பதே இன்றுவரை உண்மையாயிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய சுவிசேஷப் புத்தகத்தில் ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை, அவருக்குள் ஜீவன் இருந்தது அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருந்தது (யோவான் 1:1-4) என்று குறிப்பிட்டுள்ளார். அவரிடத்திலிருந்து தான் நாம் ஜீவனைப் பெற்றுக்கொள்கிறோம் . மனிதன் உட்பட, எல்லா ஜீவனும் அவரிடத்திலிருந்துதான் உண்டாகிறது. (ஆதியாகமம் 1:1-31) என்று காண்கிறோம். ஆனால், சார்லஸ் டார்வின் ஒரே மூதாதையரிடமிருந்துதான் எல்லா ஜீவராசிகளும் தோன்றின என்று வாதாடினார். அப்படி அவர் வாதம் செய்தாலும், அந்த மூதாதையரின் ஆரம்பம் என்ன? அல்லது அவர் எங்கேயிருந்து வந்தார் என்பதை விளக்க முயற்சிக்கவில்லை என்பதுதான் ஆச்சிரியமான காரியம். அதேவேளையில், இதை விவரிக்க வேதாகமத்திற்கு எந்தச் சிரமும் இல்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது. ஆக ஜீவனின் ஆரம்பம் தேவனுடைய வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தான் (யோவான் 1:4; வெளி19:13). தேவன் இயேசு கிறிஸ்துவைக் கொண்டு உலகங்களை உண்டாக்கினார் என்று எபிரெயர் ஆசிரியரும் (1:2), அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை என்று யோவான் ஆசிரியரும் (1:10) குறிப்பிட்டுள்ளனர். ஆகையால், வார்த்தையாகிய கிறிஸ்துவின் மூலமாகத்தான் தேவன் இவ்வுலகத்தை உண்டாக்கினார் என்னும் உண்மையை வேதம் உரக்கச் சொல்லுகிறது.

தேவனும், கிறிஸ்துவும் நமக்குள் வாசம் செய்கிறார்கள் (யோவான் 14:23). அப்படி வாசம்செய்கிற தேவன், உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் நம்மை ஒப்புரவாக்கினார் (2கொரி.5:19). கிறிஸ்துவும் அந்தக் கல்வாரி சிலுவையை நெருங்கும் நேரத்திற்கு முன்பாக இவ்விதம் ஜெபித்தார். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் (யோவான் 17:20,21).

தேவனுடைய செயல்பாடுகள் கிறிஸ்துவுக்குள் நிறைவேறினதாயிருக்கிறபடியால், விஞ்ஞானிகளால் ஒரு குறிப்பிட்ட அளவு மட்டும் காரியங்களை விளக்கமுடியுமே தவிர, அதற்கு அப்பால் என்ன இருக்கிறது என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை (மரணம், பரலோகம், நரகம்). டார்வின் ஒரு நாத்திகனாயிருக்கவில்லையாதலால், அவர் தன் இறுதி நாட்களில் இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தவர் ஒருவர் இருக்கிறாரா என்ற கேள்விக்குப் பதிலாக, ஆம், உறுதியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார். Thosmas jaffer jon என்பவரும் இவ்வுலகத்தின் காரியத்தைப் பராமரிக்கிற ஓர் மாபெரும் வல்லமை உண்மையாகவே இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வுலகங்களைத் தம் பாலகன் மூலம் படைத்தாளும் தேவாதி தேவன் என்று வேதம் விளம்புகிறது. ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார் (ஆதி.15:6). சிருஷ்டிப்பின் காரியங்களிலும் நம் விசுவாசம் ஆபிரகாமின் விசுவாசத்தைப் போல ஜொலிக்க வேண்டும். ✞

# வெளிச்சம் உண்டாகக் கடவது

## Let There be Light

*Wayne Jackson*



**சி**ருஷ்டிப்பு வாரத்தின் முதல் நாளில், தேவன் வெளிச்சம் உண்டாகக்கடவது என்றார் (ஆதி. 1:3) முதல் முறையாக வெளிச்சம் உண்டானது. வெளிச்சம் என்றால் என்ன? அது ஒளிக்கதிர்களில் இருக்கும் ஆற்றலின் ஒரு வெளிப்பாடு. தேவன் ஒருமுறை பழங்கால ஞானியான யோபுவிடம் இவ்விதமாகக் கேட்டார். வெளிச்சம் வாசமாயிருக்கும் இடத்துக்கு வழியெங்கே? என்று (யோபு. 38:19). வெளிச்சம் ஒரு வழியிலிருந்து நேர்கோட்டில் நகர்கிறது என்பது ஓர் ஆச்சிரியமான உண்மை. **ஒளியானது ஒரு நொடிக்கு 1,86,000 மைல்கள் வேகத்தில்** பயணிக்கிறது. சூரிய ஒளி பூமிக்கு வந்தடைய எட்டு நிமிடங்களுக்கு மேலாகும். (சூரியன் பூமியிலிருந்து 93 மில்லியன் தூரத்தில் உள்ளது.)

தேவன் உண்டாக்கின எல்லாமே மிகவும் நன்றாயிருந்தது (ஆதி.1:31). இதில் வெளிச்சமும் உள்ளடக்கம். வெளிச்சம் நல்லது. ஏனென்றால், அது இல்லையென்றால் நம்மால் மேகத்தை, பறவைகளை, பசும்புல்லை, அவ்வளவு ஏன் நாம் படிக்கும் எழுத்துக்களைக்கூட நம்மால் பார்க்க முடியாது. நாம் பொருள்களைத் தெளிவாகவோ, மங்கலாகவே பார்ப்பது அவைகளில் மீது எவ்வளவு ஒளிக்கதிர்கள் வருகிறது என்பதைப் பொறுத்து தான் அமையும்.

வெளிச்சம் நல்லது. ஏனென்றால், அது இல்லாமல் செடிகள் வளராது. அதன் விளைவாக நாம் உண்பதற்கு நமக்கு காய்கறிகள் கிடைக்காது. அதுபோல, மிருகங்கள் வாழ்வதற்குத் தேவையான தாவரங்கள் இல்லாத காரணத்தால் நாம் உண்பதற்கு மாம்சமும் கிடைக்காது. வெளிச்சம் நல்லது. ஏனென்றால், அது இருளில் மிக வேகமாக வளரும் கிருமிகளைக் கொல்லுகிறது. அந்தக் கிருமிகள் நமக்குத் தீங்கிழைக்கக் கூடியவைகள். மருத்துவர்கள் அறுசுவை சிகிச்சை செய்வதற்கு கூட வெளிச்சத்தைப் பயன்படுத்துகிறார்கள். லேசர் அறுவை சிகிச்சையைக் குறித்து கேள்விப்பட்டிருக்கிறீர்களா? தேவன் வெளிச்சத்தை உண்டாக்கினதற்காக அவருக்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும் பாருங்கள்!



# வேதாகமம்

## THE BIBLE

*N.B. Hardeman*

**ஆ**தியாகமம் முதல் வசனம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் கடைசி வசனம் வரை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளுகிற கால அளவின்படியே ஏறத்தாழ **4100** ஆண்டுகால வரலாற்றுச் சம்பவங்கள் வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கிறது. வேதாகமத்தின் முதல் எழுத்தாளராகிய மோசேயிலிருந்து, கடைசி எழுத்தாளராகிய யோவான் வரை சுமார் **1600** வருடங்களாக வேதாகமம் எழுதப்பட்டுள்ளது. கிறிஸ்து பிறப்பதற்கு ஏறக்குறைய **100** வருடங்களுக்குப் பின்பாகவும் வாழ்ந்தவர்கள், இப்பரிசுத்த வேதாகமத்தை எழுதியிருக்கிறார்கள். அப்படியென்றால், நமக்குள்ளாக எழுகின்ற ஒரு கேள்வி, யார் அந்த மனிதர்கள்? அவர்கள் கல்லூரிப் பேராசிரியர்களா? அல்லது அவர்கள் எழுத்தாளர் குடும்பத்திலிருந்து வந்தவர்களா? இல்லை. அப்படியென்றால் அவர்கள் யார்?

வேதாகமத்தை எழுதியவர்களின் மூதாதையரில் அநேகர், தங்கள் வாழ்க்கையின் பெரும்பகுதியை எகிப்திலே அடிமைகளாகக் கழித்தவர்கள். அவ்வெழுத்தாளர்களின் பிதாக்கள் சுட்டெரிக்கும் சூரியனுக்குத் தங்கள் முதுகைக் காட்டினவர்கள் போல, எகிப்தின் ஆளோட்டிகளினால் அடிபட்டு மிகக் கடுமையான வேலை செய்து, பூண்டு, வெங்காயம் போன்றவற்றைச் சாப்பிட்டு உயிர்வாழ்ந்தவர்கள். அல்லாமலும், ஸ்திரீகள் பிள்ளைகள் தவிர்த்து ஆறுலட்சம் புருஷர்கள் செங்கடலைக் கடந்து, வனாந்தரத்தில் வாசம் செய்து, வானத்தின் மன்னாவால் போஷிக்கப்பட்டவர்களின் சந்ததி, கடைசியாக, கானானுக்குள் பிரவேசித்தார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு, தகவல்களைச் சேகரித்து எழுத நூலகங்களோ, தினசரி செய்தித்தாள்களோ, தொலைக்காட்சியோ, வானொலியோ அல்லது வேறெந்தவிதமான தகவல் தொடர்பு சாதனங்களோ இருக்கவில்லை. மேலும், அவர்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து தேவனுக்கு முன்பாக உண்மையுள்ளவர்களாயிருந்தபடியால், தேவ ஆவியின் துணைகொண்டு எழுதினார்கள். அப்படி எழுதின எல்லோரும் முரண்பாடற்ற ஒன்றுக்கொண்டு தொடர்புடைய காரியங்களை ஆச்சரியமான வகையில் எழுதியிருக்கிறார்கள். உதாரணமாக, மனிதன், மனிதனுடைய ஆரம்பம், கடமை, அவன் சேருமிடம் போன்றவற்றை எழுதினவர்கள் எல்லோரும், ஒரே மாதிரியாகத்தான் எழுதினார்கள். நாற்பது தேவதாசர்கள்

**4100** வருட வரலாற்றை **66** புத்தகங்களில் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்களுடைய வரலாற்று வாக்கியங்களில் கொஞ்சம்கூட முரண்பாடுமில்லை, அவர்களுடைய அறநெறிப் போதனைகளில் துளிகூட வித்தியாசமுமில்லை.

பொதுவாக, இரண்டு மனிதர்கள் ஒரே காரியத்தைப் பற்றி எழுதும்போது, அதிலே முரண்பாடான காரியங்கள் காணப்படுகிறதை நாம் காண்கிறோம். எந்தவொரு மனிதனும் ஒரேவிதமான காரியத்தைப் பலவருடங்களாக ஒரேமாதிரியாக எழுதமுடியாது என்பதை எல்லோரும் அறிந்ததே. ஏனென்றால், நிச்சயமாக அதிலே அநேக வேறுபாடுகள் காணப்படும். ஆனால், வேதாகம எழுத்தாளர்கள் மத்தியில் அப்படிப்பட்ட வேறுபாடோ, முரண்பாடோ இதுவரை காணப்படவில்லை. இப்படிப்பட்ட காரியங்களைக் குறித்து நாம் மற்றவர்களுக்கு விளக்கிச் சொல்லவேண்டும். தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள் (2பேதுரு 1:21) என்று எடுத்துக்கூறி, மற்றவர்களும் வேதாமத்தின் வெளிச்சத்திலே வழிநடக்க நன்மை செய்வோம். ✞

## ஏன் தாமதிக்கிறார்கள்?

- சத்தியத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததால்
  (அப்போஸ்தலர் 17:32)
- சத்தியத்திற்கு கீழ்படியத் தேவையில்லை என்று நினைப்பதால்
  (அப்போஸ்தலர் 24:25)
- உலகத்தை அதிகம் சிநேகிப்பதால்
  (யோவான் 12:42)
- சத்தியத்தில் நிலைத்திருக்க முடியாதென்று நினைப்பதால்
  (மத்தேயு 10:22)
- கொடுக்க வேண்டிய விலை அதிகமென்று எண்ணுவதால்
  (மாற்கு 8:34)

**ஆயினும், சத்தியத்திற்குக் கீழ்ப்படிய பவுல் தாமதிக்கவில்லை.**

**நீங்கள் எப்படி?**

# நீங்கள் புரிந்துகொள்ளத்தக்கதாக வாசிக்கிறீர்களா?

## *Are You Reading to Understand ?*

Rod Kyle

**நா**ம் ஒரு புத்தகத்தை வாசிக்கும்போது, அதைக் தவறாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்று ஒருபோதும் நினைப்பதில்லை. இருந்த போதிலும், பொதுவாக இதுதான் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், வேதாகமம் அப்படியிராமல், நம்மைப் பரலோகத்திற்கு அழைத்துச்செல்லும் தேவனுடைய ஒரே வழிகாட்டியாக இருக்கிறது (லூக்கா 16:29,31). ஆகவே, நாம் வேதாகமத்தை சரியாகப் புரிந்துகொள்வது எவ்வளவு முக்கியமானது என்று, புதிய ஏற்பாடு கீழ்க்காணும் காரியங்கள் மூலமாக நமக்குப் போதிக்கிறது.

### நேரடியான கட்டளைகள் மூலமாக

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மத்தேயு 20:28 - ல் கட்டளையிட்ட எல்லாக் கட்டளைகளையும், தேவ ஆவியினால் ஏவப்பட்ட தேவதாசர்கள், புதிய ஏற்பாட்டின் பக்கங்களிலே பதிவு செய்திருக்கிறார்கள் ( யோவான் 16:13; 2தீமோத்தேயு 3:16 ). இக்கட்டளைகள் இன்றும் நம்மைக் கட்டுப்படுத்துகிறவைகளாயிருக்கிறபடியால் அவைகளுக்கு நாம் முழுமையாகக் கீழ்ப்படியவேண்டும். மேலும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, நாம் கைக் கொள்ளும்படியாகவே இப்படிப்பட்ட நேரடியான அல்லது குறிப்பிட்ட கட்டளைகளைக் கொடுத்திருக்கிறார்.

### பொதுவான கட்டளைகள் மூலமாக

நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்று யோவான் 4:7 நமக்குப் போதிக்கிறது. இப்பொதுவான கட்டளையை, தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் தனித்தனியே பின்பற்றவேண்டியது நமது கடமையாகும். ஏனென்றால், புதிய ஏற்பாடு எப்போதுமே செயல்பாட்டை உள்ளடக்கிய ஆரோக்கியமான கட்டளைகளால் நிரம்பியிருக்கிறது.

### ஆதார வசனங்களின் கட்டளைகள் மூலமாக

புதிய ஏற்பாட்டில் நாம் கடைபிடிக்கும்படியான ஆதார வசனங்கள் உண்மையாகவே, தேவனால் கட்டளையிடப்பட்ட செயல்பாடுகளாகவே இருக்கின்றன. எப்படியெனில், விசுவாசிகள் கர்த்தருடைய பந்தியை வாரத்தின் முதல்நாளில் அநுசரிக்க வேண்டுமென்று அப்.20:7 நமக்குப் போதிக்கிறது. பந்தியை அநுசரிக்க வேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டு ( லூக்கா 22:19,20 ), அதை எப்போதெல்லாம் அநுசரிக்க வேண்டுமென்று தேவ

ஆவியினால் ஏவப்பட்ட தமது அப்போஸ்தலர்களிடத்திலே அதன் பொறுப்பை விட்டுவிட்டார். அவர்களும் புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டிருக்கிற கர்த்தரின் கட்டளைகளோடு தொடர்புபடுத்தி, அதற்கு ஆதாராகமாக அப். 20:7-ன் படி வாரத்தின் முதல்நாளிலே அநுசரித்தார்கள்.

**மௌனத்தின் மூலமாக**

ஆம், வேதாகமம் மௌனமாயிருந்து நமக்குப் போதிக்கிறது. இது பொதுவாக விலக்கல் விதி என்றழைக்கப்படுகிறது. தேவன் நேர்மறையாகக் கட்டளையிடும்போது, அவர் என்ன விரும்புகிறாரோ அதை வெளிப்படுத்துகிறார். சிலவேளைகளில், அவருடைய மௌனம், மனிதர்களால் புகுத்தப்படும் புதுமைகளையும், இணைப்புகளையும் முற்றிலுமாக விலக்குவதாகவே இருக்கிறது. எப்படியெனில், தேவன் நமக்கு ஒரு குறிப்பிட்ட கட்டளையைக் கொடுத்துவிட்டு, அவர் விருப்பமில்லாத காரியங்களைப் பட்டியலிடுவதாக இருந்தால், வேதாகமத்தின் பக்கங்கள் போதாது. உதாரணமாக, நோவா பேழையை எந்த மரத்தில் கட்டும்படி தேவனிடம் கட்டளை பெற்றான் (ஆதி. 6:14). ஒருவேளை நோவா, கேதுரு மரத்தின் பலகைகளால் அப்பேழையை உண்டுபண்ணியிருந்தால், அவர் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க முடியுமா? முடியாது. ஆனால், மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தாரோ, தேவன் மதசம்பந்தமான காரியங்களில் வெளிப்படையாகக் கண்டிக்காதவைகளை எப்படி வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளலாம் என்ற மாபெரும் பிழையைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாகத் தான் இன்று உலகில் எண்ணற்ற மத அமைப்புகள் உருவாகி கிறிஸ்தவ மார்க்கத்தைச் சீர்குலைத்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், நீங்கள் தேவன் தம்முடைய வார்த்தைகளில் வைத்திருக்கிற திறவுகோல்களைப் பயன்படுத்துகிறீர்களா? அப். 8:31-ல் காணப்படும் எத்தியோப்பிய மந்திரிக்கு ஆவிக்குரிய உதவி தேவைப்பட்டது போல் உங்களுக்கும் தேவைப்படுகிறதா? நீங்கள் வாசிக்கிற வேதாகம உபதேசத்தின் கருத்துக்கள் உங்களுக்குப் புரிகிறதா? ஏனென்றால், உங்கள் நித்திய வாழ்வு நீங்கள் கூறும் பதிலை வைத்தே அமைகிறது. ✝

## கிறிஸ்தவம் இலவசமா?

**தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விலையாகக் கொடுத்தார். ஆகவே, நாம் நம்முடைய சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தாலொழிய வேறெந்த பரிசையும் நம்மிடமிருந்து ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**நம் பணம் அல்லது நேரம் அல்லது தாலந்துகளையோ அல்லது உடைமைகளையோ அவர் ஏற்றுக் கொள்வதில்லை. வேதவாக்கியங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிற வைகளை நாம் ஆரம்பத்திலிருந்தே பின்பற்றினால் பத்தில் ஒரு பங்குக்கு குறைவாகக் கொடுக்க நாம் துணிய மாட்டோம்.**

# தன்னிகரில்லா புத்தகம்

## *A BOOK LIKE NO OTHER*

Grady Miller

**வே**தாகமத்தின் தன்னிகரற்ற தன்மை அப்புத்தகத்தை விவரிக்கும் நான்கு வார்த்தைகளில் காணப்படுகிறது. அவை **வெளிப்பாடு, ஏவப்படுதல் பிழையற்ற தன்மை** மற்றும் **அதிகாரம்** போன்ற வார்த்தைகள்தான்.

**வெளிப்பாடு**

வேதாகமத்தின் ஆரம்பத்தை வெளிப்பாடு காட்டுகிறது. இது தேவனுடைய மனதிலிருந்த மனிதனுக்கான செய்தியாகும். **வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளை யுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது. தீர்க்க தரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாக்கவில்லை; தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்** என்று அப்போஸ்தலன் பேதுரு அறிவித்தார் (2பேதுரு 1 :20,21). இங்கே, ஏவப்பட்டு என்னும் வார்த்தைக்கு மூலபாஷையிலே கப்பலின் பாயைக் காற்றால் நிரப்பி அதைத் தண்ணீரின் குறுக்கே இழுத்துச் செல்வதைக் குறிக்கும் ஒரு வார்த்தையாகும். ஆவியினால் ஏவப்பட்டவர்கள் தங்கள் சொந்த செய்தியை அல்ல தேவனிடத்திலிருந்து வந்த மகத்துவங்களையே எழுதினார்கள். எனவே, வேதவாக்கியங்களை நிராகரித்தால் அது தேவனுடைய வார்த்தையை நிராகரிப்பதாகிவிடும். மேலும், தேவன் பேசினார், கர்த்தர் சொல்லுகிறார் போன்ற வார்த்தைகள் 1300 முறைகளுக்கு மேல் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, வேதாகமம் மாத்திரமே தனித்துவமான தெய்வீக ஆரம்பத்தைக் கொண்டதாக இருக்கிறது.

**ஏவப்படுதல்**

நம் தேவன் ஏவுதல் மூலமாகவும் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறார். தேவன் ஏவினார் என்பதற்கு மூலபாஷையிலே Theopneustos என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. Theos என்பதற்கு தேவன் என்றும், ustos என்பதற்கு தேவன் மூச்சுவிட்டார் அல்லது ஊதினார் என்றும் பொருள் (2தீமோ.3:16). தேவன் தம்முடைய செய்தியை உண்மையான மனிதர்களிடம் தான் கொடுத்தார். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது, நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி

மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு, தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம். அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம் (1கொரி 2:10-13) என்கிறார். மேலும், தாவீது கர்த்தருடைய ஆவியானவர் என்னைக்கொண்டு பேசினார்; அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது என்று (2சாமுவேல் 23:2) சொல்லுகிறார். இவ்வசனங்கள் வேத வாக்கியங்களில் பாதி ஏவப்பட்டிருக்கிறது பாதி ஏவப்படவில்லை என்னும் தெளிவற்ற கருத்துக்கு முற்றுப் புள்ளியை வைக்கிறதாக இருக்கிறது.

**பிழையற்றதன்மை**

இது தேவனுடைய வார்த்தையின் துல்லியத்தையும் உண்மையையும் சுட்டிக்காட்டுகிறது. மேலும், தேவனுடைய வார்த்தையில் பிழையென்பது நூலிழையளவுகூட இல்லை. எப்படியெனில், வரலாறு, புவியியல், அறிவியல் மற்றும் வேதாகம உபதேசம் என்று எதை எடுத்துக்கொண்டாலும், அதில் பிழை யென்ற பேச்சுக்கே இடமில்லை. சர்வவல்ல, சர்வஞானியான தேவன் தம்முடைய வெளிப்பாட்டில் பிழையிழைக்க மாட்டார். அவை உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, எக்காரியத்திலும் பிழையில்லாமல் எழுதிக் கொடுக்கப்பட்டதுதான் வேதாகமம்.


**அதிகாரம்**

வேதவாக்கியங்கள் தேவனுடைய வாயிலிருந்து வெளிப்பட்ட அதிகாரமுள்ள வார்த்தைகளாக இருக்கிறது. இவை அவருடைய மனதிலே உதித்து அவருடைய சிந்தையை வெளிப்படுத்துகிறதாயிருக்கிறபடியால், எந்த மனிதனும் இதை நிராகரிக்க அதிகாரமும், உரிமையும் இல்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, வானத்திலும் பூமியிலும் தமக்கு சகல அதிகாரமும் இருப்பதாகச் சொல்லுவதின் மூலம் அவருடைய அதிகாரம் இதன் மூலம் வெளிப்படுகிறது (மத்தேயு 28:18) இதினிமித்தம், இயேசுகிறிஸ்து பேசின வார்த்தைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறதோ, அந்த அளவுக்கு அவருடைய எழுத்து வடிவிலான வார்த்தைகளுக்கும் சகல அதிகாரமும் இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் உண்மையாய் உணர்ந்து, அவ்வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து கீழ்ப்படிந்து வாழவேண்டியது அவசியமாயிருக்கிறது. **அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை ; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை** (அப்.4;12). இங்கே, அவருடைய நாமம் என்பது கிறிஸ்துவின் அதிகாரத்தைக் குறிக்கக் கூடியதாக இருக்கிறபடியால் அந்த அதிகாரத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டியது அவசியமாயிருக்கிறது. ✝

# வசன ஆராய்ச்சி

## ரோமர் 14 : 1 – 13

*Jerry Bates*



1. கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் ஆகாரம் புசிப்பது சம்பந்தமாக குற்றவாளிகளாகத் தீர்க்கலாமா? (வச.3)

2. விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்பதன் பொருள் என்ன? (வச.1)

3. இந்த வசனப்பகுதியில் யார் விசுவாசத்தில் பலவீனமானவர்கள்? (வச.1-3)

4. ஒருவரை குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு யாருக்கு உரிமை உண்டு? (வச.4)

5. மனிதன் ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுவது தவறா? (வச.5)

6. மனிதன் தான் விரும்புகிறபடி வாழ அவனுக்கு உரிமை இருக்கிறதா? (வச.7)

7. விசுவாசிகள் யாருடையவர்கள்? (வச.8)

8. கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்ததாக பவுல் ஏன் மீண்டும் சொல்லுகிறார்? (வச.9)

9. பலமான கிறிஸ்தவன் பலவீனமான கிறிஸ்தவனை ஏன் அற்பமாக எண்ணுகிறான்? (வச.10)

10. பலவீனமான கிறிஸ்தவன் பலமான கிறிஸ்தவனை குற்றவாளியாகத் தீர்க்கலாமா? (வச.10)

11. நியாயத்தீர்ப்பின் நாளிலே நாமெல்லோரும் யாருக்கு கணக்கொப்புவிக்க வேண்டும்? (வச.12)

12. பழைய ஏற்பாட்டின் எந்த வசனம் பதினோறாம் வசனத்தில் மேற்கோள்காட்டப்பட்டுள்ளது?

13. எல்லோரும் எப்படி இரட்சிக்கப்படுவார்கள்?

14. கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் என்ன செய்ய வேண்டும்? (வச.12-13)

# ரோமர் 14 : 1-13

1. விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள் ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள். 2. ஒருவன் எந்தப் பதார்த்தத்தையும் புசிக்கலாமென்று நம்புகிறான்; பலவீனனோ மரக்கறிகளைமாத்திரம் புசிக்கிறான். 3. புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக ; புசியாதிருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக. தேவன் அவனை ஏற்றுக்கொண்டாரே 4. மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்திரவாதி ; அவன் நிலைநிறுத்தப்படுவான் தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே 5. அன்றியும் ஒருவன் ஒருநாளை மற்றொரு நாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான் அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கடவன்.

6. நாட்களை விசேஷித்துக்கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறான்; நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளாதிருக்கிறான், புசிக்கிறவன் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறபடியால், கர்த்தருக்கென்று புசிக்கிறான். புசியாதிருக்கிறவனும் கர்த்தெருக்கென்று புசியாதிருந்து, தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான். 7. நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. 8. நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம். நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம். ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம். 9. கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் ஆண்டவராயிருக்கும்பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார். 10. இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே.

11. அந்தப்படி: முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய் கர்த்தர் சொல்லுகிறார், என்று எழுதியிருக்கிறது. 12. ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான். 13. இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக. ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

**குறிப்பு :** கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாச காரியங்களில் ஒருவருக்கொருவர் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்பதைப் பற்றி இவ்வசனப்பகுதி விவரிக்கின்றது. ஒருவர் ஏதோ ஒன்றை தவறென்று நம்பினால் அக்காரியத்தை அவர் செய்யாமலிருப்பது அவருக்கு நலமாய் இருக்கும். அதோடு, அக்காரியம் மற்றவர்களுக்கும் இடறலாயிருக்காது. இங்கே, பவுல் மாம்சம் புசிப்பவர்களையும், நாட்களை விசேஷமாக எண்ணுகிறவர்களையும் பற்றி பேசுகிறார். இவைகள் இரண்டுமே அபிப்பிராய சம்பந்தமான காரியங்கள் தான். இக்காரியங்களில் கிறிஸ்தவர்கள் ஒருவரையொருவர் குற்றவாளிகளாகத் தீர்க்கக்கூடாது. அதாவது, பலமுள்ளவர்கள் பலவீனர்களைக் குற்றமுள்ளவர்களாகத் தீர்க்கக் கூடாது, அதேபோல், பலமுள்ளவர் தாங்கள் எதை விரும்புகிறார்களோ அதை பலவீனமானவர்களும் செய்யும்படியாக வலியுறுத்தக் கூடாது. ஏனெனில் கிறிஸ்து நம் எல்லோரையும் நியாயந்தீர்ப்பார் என்னும் உண்மையை நாம் உணர்ந்தவர்களாய் வாழ வேண்டும்.

சில காரியங்கள் எப்போதும் பாவம் நிறைந்ததாயிருக்கிறது. ஆனால், சில காரியங்களோ ஒருவர் அக்காரியத்தை தவறானதெற்று நம்பும்போது பாவமாகிறது. உதாரணமாக, மாம்சம் புசிப்பதும், நாட்களை விசேஷித்துக் கொள்வதும், ஆனால், கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவரின் கடமை என்னவென்றால், ஒருவொருக்கொருவர் பக்திவிருத்தியை உண்டாக்குவதும் விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்களைப் பலப்படுத்துவதுமாகத் தான் இருக்க வேண்டும். பலவீனர்களுக்கு இடறலை உண்டாக்கும் எந்த ஒரு செயலையும் நாம் ஒரு போதும் செய்யவே கூடாது. நாம் நம் உரிமைகளைத் துறக்கவேண்டியதாயிருந்தாலும் கூட நாம் மற்றவர்களைப் பலப்படுத்துவதிலும், அவர்களிடத்திலே பக்திவிருத்தியை உண்டாக்குவதிலும் நம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். அப்படிச் செய்யும்போது பலவீனமுள்ளவர்களையும் கிறிஸ்துவின் சேனைக்குள் பலமுள்ளவரகளாக நம்மால் மாற்ற முடியும் என்பதையே இவ்வசனப் பகுதி வலியுறுத்திப் போதிக்கிறது. ✞

## ஆராய்ந்து பாருங்கள்

- அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை **ஆராய்ந்து பார்த்ததினால்,** தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப். 17:11).
- வேதவாக்கியங்களை **ஆராய்ந்து பாருங்கள்;** அவைகளால் உங்களுக்கு நித்யஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே (யோவான் 5:39).

# கர்த்தருடைய நாள்
# The day of the Lord

*Wayne Barrier*

**கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமடவென்று அகன்றுபோகும். பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்து போகும். இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம். அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்** (1பேதுரு 3:10-4) என்று அப்போஸ்தலனாகிய பேதுரு கர்த்தருடைய நாளின் காரியங்களைப் பற்றித் தமது நிருபங்களில் எழுதியிருக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பேதுரு மேற்சொல்லப்பட்ட வசனப்பகுதிகளில் இவ்வுலகம் அழிக்கப்படும் கடைசி காலத்தைப் பற்றி விவரிக்கிறார். அதாவது, அவருடைய வருகை, இரவிலே திருடன் வருகிற விதமாய் இருக்கிறபடியால், கர்த்தருடைய நாளுக்காக ஆயத்தமாவதே நம் வாழ்க்கையின் முதன்மையான குறிக்கோளாக இருக்கவேண்டும் என்கிறார். இவ்வுலக வாழ்வானது எப்படிப் பார்த்தாலும் குறுகினதாயிருக்கிறபடியால், நாம் சதாகாலங்களிலும் வாசம் செய்யப்போகும் புதிய வானத்திற்காகவும் புதிய பூமிக்காகவும் ஆயத்தப்படுவதற்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டும். ஏனெனில், அதுதான் நம் தேவாதி தேவனோடு நாம் என்றென்றும் வாசம் செய்யும் இடமாகும்.

அப்போஸ்தலனாகிய பேதுரு இவ்வார்த்தைகளை சுமார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக எழுதினார். அப்பொழுதே சிலர், இந்த போதனையைப் பரிகாசம் செய்து, இந்த எச்சரிப்பைக் கண்டுகொள்ளாமல் அலட்சியப்படுத்தினர். (2பேதுரு3:3,4). ஆனால், பேதுருவோ பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிரார் என்று சொல்லுகிறார் (1பேதுரு3:9). அதாவது, தேவன் என்ன சொல்லுகிறாரோ அதன்படி அதை நிறைவேற்ற வல்லவர் என்கிறார். கலவரமும் நிச்சயமற்ற நிலவரமும் நிறைந்த இக்காலகட்டத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எப்படியெனில், இன்று ஜனங்கள் போர், பசி, வியாதி மற்றும் வன்முறைகளால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய கொடூர சூழ்நிலைகளிலிருந்து அப்படிப்பட்டவர்கள் வெளியே வருவதற்கான ஒரே வழி கிறிஸ்துவும் அவருடைய ராஜ்யமும் தான் (மத்தேயு 11:28-30).


இன்னும் பலர், தங்கள் அன்றாட வாழ்க்கைப் பிரச்சனைகளில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நிம்மதியில்லாதவர்கள் தேடும் நிம்மதி கிறிஸ்துவுக்குள் இருக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் உண்மையுள்ளவர்களாயிருந்தால் இவ்வுலகத்திலும் நமக்கு இளைப்பாறுதல் உண்டு, வருகின்ற உலகத்திலும் நித்தியஜீவன் உண்டு. பேதுரு ஆசிரியர் குறிப்பிடும் விதமாக இப்பூமி அழிந்து போன பிறகு உண்டாகும் புதிய வானம், புதிய பூமிக்காக நாம் ஆவலோடே காத்திருக்க வேண்டும். ஏனெனில், கர்த்தருடைய நாளுக்காக ஆயித்தமாயிருப்பவர்களுக்கு அந்த நாள் மிகச் சிறந்த நாளாயிருக்கும். ஆகவேதான், அப்போஸ்தலன் பேதுரு முடிவாக **நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்** என்று சொல்லுகிறார் (2பேதுரு3:18) சத்தியத்தில் வளருகிறவர்கள் பரலோகத்திற்குச் செல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருப்பார்கள்.

**தேவதூதர்கள் பரிசுத்தவான்களுக்கு பணிவிடை செய்கிறார்கள். அதை வார்த்தைகளால் அளவிட முடியாது. ஆனால், அவர்கள் பணிவிடை செய்கிறார்கள் (எபி.1:14).**

# நீங்கள் எந்த நுகத்தை ஏற்றிருக்கிறீர்கள்?

# Which Yoke Do You Wear ?

*Danny Boggs*



**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்** (மத்தேயு 11:28-29) என்று இயேசு கிறிஸ்து அறைகூவல் விடுத்தார். அவர் அன்பாக அழைத்து இளைப்பாறுதல் தருகிறபடியால் நம்மைக் களைப்பாக்குகிற பாவத்தினால் நாம் துன்பப்பட வேண்டிய அவசியமில்லை!

இயேசுகிறிஸ்துவின் இந்த இளைப்பாறுதலுக்கான அழைப்பின் மத்தியில் நுகத்தின் பங்கு என்ன? நுகம் என்பது மாடுகளின் கழுத்தின் மீது வைத்து அதைச் சுற்றிலும் கட்டப்படுவதாகும். அப்படிக் கட்டப்படும் நுகம் மாட்டின் கழுத்தோடே இணைந்திருக்கும். அது எடுக்கப்படும் வரை மாடுகள் அதை சுமந்து கொண்டுதான் இருக்க வேண்டும். இங்கே, நுகம் என்பது அடிமைத்தனத்தைக் குறிக்கக்கூடியதாக இருக்கிறது. நுகம் என்பது ஒரு சுகமான அனுபவம் அல்ல, மாறாக, அது துன்பத்தின் தூண்டுதலாக இருக்கிறது. இங்கே கசப்பான உண்மையென்னவெனில், நாமும் கூட கிறிஸ்துவினிடத்தில் வருவதற்கு முன்பாக நுகத்தின் கீழாகத்தான் இருந்தோம்.

எரேமியா தீர்க்கதரிசியும், தம்முடைய ஜனங்கள் சார்பாக, **என் பாதகங்களின் நுகம் அவருடைய கையால் பூட்டப்பட்டிருக்கிறது. அவைகள் பிணைக்கப்பட்டு என் கழுத்தைச் சுற்றிக்கொண்டது. என் பெலனை விழப்பண்ணினார்; நான் எழுந்திருக்கக் கூடாதபடிக்கு ஆண்டவர் என்னை ஒடுக்குகிறவர்களின் கையில் ஒப்புக்கொடுத்தார்** (புலம்பல் 1:14) என்று புலம்பினார்.

நாம் ஒவ்வொருவரும் நம்மை மரணத்திற்கு நேராக வழிநடத்துகிற பாவத்திற்கு அடிமைகளாய் இருக்கிறோம், அல்லது நீதிக்கு நேராக வழிநடத்துகிற கீழ்ப்படிதலுக்கு அடிமைகளாய் இருக்கிறோம் (ரோமர்6:16). நாம் பாவத்திற்கு உட்படும்போது அது இரும்பைப் போன்று பாரமான ஒன்றாக நம்மை அழுத்துகிறது. ஏனென்றால், இவ்வாழ்க்கையில் கிறிஸ்து இல்லாமல் இருப்பதால், வாழ்க்கை தளர்ந்து போய், அது நமக்கு மிகப் பெரிய பாரமாய் இருக்கிறது. ஆகவே, நம் வாழ்க்கைப் பயணத்தில் நுகத்தைச் சுமக்கவேண்டுமா அல்லது வேண்டாமா? என்பது கேள்வியல்ல. மாறாக, எந்த நுகத்தைச் சுமப்பது என்பதுதான் கேள்வியாயிருக்கிறது. அதாவது, பாவநுகத்தை நம்மேலே ஏற்றுக்கொண்டு தாங்கமுடியாத பாரத்தால் அமிழ்ந்துபோகவும் முடியும் அல்லது இயேசு கிறிஸ்துவின் நுகத்தை நம் மேல் ஏற்றுக்கொண்டு நாம் சுகமாய் இருக்கவும் முடியும். இங்கே கிறிஸ்துவின் நுகம் மெதுவாயும் அவருடைய சுமை இலகுவாயுமிருக்கிறபடியால் அவருடைய நுகத்தை நம்மேல் ஏற்றுக்கொண்டால் நித்திய இளைப்பாறுதல் நிச்சயம் கிடைக்கும்.

## இயேசு எப்படியெல்லாம் புறக்கணிக்கப்படுகிறார்?

1. அவருடைய தெய்வீகத் தன்மையில் ..... (லூக்கா. 1:35).
2. அவருடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்வதில் ..... (மத். 28:18).
3. அவருடைய நாமத்திற்குக் கீழ்ப்படிவதில் ..... (பிலி. 2:9-11).
4. அவருடைய சபையை அங்கீகரிப்பதில் .....(மத் 16:18;அப்.20:28).
5. அவருடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதில் .....(மாற்கு 16:15,16; ரோமர். 1:16).
6. அவரை உண்மையாய் ஆராதிப்பதில் (யோவான் 4:24; அப். 2:42;).

# ஒரு நாத்திகன் விசுவாசத்தில் மரிப்பது அரிதானதே

## An Atheist Seldom Dies in that Faith

*Bill Dillon*

**தே**வன் இல்லையென்று சொல்லுகிறவர்கள் பெரும்பாலும் தைரியமாகவே பேசுகிறவர்களாயிருக்கிறார்கள். ஒருவர் செழிப்பான காலங்களில் வாழும்பொழுதும், வாழ்க்கையின் காரியங்கள் சுமுகமாகப் போகும் பொழுதும் இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவது சுலபமானது. ஆனால், வியாதியின் கொடுமையான நாட்களின் வழியாகக் கடந்து போகும்போதும் நமக்குப் பரியமானவர்களை நாம் இழந்து போகும்போதும் இப்படிப்பட்ட தைரியமான வார்த்தைகள் வருவதில்லை. அப்படித்தானே? வாழ்க்கையின் கடைசி மணித்துளிகளில் நான் தேவனை விசுவாசிப்பதில்லையென்று ஒருவர் எளிதாகச் சொல்ல முடியுமா? மரணத்தருவாயில் அவிசுவாசியின் உறுதிப்பாட்டில் ஏதாவது மாற்றம் ஏற்படுமா?

**மரணத்தருவாயில் நாத்திகர்கள் உதிர்த்த வார்த்தைகளைச் சிந்தியுங்கள்**

இங்கர்சால் (1899) – ஓ! தேவனே எனக்கு ஆத்துமா ஒன்றிருந்தால் அதை இரட்சியும்

ஹோப்ஸ் (1679) – நான் இவ்வுலகத்தை இன்று அழிக்கிறதாக இருந்தால், இன்னும் ஒரு நாள் கூட அது இருக்கட்டும் என்று மறுபடியும் சொல்கிறேன். ஏனென்றால், நான் காரிருளுக்குள் குதிக்கப்போகிறேன்.

கிப்பன் (1974) – சர்வமும் சந்தேகமாகவும், இருளாகவும் இருக்கிறது.

பைன் (1809) – என்னோடிரும், ஏனென்றால், நான் தனியாக விடப்படுவதை என்னால் தாங்க முடியாது.

# சபை தேவனுக்கான வாசஸ்தலம்

## THE CHURCH A DWELLING PLACE FOR GOD

Ronald D. Bryant

சபை ஜீவனுள்ள ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால், சபையானது இரட்சிக்கப்பட்டவர்களால் ஆனது என்று பல்வேறு விதங்களில் விவரிக்கப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இன்னும் அழகாக, எபேசியர் இரண்டாம் அதிகாரத்தில் சபையைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. அதாவது, சபையானது தேவனுடைய வாசஸ்தலம் என்று வர்ணிக்கப்பட்டுள்ளது. மேலும், 2கொரி. 3:18ன் படி, கிறிஸ்துவின் சாயலாக ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனையும் தமது சத்தியத்தால் மாற்றுகிறார் என்று பார்க்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவன் வாசம் செய்யும் ஓர் இடமாக இருக்கிறார், அப்படிப்பட்டவர்கள் பரிசுத்தமாக இருக்க வேண்டும், ஏனென்றால், யார் சபையார் பரிசுத்தவான்கள் என்றழைக்கப்படுகிறார்கள். இதனிமித்தம் சபை பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

அப்படியானால், நமக்குள் எழுகின்ற ஒரு கேள்வி என்னவென்றால், தகுதியற்ற, பூரணமற்ற, தள்ளாடும், குறையுள்ள கிறிஸ்தவர்கள் எப்படி தேவனுடைய வாசஸ்தலமாக இருக்க முடியும்? என்பதுதான். நிச்சயமாகவே, தேவன் இப்படிப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளமாட்டார். நாம் அப்படியிராமல் கீழ்க்காணும் காரியங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள் (எபேசியர் 2:19-22).

சபையிலே தேவனுடைய கிருபை இன்றும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அவர் சபையைப் பாதுகாப்பதற்காகத் தமது கிரியையைச் செய்து வருகிறார். முழுச்சரீரமும் இசைவாய் இணைக்கப்பட்டுள்ளது போல, சபையானது கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. தேவன் கட்டும் பணியை கலை நயத்தோடு செய்து வருகிறார். எப்படியெனில், அவர் கற்களை, வடிவமைத்து கலைநயத்தோடு கட்டிடம் எழும்புவதற்குத் தடையாக உள்ள யாவற்றையும் அகற்றி, கற்களை இசைவாக இணைக்கிறார். மேலும், அவர் தமது ஆலயத்தின் தூண்கள் தூய்மையாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறபடியால் அதை மகா மேன்மையான, முக்கியமான ஒன்றாக வடிவமைக்கிறார். இது குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு தேவ ஆவியினால் ஏவப்பட்டு ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்றப் பலிகளைச் செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள் என்று எழுதினார் (1பேதுரு 2:5). நாம் கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக இருக்கிறோமா? ✝

# இத்தலைமுறைக்கான கேள்வி ?

## A Question for this Generation ?

*Rick Cumingham*

சந்ததியரே நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைச் சிந்தித்துப் பாருங்கள்; நீ உன் வழியை மாற்றி மாற்றி இவ்வளவாய் விலகிப்போகிறது என்ன? (எரேமியா 2:31,36). அழிக்கப்படப்போகிற ஒரு தேசத்துக்கு கடைசி வார்த்தைகளை அறிவிக்கும்படி எரேமியா தேவனால் பணிக்கப்பட்டார். அந்தத் தேசம் யூதா அதன் அழிவு உறுதியானபடியால் அது மனந்திரும்பும்படி அழைக்கப்படவில்லை. அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டனைக்கு ஆயத்தமாயிருந்தார்கள். அவர்கள் தங்கள் தேவனை விட்டுவிட்டு உலகத்தின் தரத்திற்குத் தங்களைத் தாழ்த்தினார்கள்.

யூத ஜனங்கள் மாற்றத்தை விரும்பினார்கள், அவர்களுடைய தேவன் அவருடைய வார்த்தை, அவர்களுடைய மதப் பாரம்பரியம் போன்றவைகளெல்லாம் அவர்களுக்கு அந்நியமாய்த் தோன்றின. எனவே, அவர்கள் மாறிவிட்டார்கள். அவர்கள் தங்களைச் சுற்றிலும் இருக்கிறவர்களுக்கேற்ப மாறினார்கள். தேவனுடைய வார்த்தை அவர்கள் பரிசுத்த ஜனங்களாயிருக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தபோதிலும் அவர்கள் அப்படிச் செய்தார்கள். எருசலேம் வேற்றுமையான நகரமாக மாறியது.அங்கே எல்லா தெய்வங்களும் வணங்கப்பட்டன.எல்லா நம்பிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. தேவ விரோத செயல்கள் சகித்துக் கொள்ளப்பட்டன. அங்கே இருந்த தீர்க்கதரிசிகள் யூதாவின் வருங்காலத்தைப் பற்றி மகிழ்ச்சிகரமான, இதமான தீர்க்கதரிசனங்களை வாரி இறைத்தார்கள். ஆனால், தேவன் நேபுகாத்நேச்சாரின் பாபிலோனிய சேனை அவர்களைச் சிறைப்பிடித்துக் கொண்டு போகும்படி அப்போது தயார்படுத்திக் கொண்டிருந்தார். இச்சம்பவம் கி.மு 606 –ல் அப்படியே நிறைவேறியது.

யூத ஜனங்களுக்கும் இன்றைய சபை விசுவாசிகளுக்குமிடையே சோககரமான ஒப்பீட்டை என்னால் காணமுடிகிறது. இன்றைய சபை அங்கத்தினர்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். தேவன், அவருடைய வார்த்தை அங்கத்தினர்களுடைய மதப் பாரம்பரியம் போன்றவைகளெல்லாம் அவர்களுக்கு அந்நியமாய்த் தோன்றுகிறது. சபை அங்கத்தினர்கள் தங்களைச் சுற்றிலும் இருக்கிறவர்களுக்கேற்ப மாற்றிக்கொள்ளுகிறார்கள். தேவனுடைய வார்த்தையில் விசுவாசிகள் பரிசுத்த ஜனங்களாயிருக்க வேண்டுமென்ற கட்டளையிருக்கிறபோதிலும், அவர்கள் தங்கள் விருப்பப்படியே செய்கிறார்கள். உலகத்திற்கு ஒத்த வேஷந்தரிக்கும்படி, அங்கத்தினர்களை ஊக்குவிக்கும் சபைகள் தேவனுக்கு ஆராதனை செய்வதுமில்லை, அவரை சேவிப்பதுமில்லை. மாறாக, அவர்கள் தேவனைக் கனவீனப்படுத்துகிறார்கள். அவர்கள் தொடர்ந்து இத்தகைய காரியங்களில் ஈடுபட்டால் கர்த்தர் அவர்களுக்கு அழிவை நிச்சயம் கொண்டுவருவார்.

**இங்கே இப்போது எழும்புகிற கேள்வி : நீ உன் வழியை மாற்றி, மாற்றி இவ்வளவாய் விலகிப்போகிறது என்ன?** ✝

# தெய்வீகச் சூழல்

## The Divine Environment

Perry. N. Hall



ஒரு மீன் தண்ணீருக்குள் வாழ்வதுபோல் தண்ணீருக்கு வெளியே வாழ முடியுமா? அதேபோல் ஒரு மனிதன் தண்ணீருக்கு வெளியே வாழ்வதுபோல் தண்ணீருக்குள் வாழ முடியுமா? மீன் தண்ணீருக்குள் வாழும்படியாகத் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது ? ஆகவே, மீனால் தண்ணீருக்கு வெளியே வாழ முடியாது.

இதைப்போலவே, தேவனால் உண்டாக்கப்பட்ட ஜீவராசிகளெல்லாம் எந்தெந்த சூழ்நிலைகளில் வாழும்படியாகச் சிருஷ்டிக்கப்பட்டதோ அவைகளெல்லாம் அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்றவாறுதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

தேவன் மனிதனுடைய ஆவிக்குரிய வாழ்வை மேம்படுத்தத்தான் சபையை ஸ்தாபித்தார். சபையானது மனிதனுடைய ஆவிக்குரிய வாழ்விற்கு அவசியமான அனைத்துக் காரியங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. எப்படி ஒரு மீன் தண்ணீருக்கு வெளியே வாழ முடியாதோ? அதுபோல, மனிதனால் சபைக்கு வெளியே கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடியாது?

ஆனால், இன்று தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிறவர்களிடமிருந்து ஒரு விநோதமான உபதேசம் தோன்றியிருக்கிறது. அந்த உபதேசம் சபைக்கும் இரட்சிப்புக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது. இன்றைக்கும் பெரும்பாலான மக்கள் சபையில் இல்லாமலேயே இரட்சிக்கப்பட முடியுமென்று நம்புகிறார்கள்.

நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து சபையைத் தம்முடைய சுயஇரத்தத்தினாலே வாங்கினார் (அப்.20:28). ஆகவே, சபை என்பது கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது (எபே. 1:22,23; கொலோ. 1:18). கிறிஸ்துவே சபையாகிய சரீரத்திற்குத் தலையாக இருக்கிறார் (எபே. 5:23). விலையேறப்பெற்ற பரிசுத்த **கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் நன்மைகளெல்லாம் அவருடைய இரத்தத்தினாலே வாங்கப்பட்ட**

**சபையில்தான் இருக்கிறது.** சபை என்பது மூல மொழியாகிய கிரேக்கத்தில் பாஷையில் **எக்லீசியா** என்பதாகும். இதன் பொருள் அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் என்பது. சபை என்பது சுவிசேஷ அழைப்பை ஏற்று (1 தெச.2:14). அதன் நிபந்தனைகளுக்குட்பட்டு (மாற்கு. 16:15, 16 அப். 2:38-41), உலகத்திலிருந்து வெளியே வந்து, கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களாலானது (அப். 2:47; கொலா 1;12-14).

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப்படுவதுபோல் கிறிஸ்துவின் இரத்தம் இல்லாமலும் இரட்சிக்கப்பட முடியுமென்று சொல்லுவது தேவனுடைய சத்தியத்திற்கு இசைவாய் இருக்குமா? மனிதன் சபைக்கு வெளியே இரட்சிக்கப்பட்டால் கிறிஸ்துவின் இரத்தம் இல்லாமலும் இரட்சிக்கப்பட முடியும் என்றல்லவா பொருள்படும். ஆனால், கிறிஸ்து சபையை வாங்கத்தானே தம்முடைய இரத்தத்தைச் சிந்தினார் (அப்.20:28).

ஆகவே, நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்காக உண்டாயிருக்கிற உண்மையான சூழ்நிலைக்கு மாற்றாக நாம் எதையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. நான் என் சபையைக் கட்டுவேன் என்று இயேசு கிறிஸ்து சொன்னார் (மத்.16:18). இந்த உண்மையான சபையைப் பற்றித்தான் நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். இது ஒரு மார்க்கப் பிரிவினைச் சபையும் அல்ல, மார்க்கப் பிரிவினைச் சபைகளோடு பங்குள்ள சபையும் அல்ல. இது மனிதனுடைய ஆவிக்குரிய நலனுக்காகத் தேவனுடைய வல்லமையாலும், ஞானத்தாலும் ஸ்தாபிக்கப்பட்ட தெய்வீக அமைப்பாகும், மனிதர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும்போது இந்தத் தெய்வீக சூழலில் வைத்துப் பாதுகாக்கப்படுவார்கள். ✞

## பிரசங்கம் எதற்காக அல்ல

1. தன்னைப் பற்றி விளம்பரப்படுத்துவதற்கு அல்ல (1கொரி. 4:5)
2. தன் கல்வி ஞானத்தை வெளிப்படுத்துவதற்கு அல்ல (1கொரி. 2:1-5)
3. ஒரு பொழுதுபோக்குக்காக அல்ல (2கொரி. 2:2)
4. சக மனிதரால் புகழப்படுவதற்காக அல்ல (2கொரி. 4:9 13)
5. ஆதாயம் தரும் ஒரு தொழிலாக அல்ல (2கொரி. 4:12)
6. வெளிப்படுத்தப்படாதவைகளைப் பேசுவதற்கு அல்ல (கலா. 1:7-9)
7. கூட்டியும், குறைத்தும் பேசுவதற்கும் அல்ல (வெளி. 22:18,19)

# என் குடும்பம்
# My Family

*David Deffenbaugh*

I. **வேதாகமம் (உபா.6:12, சங், 19:7, ரோமர் 1:16, யாக்கோபு 2:12)**

★ குடும்பங்கள் வேதாகமம் இல்லாதபடியால் வழிகாட்டுதல் இல்லாமல் இருக்கின்றன (சங்.119:105)

★ காலம் கடந்து போவதற்கு முன்பாக நாம் விழித்துக் கொள்ள வேண்டும்.

★ நம் குடும்பத்தில் வேதாகமமே மிகவும் முக்கியமானதாக இருக்க வேண்டும்.

II. **சபை (மத். 6:33 ; I கொரி. 14:12)**

★ நல்ல மனம் படைத்தவர்கள் தங்களுக்கு சபை அதிக முக்கியமானது என்கிறார்கள்.

★ தேவன் உலகத்தை இரட்சிப்பதற்கு சபைதான் வழியக இருக்கிறது (எபே. 5:23;அப். 8:4).

III. **நேரம்**

★ குடும்பம் கவனக்குறைவால் சீர் குலைகிறது.

★ சரியான குடும்பத்தைக் கட்டுவதற்கு நேரம் எடுக்கும் (உபா.6:6,7).

★ குடும்பமாகச் சேர்ந்து அதிகப்படியான நேரத்தை மகிழ்ச்சியாகக் கழிக்க வேண்டும்.

IV. **உண்மைத்தன்மை (எபே. 5:22, 25,33; 6:14)**

★ குடும்பத்தில் உண்மைத்தன்மை என்பது சமுதாயத்தில் போற்றப்படும் நற்பண்பாயிருக்கிறது.

★ எந்தச் சூழ்நிலையிலும் நாம் குடும்பத்திற்குக் கொடுக்கக் கூடிய அர்ப்பணிப்பை இழந்துவிடக் கூடாது.

★ ஒவ்வொரு குடும்பமும் வேதாகமத்திற்குச் செவி கொடுக்க வேண்டும் (உபா.6).

**நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு எதைக் கொடுக்கிறீர்கள்?** ✞

# தேவனுடைய குடும்பத்தில் நானும் ஒருவன்
## I AM ONE AMONG GOD'S FAMILY

எனக்குப் பிரியமான விலையேறப்பெற்ற சகோதரன் மரித்துப் போனார்; இன்று அவரை நேசிக்கிறவர்கள் அவரை நினைவுகூருகிறார்கள். அவர் புகழ்ச்சிக்கும் கனத்திற்கும் பாத்திரமாயிருக்கிறபடியால் அவருக்கு துதி செலுத்தும் தருணத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

இன்று நம்மில் பலர் இரட்டத்தனையாக ஆசீர்வதிக்கப்பட்டு அவரை நினைவு கூரும்படியான சிலாக்கியம் பெற்றிருக்கிறோம்.

## இதில் என் பங்கு என்ன?

அவருடைய சரீரத்திற்கும், இரத்தத்திற்கும் அடையாளமாக அப்பத்தையும், திராட்ச ரசத்தையும் ஆயத்தப்படுத்த வாய்ப்பு எனக்குத் தரப்பட்டிருக்கிறது.


அன்பான கரங்களால் நான் அப்பத்தை ஆயத்தமாக்கினேன். பளபளக்கும் பாத்திரங்களில் திராட்ச இரசத்தை ஊற்றிவிட்டேன். என் இருதயத்தையும் ஊற்றிவிட்டேன் இதற்காக.

இந்த விசேஷித்த வேலையை நான் என் சகோதரருக்காகச் செய்கிறேன்.

அவர் இவ்வுலகில் வாழ்ந்து, மரித்து நம்மெல்லோருக்காகவும் இன்றும் வாழ்கிறார் என்பதை இவ்வுலகம் மறக்கக் கூடாது என்பதற்காக, கர்த்தருடைய பந்தியை கருத்தாக ஆயத்தமாக்குகிறேன்.

**வாழ்வதற்கான உபதேசம்**

# தேவதூதர்கள்




**தே**வதூதர்கள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் (சங்.148:15), அவர்கள் மனிதர்களைவிட மேலான இடத்தில் இருக்கிறார்கள் (எபி.2:7), இவர்கள் இனவிருத்தி செய்வதுமில்லை, மரிப்பதுமில்லை (லூக்கா 20:35,36). தூதர்களைப் பற்றி வேதாகமத்தில் சுமார் **273 முறை** குறிப்பிடப்பட்டுள்ளது. தூதர்கள் ஆசீர்வாதத்தின் செய்திகளை அல்லது அழிவின் செய்தியை அறிவிக்கிறவர்களாகவும் (ஆதி.19:13,16), தேவனுடைய ஜனங்களைப் பராமரிக்கும் காரியத்தில் தங்களை ஈடுபடுத்துகிறவர்களாகவும் ( 2ராஜா. 18:19) இருக்கிறார்கள். அதேவிதமாக இக்காலகட்டத்திலும் தூதர்கள் செயல்படுகிறார்கள் என்பது நமது உறுதியான நம்பிக்கையாக இருக்கிறது.

**நவநாகரீக சதுசேயர்கள்**

இன்றைய நாட்களில் சிலர் நவநாகரீக சதுசேயர்களாக மாறி, தேவ தூதர்கள் இருப்பதை விசுவாசிப்பதில்லை (அப்.23:8). ஏனென்றால், இன்றைய

கால கட்டங்களில் அற்புத அடையாளங்கள் நின்றுவிட்டபடியால், அவர்கள் தேவதூதர்களுக்கு வேலையில்லையென்று நினைக்கிறார்கள். இச்சிந்தனை எபிரெயர் 1:13,14-ம் வசனங்களில் சொல்லப்பட்டிருப்பவைகளுக்கு முற்றிலும் முரண்பாடாயிருக்கிறது. எப்படியெனில், இரட்சிப்பைச் சுதந்தரிக்கப் போகிறவர்களினிமித்தமாக ஊழியம் செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா? என்று இவ்வசனம் குறிப்பிட்டுச் சொல்லுகிறது.

இன்று நாம் அற்புத அடையாளங்களின் காலத்தில் வாழவில்லையென்பதாலே, இயற்கையானது தேவனுடைய கட்டுப்பாட்டில் இல்லை என்று பொருள்படாது. மாறாக, மத்தேயு 5:4-ல் தேவனுடைய பொதுவான பராமரிப்பையும் மத்தேயு 6:33-ல் தேவனுடைய விசேஷித்த பராமரிப்பு பற்றி போதிக்கப்பட்டுள்ளது. அதாவது, ரோமர் 8:28-31-ன் படியாக அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறது என்று பார்க்கிறோம். ஆக, தேவன் எக்காலத்திலும் நம்மைப் பராமரிக்க வல்லவராயிருக்கிறார் என்று இவ்வசனங்கள் பேசுகின்றன.

### நாம் தற்செயலாகத் தோன்றிய உலகத்தில் வாழவில்லை

இப்பூமியானது தற்செயலாகத் தோன்றவில்லை, மாறாக, தேவன் தான் அதைச் சிருஷ்டித்தார் என்று (எபி.1:2; கொலோ. 3:16,17) ஆகிய வசனங்கள் தெளிவாக எடுத்தியம்புகின்றன. பூமியானது என்றென்றும் தேவனுடைய கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது. அவர் இன்றும் மனுஷருடைய ராஜ்யங்களில் ஆளுகை செய்துகொண்டுதான் இருக்கிறார். (ரோமர் அதிகாரம் 13; அப். 17:26; தானியேல் 4:17,32). ஆகவே, நாம் மனிதனுடைய காரியங்களில் தேவன் இடைப்படுவதில்லை என்று சிலர் நினைப்பது போல் நாமும் நினைத்தால் ராஜாதிராஜாவாக ஆளுகை செய்கிற இயேசு கிறிஸ்துவை மகிமையின் சிங்காசனத்தில் இருந்து இறக்கிவிடுவதற்குச் சமமான செயலாக அது மாறிவிடும் (வெளி.1:5; எபேசியர் 1:20,21).

தேவதூதர்கள் நமக்கு ஊழியம் செய்யும்படியாக அனுப்பப்பட்டிருக்கும் பணிவிடை ஆவிகள் என்று வேதம் குறிப்பிடுவதால் உண்மையாகவே, இது ஆறுதலாக இருக்கிறது. எப்படியெனில், **மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல துரைத்தனங்களோடும் அதிகாரங்களோடும் இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம்** உண்டு (எபே.6:12). இதினிமித்தம் நாம் தேவனுக்கு நேராக ஏறெடுக்கும் ஜெபங்கள் விருவாதாகப் போகாதபடிக்கு தேவன் நிச்சயம் பதில் கொடுப்பார் என்னும் விசுவாசத்துடன் பண்ணும் விண்பங்களின் சத்தத்திற்கு தேவன் உதவி செய்கிறவராயிருக்கிறார். இக்காரியங்களில் தேவதூதர்கள் அவருடைய பிரதிநிதிகளாகச் செயல்படுகிறார்கள்.

### கர்த்தாவே எங்கள் கண்களைத் திறந்தருளும்

தேவனுடைய மகாமேன்மையான மகத்துவம் இன்னதென்று அறியும்படிக்கு, தேவன் பிரகாசமுள்ள மனக்கண்களை விசுவாசிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பவுல் ஜெபித்தார் (எபே.1:18,19). நாமும் நம்முடைய விசுவாசக் கண்களைத் திறந்தால் அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்பதை காணமுடியும் (2ராஜா. 6:16). ✝

# பக்தி வரலாற்றில் மிக முக்கியமான திருப்பம்

## A Pivotal Point in Religious History

*Wes Mc Adams*



**வ**ரலாற்றில் மிக முக்கியமான காலகட்டத்தை கிறிஸ்துவின் சபை எட்டிவிட்டது என்பது திட்டவட்டமாகும். நாம் பதில் சொல்லும்படியாகவும், சில தீர்மானங்கள் எடுக்கும்படியாகவும் எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும். இன்னும், இந்தப் பரபரப்பான காலகட்டத்தில் சபைக்கு உதவிசெய்ய உறுதியான தேவமனுஷர்கள், மனுஷிகள் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள்.

## மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தால் மக்கள் சலிப்படைந்துவிட்டார்கள்

இன்றைய என் தலைமுறையினர் மதப்பிரிவினைகளிடமிருந்தும், மனிதக் கொள்கைகளிடமிருந்தும், மார்க்கப்பிரிவினைகளிடமிருந்தும் வெளியே வருவது என்னைப் பரவசப்படுத்துகிறது. மார்க்கப் பிரிவினையற்ற தன்மையைக் குறித்துப் பல வருடங்களாகப் பிரசங்கிக்கிறோம். அதைக்குறித்து ஜனங்கள் இப்போது ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள். எப்படியெனில், ஒருவர் பிரிவினை சபைக்கு போய்க்கொண்டிருந்தாலும், அவர் தன்னை ஒரு உண்மையான கிறிஸ்துவனாகக் கருதவில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம் **கிறிஸ்துவின் சபை மாத்திரமே** என்னும் எங்கள் நீண்ட கால வேண்டுகோள் நானிலத்திலெங்கும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

ஆனால், இங்கே பிரச்சனை என்னவென்றால், கிறிஸ்துவின் சபையை ஒருமார்க்கப் பிரிவினைக் கூட்டமாகத்தான் இவ்வுலகம் பார்க்கிறது. அப்படியென்றால், ஏதோ ஒரு பயங்கரமான தவறான புரிந்துகொள்ளுதலால் தான் இப்படிப்பட்ட சிந்தை உருவாகியிருக்கிறது. ஆகவே, நாம் யார் என்பதை சமுதாயத்திற்குக் காண்பிக்க வேண்டும். நாம் மார்க்கப் பிரிவினைக் கூட்டத்தாரல்ல, மாறாக புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படியான சபையார் என்பதை நம் விசுவாச வாழ்வின் மூலம் உறுதி செய்ய வேண்டும். நாம் மனிதர்களின் கொள்கைகளையல்ல, கிறிஸ்துவின் உபதேசத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்பதை இச்சமுதாயத்திற்கு விளங்கச் செய்ய வேண்டும்.

அதற்கு முன்பாக, நாம் முதலில் நமக்குள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அதாவது, கிறிஸ்துவின் சபை என்பதை ஒரு பெயராக அல்லது ஒரு பட்டமாக நினைப்பதை நாம் தவிர்க்க வேண்டும். பாவ மன்னிப்புக்காக கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் கிறிஸ்தவராகிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் கர்த்தர் சபையிலே சேர்த்துக் கொள்கிறார் (அப்.2:47). கிறிஸ்துவின் சபை என்று பெயர் பொறிக்கப்பட்டிருக்கிற ஒரு கட்டிடத்தில் ஒருவர் கூடுவதினால் அவர் கிறிஸ்தவராகவோ கிறிஸ்துவின் சபை அங்கத்தினராகவோ மாறிவிடுவதில்லை. தேவனால் மாத்திரமே ஒரு மனிதனை கிறிஸ்துவின் சபை அங்கத்தினராக்க முடியும்.

## ஜனங்கள் பசியாயிருக்கிறார்கள்

சமுதாயத்தில் பல மார்க்கப் பிரிவினை சபைகள் வேதாகமகத்தின் உபதேசத்தைப் போதிக்காத காரணத்தினால் அநேகம் விசுவாசிகளை இழந்து கொண்டிருப்பதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஏனென்றால், இன்று ஜனங்கள் உணர்ச்சிவசப்படக்கூடிய, பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த சபைகளைப் பார்த்துச் சலிப்படைந்து விட்டார்கள். காரணம், அப்படிப்பட்ட சபைகளில் பொருள்பொதிந்த ஆழமான சத்தியமில்லை என்பதை மக்கள் புரிந்துகொண்டு, அறிவுப்பூர்வமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும், ஊக்கம் தரும் காரியங்களைத் தேடுகிறார்கள். ஆனால், வழிநடத்துகிறவர்களோ, கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டு, உபதேசத்தின்படியில்லாமல் உணர்ச்சிகளுக்குட்பட்டு சபைகளை வழிநடத்துவது வேதனையளிக்கிறது. அவர்கள் தேவனுடைய வார்த்தை என்னும் திடமான ஆகாரத்தைவிட்டு வண்ணமயமாய்க் காட்சியளிக்கும் பஞ்சுமிட்டாய் போன்ற காரியங்களை மக்களுக்குக் கொடுத்து, ஆவிக்குரிய வாழ்வில் அவர்களைப் பட்டினிபோடுகிறார்கள்.

ஆனால், இதற்கு மாறாக கிறிஸ்துவின் சபைகள் திடமான ஆதாரத்தைத் திரளாக வழங்கி, கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தாலும் அதைப்பற்றி ஜனங்கள் வெகுவாகத் தெரிந்து கொள்வதில்லை. ஆனாலும், நாம் இப்படிப்பட்ட கூட்டங்களின் வாயிலாக சமுதாயத்திற்குள் சென்று சத்தியம் எங்கே கிடைக்கும் என்று அறிவித்து அந்தச் சத்தியமே சபைக்குத் தூணும் ஆதாரமுமாய் இருக்கிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் (1தீமோ. 3:15). அதே நேரத்தில் போதகர்களும், பிரசங்கிகளும் ஜனங்கள் தேவனுடைய வார்த்தையைத் தங்கள் ஜீவியங்களில் பயன்படுத்த அவர்களுக்கு உதவ வேண்டும். எப்படியெனில், தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறது, அது என்ன பொருளைக் கொடுக்கிறது. அது விசுவாசிகளுடைய விசுவாச வாழ்க்கையில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை பிரசங்கியார்களே அவர்களுக்கு விளக்கமாக எடுத்துரைக்க வேண்டும்.

**நாம் தகவல் தொழில்நுட்பக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்**

சமீபத்தில் நான் சில இளம் நாத்திகர்களிடம், நீங்கள் நாத்திகர்களாக எப்படி மாறினீர்கள், எது உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது என்று கேட்டபோது, அதற்குப் பதிலாக அவர்கள், தாங்கள் கலந்துகொண்ட கூட்டங்களையோ, அவர்கள் வாசித்த புத்தகங்களையோ மேற்கோள் காட்டாமல் தாங்கள் இணையதளத்தில் பார்த்த காணொளிக் காட்சியைத் தான் மேற்கோள் காட்டினார்கள். இது நம்ப முடியாத அளவுக்கு ஆச்சரியமாக இருக்கிறது! இன்று இணையதளம் ஜனங்களை நாத்திகத்திற்கு வழி நடத்தும் காரணிகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. இதன்மூலம் நாத்திகர்கள் தங்கள் வாதங்களை வைத்து பார்வையாளர்களை மிகப் பிரமாதமாகப் பரவசப்படுத்துகிறார்கள் என்பதைக் காட்டிலும் அவர்கள் தங்கள் நாத்தீகக் கொள்கைகளைப் பரப்ப ஆக்கப்பூர்வமாக இணையதளத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

அதேபோல், சபைகள் தேவனுடைய வார்த்தையைப் பரப்ப இணையதளத்தை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தினால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள் இன்றும் இனணயத்தில் தேவச் செய்திகளை படக்காட்சிகளைப் பதிவேற்றம் செய்கிற சகோதர சகோதரிகளுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். ஆனால், இன்னும் பல சபைகள் இணையதள சேவையைப் பயன்படுத்தாமல் இருப்பதைக் குறித்தும் நான் ஆச்சரியப்படுகிறேன்.

இன்று, நாம் வரலாற்றின் மிக முக்கியமான காலகட்டத்தில் வாழ்ந்து வருகிறோம். இப்போதும் இழந்துபோனவர்களைச் சந்திக்கும் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கிறது. இங்கே கேள்வி என்னவென்றால் வாய்ப்புகளைப் பயன்படுத்தும்படிக்கு அதைத் தெரிந்து கொள்வோமா? அல்லது அவைகளை வீணடிப்போமா?

**நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது** (மத்தேயு 5:14-16). ✝

## வாழ்வதற்கான உபதேசம்

# விலையேறப்பெற்ற விசுவாசம்

## Precious Faith

*O.P. Baird*

நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப் போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது (2பேதுரு 1:1). இப்போது ஒரு கிறிஸ்தவனுடைய விசுவாசம் பேதுரு மற்றும் பிற அப்போஸ்தலர்கள், ஆதிக் கிறிஸ்தவர்களுடைய விசுவாசத்தைப் போன்று அருமையானது. அது, நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் அருமையானது.

விசுவாசமானது ஒருவரை நம் தேவனும், இரட்சகருமாயிருக்கிற இயேசுவின் கிருபைக்குள்ளும் சமாதானத்திற்குள்ளும் கொண்டு வருகிறது. “தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் பெருகக்கடவது. (2பேதுரு1:2). தேவனைப் பற்றியும் அவருடைய சித்தத்தைப் பற்றிய அறிவு நம்மில் பெருகும்போது அவருடைய சமாதானமும், கிருபையும் நம்மில் பெருகுகிறது, மேலும், நம் விசுவாசம் அதிக விலையேறப் பெற்றதாகிறது.

தேவனுடைய வல்லமை நமக்கு ஜீவனையும், தேவ பக்தியையும் தருகிறது. **தம்முடைய மகிமையினாலும், காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும், தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது, நமக்குத் தந்தருளினதுமன்றி** (2பேதுரு 1:3).

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அருமையானதாயிருக்கிறபடியால் கிறிஸ்தவனுடைய விசுவாசமும் அருமையானது. அவர் நமக்கு மகாமேன்மையும், அருமையான வாக்குத்தத்தங்களைத் தந்திருக்கிறார் (2பேதுரு 1:4). அந்த அருமையான வாக்குத்தத்தங்களை நாம் பிடித்துக் கொள்ளும்போது நம் விசுவாசம் அருமையாகிறது.

ஒரு கிறிஸ்தவனின் விசுவாசம் அருமையானது என்பதற்கு பேதுரு மற்றுமொரு காரணத்தைக் கொடுக்கிறார். வாக்குத்தத்தங்களைப் பற்றி சொல்லும்போது அவர் இவ்விதமாகச் சொல்கிறார் “அவைகள் நீங்கள் திவ்ய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாகும் பொருட்டு உங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது (1பேதுரு 1:4). திவ்ய சுபாவம் எதைப் போன்றது? கிறிஸ்துவைப் பற்றி பேசும்போது, எபிரெய எழுத்தாளர் இவ்விதமாகச் சொல்கிறார். நீர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர் (எபிரெயர் 1:9). அது திவ்ய சுபாவத்துக்கு பங்காளியான ஒரு நபரைப் பற்றியும் விவரிக்கிறது.

தேவன் மனிதனை சிருஷ்டித்த போது மனிதன் எதைப் போல இருந்தான்? தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும், பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் (ஆதி. 1:27). தேவனால் உண்டாக்கப்பட்ட ஆணும், பெண்ணும் பிசாசுக்கு செவிக் கொடுத்து, அவன் சொன்னதை விசுவாசித்து அவனுடைய ஆலோசனையின் படி நடந்தபோது அவர்கள் தேவனைப் போலிருக்கும்

சிலாக்கியத்தை இழந்து விட்டார்கள். சிலர், மற்றவர்களை விட கேடானவர்களாக இருக்கிறார்கள். ஆனால், பொறுப்புள்ள எல்லா ஜனங்களும் பாவம் செய்திருக் கிறார்கள் (ரோமர் 3:10,23).

ஆனால், தேவன், நம்மில் அன்பு கூர்ந்தபடியால் நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்கும்படியாகத் தம் குமாரனாகிய இயேசுவை அனுப்பினார் (யோவான் 3:16). தேவன் ஒருவரை இரட்சிக்கும்போது தம்முடைய சாயலில் அந்த நபரை மறுபடியும் சிருஷ்டிக்கிறார். **பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக் கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே** (கொலோ. 3:9,10). அங்கே தேவனுடைய கிரியை இன்னும் முடியவில்லை. புதிய மனுஷன் புதிதாக்கப்படுகிறார்.

நாம் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாவதற்கு முன்பாக நடைபெற வேண்டிய ஒன்றிருக்கிறது. இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பவேண்டும். (2பேதுரு 1:4). இச்சை அல்லது தீய ஆசை மனித சுபாவத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. எனவே, ஒருவர் தான் விரும்புகிறதை செய்வது இயற்கையானது தான். மனிதனுடைய சுபாவம் அவனை மிகப்பெரிய கேட்டுக்குள்ளாக வழிநடத்துகிறது. எனவே, மனிதன் திவ்விய சுபாவத்துக்கு, பங்குள்ள வனாவதற்கு முன்பாக இதிலிருந்து தப்ப வேண்டும். மனிதனுடைய விசுவாசம் அவனை கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படுத்தும்போது அவன் தப்பித்துக் கொள்கிறான். பேதுரு முதன் முறையாக முழுமையான சுவிசேஷப் பிரசங்கத்தைச் செய்தபோது அவர் மக்களைப் பார்த்து இவ்விதமாகச் சொன்னார். நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப். 2:38). மன்னிப்படைந்த நபர் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார். நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே (கலா. 3:26,27).

அநேகமாக, இங்கே ஒரு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. பின்னர் மனந்திரும்பிக் கொள்ளலாம் என திட்டமிடுபவர்களுக்கு பாவம் ஒரு பொருட்டல்ல என்று தோன்றலாம். ஆனால், அது திவ்விய சுபாவம் அல்ல. **கிறிஸ்துவின் ஆவியில் லாதவன் அவருடையவனல்ல** (ரோமர் 8:9). தீய இச்சைகள் நம் மனங்களிலிருந்தால் நாம் கேட்டிலுருந்து தப்பமுடியாது. அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்கு உரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; (ரோமர் 8:5).


விசுவாசத்தினால் நாம் பாவ மன்னிப்பைப் பெறுகிறோம். விசுவாசம் உள்ளவர்கள் திவ்விய சுபாவத் துக்குப் பங்குள்ள வர்களாகிறார்கள். கிறிஸ்தவனுடைய விசுவாசம் எவ்வளவு அருமையானது! ✞

# பிரதான கட்டளையா அல்லது பிரதான தவிர்த்தலா?

## Great Commission or Great Omission

*Jerry A. Jenkins*

கிறிஸ்தவ வரலாற்றில் ஈராயிரம் ஆண்டுகள் உருண்டோடிய பிறகும் கூட சபையானது கீழ்க்காணும் கர்த்தருடைய பிரதானமான கடைசி கட்டளைக்கு இன்னும் முழுமையாகக் கீழ்ப்படியாததினால் வெட்கித் தலைகுணிந்து நிற்கிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து: **ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்** (மத்தேயு 28:19,20).



உலக மக்கள் தொகையில் பெரும்பாலானோர் தங்களைக் கிறிஸ்தவர்களென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது முற்றிலும் தவறான எண்ணமாகும்.

ஏனென்றால், கிறிஸ்தவன் என்பதற்கு வேதாகமம் என்ன விளக்கம் கொடுக்கிறதோ அதன்படி இவ்வுலகம் கிறிஸ்தவர்களைப் பார்ப்பதில்லை. எப்படியெனில், உலகத்தின் பார்வையில் கத்தோலிக்கர்கள், ப்ராட்டஸ்டன்ட்கள் பெந்தெகொஸ்தேகாரர்கள் போன்றோர்தான் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். இதனடிப்படையில், மத உலகம் இயேசுகிறிஸ்துவோடு சரியான ஐக்கியம் கொள்ளவில்லை.

தேவனுடைய ஜனங்கள் கிறிஸ்துவின் பிரதான கட்டளையின் அவசியத்தை உணர வேண்டும். நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஆவிக்குரிய காரியங்கள் கொழுந்துவிட்டு எரியவேண்டும். நாம் நமக்குக் கிடைத்திருக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை எண்ணி சந்தோஷப்பட வேண்டும். எப்படியெனில், ஆண்டவருடைய பாதத்தில் அமர்ந்து அவருடைய போதனைகளைக் கேட்பதின் மூலமும், சுவிசேஷ ஊழியம் மற்றும் ஆத்தும சந்திப்பு போன்ற காரியங்களின் மூலமும் நாம் சந்தோஷப்பட முடியும். எனவே, இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளையானது, ஒரு சபை அங்கத்தினருடைய தனிப்பட்ட விருப்பமோ அல்லது தெரிந்து கொள்ளுதலோ அல்ல. மாறாக, அக் கட்டளையை நிறைவேற்றுவது அவரைப் பின்பற்றுகிற எல்லோர் மேலும் விழுந்த கடமையாயிருக்கிறது.

இப்பிரதான கட்ளையானது இவ்வுலகத்தை உண்டாக்கினவரும் இவ்வுலகத்திற்குச் சொந்தக்காரருமான உன்னத தேவனிடமிருந்து வந்ததாகும். **பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது** (சங்கீதம் 24:1).

பிரதான கட்டளையானது ஆவிக்குரிய கட்டளையை அடிப்படையாகக் கொண்டது. கிரேக்கருக்கும் மற்ற அந்நியர்களுக்கும் ஞானிகளுக்கும் மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன் என்று அப்போஸ்தலன் பவுல் குறிப்பிடுகிறார் (ரோமர்1:14). நாம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட ரீதியில் கர்த்தருக்குக் கடன்பட்டிருக்கிறோம். இக்கடனை நம்மால் முழுமையாக அடைக்க முடியாது. அதே சமயம் இந்தக் கடனிலிருந்து நம்மால் தப்பித்துக் கொள்ளவோ, அதைத் தவிர்க்கவோ முடியாது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனிப்பட்ட முறையில் பிரதான கட்டளையை நிறைவேற்றப் பிரயாசப்பட வேண்டும். இக்கட்டளை இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிற எல்லோருக்கும் பொருந்தும். இதைக்குறித்து பெரும்பாலான கிறிஸ்தவர்கள் அக்கறையில்லாமலிருப்பது நமக்கு கவலையளிக்கக்கூடிய காரியமாயிருக்கிறது. நாம் அப்படியிராமல் பிரதான கட்டளையை உணர்ந்து அதில் முழுமையாய் நம்மை ஈடுபடுத்திக் கொள்ளமுடியும். உதாரணமாக, நீங்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பயணிக்கும்போது கூட மற்றவர்களைச் சீஷராக்கும் சிலாக்கியத்தையும், பொறுப்பையும் பெற்றிருக்கிறீர்கள்.

**உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக் கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?** (1கொரி. 6:19,20). ஆகவே, நம்மை பிரதான கட்டளைக்கு முழுமையாக அர்ப்பணித்து அதை நிறைவேற்றப் பிரயாசப்படுவோம். ✝

# மறக்கப்பட்ட செயல்
## The Forgotten Act
*Tim Forlines*

**ஆ**ராதனை மிக முக்கியமான பங்குகளைக் கொண்டிருக்கிறது. அதாவது, **பாடல், ஜெபம், கர்த்தருடைய பந்தி, பிரசங்கம்** மற்றும் **கொடுத்தல்** போன்றவை அந்தப் பங்குகளாகும். கிறிஸ்துவின் சபை ஆராதனை உலக முழுவதிலும் இதே முறைதான் பின்பற்றப்படுகிறது.

மேற்சொல்லப்பட்ட பட்டியலில் ஒரு பங்கு அல்லது செயல் இல்லாமலிருக்கிறது. இதுவும் ஆராதனையின் மற்ற பங்குகளைப் போல முக்கியமானது. ஆனால், இதை யாரும் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. இந்த விஷயம் ஆராதனையின் எல்லாப் பங்குகளிலும் உட்பொருளாக உள்ளது. ஆனால், அதைச் செயல்படுத்துவதில் குறை உள்ளது. இந்தத் தவறை நாம் ஒரு போதும் செய்யவே கூடாது. நான் சொல்வது **பங்கேற்பு** என்னும் செயலைப் பற்றித்தான். ஆராதனையில் நம்முடைய பங்கேற்பு முழுமையாக இல்லையென்றால், அதில் நாம் வெறுமனே வேடிக்கை பார்ப்பவர்களாகவே இருப்போம். ஆராதனையில் நாம் முழுமையாகப் பங்குபெறாமல் இருந்தால், அந்த ஆராதனை தேவனால் ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை.

உதாரணமாக, பாடல் வேளையின்போது, நம்முடைய பங்கேற்பு இல்லையென்றால், நாம் வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டு பாடல்களை ரசிப்பவர்களாகத்தான் இருப்போம். தேவனுக்கு துதிப்பாடல்கள் ஏறெடுக்கும்பொழுது, அதில் நம் மனம் மகிழ்ச்சி கொள்ளும். கர்த்தரை கெம்பீரமாய்ப் பாடவேண்டுமென்றுதான் இஸ்ரேலுக்குச் சொல்லப்பட்டது (சங்.95:1,2). நாம் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டுமென்றும் போதிக்கப்பட்டிருக்கிறோம் (பிலிப்பியர்4:4). ஆகவே, பாடல் வேளையின்போது நம்மை முழுமையாக அர்ப்பணித்து, தேவனைத் துதிக்க வேண்டும். அப்படியிராமல், நாம் சுயநலமாக இருந்தால் ஆவிக்குரிய காரியங்களில் வளராமல் அமிழ்ந்து போய் விடுவோம், இதைத் தான் John price என்னும் வேத வல்லுனர் **புதிய ஆராதனையில் பழைய ஒளி என்று குறிப்பிட்டார்.**

அதைப் போலவே, பிரசங்கமும் சில வேளைகளில் பொழுதுபோக்கு அம்சமாகப் பார்க்கப்படுகிறது. சத்தியத்தைக் கேட்கும் ஜனங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்ட சத்திய வசனத்தின் செய்தி எவ்வளவு பிரயோஜனமாயிருக்கிறது, அது எந்த அளவுக்கு பக்தி விருத்தியை உண்டாக்குகிறது என்று பார்ப்பதை விட்டு விட்டு, பேச்சுத் திறமை எப்படி, அவருடைய அறிவுத் திறன் எப்படி என்று கவனிப்பது கவலையளிக்கிறது. வேத வசனங்களில், பிரசங்கிக்கப்படுவதற்கும் அவைகளை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ளுவதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது (லூக்கா 8:18; அப்.17:11 தெச. 2:13). இவ்விதமாகத் தேவனை ஆராதிக்கிற ஒவ்வொருவரும் பிரசங்கம் உட்பட ஆராதனையின் அனைத்துப் பங்குகளிலும் முழுமையாகப் பங்கேற்றால் தான் அது தேவனுடைய பார்வையில் மிகவும் விலையேறப்பெற்ற பொக்கிஷமாயிருக்கும். அதுவே தேவனுக்குப் பிரியமானதுமாயிருக்கும்.

மேலும், அவர் எழுதும்போது, ஆராதனையில் உணர்வுகள் ஈடுபடுத்தப்பட வேண்டியது உண்மையாக இருந்தாலும் கூட, அவ்வுணர்வுகளை உந்துவது நம்முடைய மனதிலிருக்கும் சத்திய வசனமாக இருக்க வேண்டும். சத்தியத்தைத் தவிர்த்து, உணர்வுகளின் மீது நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு செயல் தேவனுடைய ஆராதனையில் ஏற்புடையதாக இராதபடியால் நாம் நம் மனதை ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும்.

**மறக்கப்பட்ட செயல் உண்மையாகவே**
**என்றென்றும் மறக்கப்படாமல் இருப்பதாக !** ✞

## தேவனுடைய சபை

**புதிய ஏற்பாட்டு சபை செங்கல், மரம், கல், போன்றவைகளால் ஏற்பட்டது என்று அநேகர் நினைக்கிறார்கள். அதனால் தான் ஞாயிறு ஆராதனைக்குப் பின் அது வெறுமையாக நிற்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், தேவனுடைய சபை ஆத்மாக்களால் ஆனது. அவர்கள் எட்டு திக்கும் தேவனுடைய ஆச்சரியமான அன்பையும், சிலுவையிலறையப்பட்ட இயேசுவையும் அறிவிக்கிறார்கள். ஒரு ஜீவிக்கும் சபை – ராஜரீகமான குடும்பம். கிறிஸ்து ராஜாவாக ஆளுகை செய்கிறார். கூடி வருகின்ற கஷ்டத்தின் கல்லும், மரமும் போன பிறகும் கிறிஸ்துவின் சபை என்றைக்கும் நிலைத்திருக்கும்.**

# நீங்கள் விரும்பியபடி ஆராதியுங்கள்
## Just So You Worship

Hugo Mecord

**ஆ**ராதனையில் நீங்கள் எதைச் செய்கிறீர்களோ அது முக்கியமல்ல, நீங்கள் விரும்பியபடி ஆராதியுங்கள் என்று சொல்லுவது மிக எளிது. ஆனால், ஆராதனையில் ஒருவர் என்ன செய்கிறாரோ அது முக்கியமானது என்று தேவன் சொல்லுகிறார். அதாவது, ஒருவர் மனிதக் கோட்பாடுகளின்படி ஆராதனை செய்தால் அந்த ஆராதனை வீணான ஆராதனையாகிவிடுகிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று கர்த்தர் சொன்னார் (மத்.15:9).

ஆபேல் விசுவாசத்தினாலே மிருக பலியைச் செலுத்தினான். விசுவாசம் தேவனுடைய வார்த்தையினால் வருகிறதாயிருக்கிறபடியால், தேவனுடைய வார்த்தை மிருக பலியைத் தான் குறிப்பிட்டிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு நாம் வர முடியும் (ஆதி. 4:4 ரோமர் 10:7 எபிரெயர் 11:4). தேவன் ஆபேலிடம் மிருக பலியைக் கட்டளையிட்டுவிட்டு காயீனிடம் கட்டளையிடாமல் இருந்திருக்க மாட்டார். தேவன் அன்பானவராக இருக்கிறபடியாலும், அவரிடத்தில் பட்சாபாதம் இல்லாதபடியாலும் தேவனிடத்திலிருந்து இரு சகோதரர்களுக்கும் ஒரே மாதிரியான கட்டளைதான் கிடைத்திருக்கும் (யோவான் 4:8; அப்.10:34). ஆகையால், நீ எதைப் பலியிடுகிறாயோ அது முக்கியமானது அல்ல என்று தேவன் சொல்லவில்லை.

தேவன் எதற்காக மிருகபலியைக் கட்டளையிட்டார் என்பதை இந்த இரு சகோதரர்களும் அறிந்திருக்கிறார்களா என்று தெரியாதிருந்தாலும் சம்பவங்களை ஆராய்ந்து பார்த்தால், தேவன், இயேசு கிறிஸ்துவின் பலியை அங்கே மனதில் கொண்டிருந்தார் என்பதை நாம் ஓரளவுக்குப் புரிந்துகொள்ள முடியும். இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29). இங்கே தேவன் என்ன சொன்னாரோ அதை அப்படியே ஆபேல் நிறைவேற்றினான்.

இச்சம்பவத்தில் காயீன், ஆபேலைக் கொன்றுவிட்டு தேவனிடம் பொய் சொன்னான். தேவன் உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்று கேட்டதற்கு நான் அறியேன் என்று சொன்னான் (ஆதி.4:9). காயீன் செய்த இப்பாவங்களைப் பற்றி யோவான் அப்போஸ்தலன் சொல்லும்போது, காயீனுடைய கிரியைகள் பொல்லாதவைகள் என்று சொல்லுகிறார் (1யோவான் 3:12). காயீன் இந்தப் பாவங்களைச் செய்யக் காரணமாயிருந்த கிரியைகள், கர்த்தர் கட்டளையிடா பலியை அவன் செலுத்தியதுதான் என்று பார்க்கிறோம். அதாவது, அவன் மிருகபலிக்குப் பதிலாக நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்கு பலியாகச் செலுத்தி தேவனுடைய கோபத்திற்கு உள்ளானான். ஆகவே, ஆராதனையில் கர்த்தர் அங்கீகரிக்காத காரியங்களைச் செய்வது பொல்லாங்கான செயலாகும்.

காயீனுடைய பலியைத் தேவன் நிராகரித்த பிறகும் கூட, அங்கே அவனுக்கு நம்பிக்கை இருந்தது. எப்படியெனில் தேவன் காயீனிடத்தில் அன்பு கூர்ந்தார். அப்போது, காயீனால் மனந்திரும்பியிருக்க முடியும். நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும். அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும் என்று தேவன் சொன்னார். இங்கே, பாவத்தைக் குறித்து தேவன் குறிப்பிடும்போது, யார் மீது பாயலாமோ என்று பசியுடன் பதுங்கியிருக்கும் ஒரு மிருகத்திற்கு ஒப்பாகக் குறிப்பிடுகிறார்.

காயீன் தன் மனதை மாற்றிக்கொண்டால், அதாவது மனந்திரும்பினால் அவனால் பாவத்தை ஆண்டுகொள்ள முடியுமென்பதை தேவன் அறிந்திருந்தார். அதனால்தான், “நீ” என்று இரண்டு முறை குறிப்பிட்டு காயீனை மனந்திரும்பபடி வலியுறுத்தினார் (ஆதி.4:7). இது என்னே ஓர் அற்புதமான காட்சி! பாவத்திலிருந்து ஆத்துமாவை மீட்டெடுக்க இப்பிரபஞ்சத்தின் நேரம் எடுத்துக்கொள்வது நம்மை ஆச்சிரியத்தில் ஆழ்த்துகிறது. இந்தக் காயீனால் பொல்லாங்கனை ஜெயித்து பாவங்களை ஆண்டு கொண்டிருக்க முடியும். ஆனால், அவன் அப்படி செய்யத் தவறி விட்டான் (1யோவான் 2:14).

இன்றைய கிறிஸ்தவர்கள் இந்த பழைய வரலாற்றுச் செய்திக்குச் செவி கொடுக்க வேண்டுமா? ஆம், காயீனின் வழியில் நடக்கிறவர்களுக்கும் ஐயோ என்று புதிய ஏற்பாடு புடமிட்டு நம்மை எச்சரிக்கிறது (யூதா 11). காயீனின் வழி என்பது என்ன? அது ஆராதனையில் நீங்கள் என்ன செய்கிறீர்களோ அது முக்கியமல்ல. நீங்கள் விரும்பியபடி செய்யுங்கள் என்று சொல்லும் செயலாகும்.

அதுபோலவே, நாதாப் மற்றும் அபியூவிடம் தேவன் பலிபீடத்தின் மேலிருக்கிற அக்கினி அவியாமல் எரிந்துகொண்டிருக்க வேண்டும், ஆசாரியன் காலைதோறும் அதின் மேல் எரியும்படி கட்டைகளை போட்டு, அதின் மேல் சமாதான பலிகளின் கொழுப்பைப் போட்டுத் தகனிக்கக்கடவன் என்று கட்டளையிட்டிருந்தார் (லேவி.6:12). மேலும், ஆசாரியர்கள் கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின் மேலுள்ள நெருப்புத்தழலினால் தங்கள் தூபகலசத்தை நிரப்ப வேண்டும் (லேவி.6:12) என்ற கட்டளை பெற்றிருந்தும் நாதாவும், அபியுவும் காரணமில்லாமல் அந்நிய அக்கினியால் தங்கள் தூபகலசத்தை நிரப்பினார்கள் (லேவி.10:1).

அவர்களுடைய அக்கினி பரிசுத்த பலிபீடத்திலிருந்து வராதபடியால், அது பரிசுத்தமற்ற, அங்கீகரிக்கப்படாத அந்நிய அக்கினி என்று மோசே குறிப்பிடுகிறார். அவர்களுடைய செயல்பாடு கர்த்தருக்கு கடுங்கோபத்தை மூட்டியது. கர்த்தர் உடனே அவர்களை அக்கினியில் பட்சித்தார். அதுபோலவே, ஆராதனையில் நீங்கள் என்ன செய்கிறீர்களோ அது முக்கியமல்ல, நீங்கள் விரும்பியபடி செய்யுங்கள் என்று சொல்லும் உபதேசம் முற்றிலும் தவறானது என்பதை தேவன் இதன் மூலம் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

தேவ தாசனாகிய மேசே குறிப்பாக லேவி.10:1–ல் அந்த ஆசாரியார்கள் தேவன் கட்டளையிடாதவைகளைச் செய்தார்கள் என்று

சொன்னார். கர்த்தர் கட்டளையிடாத ஒன்றைச் செய்யும் எந்த ஒரு நபரும் கர்த்தரைத் தள்ளி தன்னை அதிகாரியாக வைத்துக் கொள்கிறார்.

மேலே நாம் பார்த்தவிதமாக, காயீன் மற்றும் நாதாப், அபியூ போன்றோர் கர்த்தர் கட்டளையிடாததைச் செய்தது போல, சவுல் ராஜாவும் கர்த்தர் கட்டளையிடாததைச் செய்ததாக நாம் காண்கிறோம் (1சாமு. 15:9). அவன் தன்னைத்தான் அதிகாரியாக நினைத்து, ஆடுமாடுகளில் சிறந்தவைகளில் சிலவற்றை அழித்துப் போடாதது தேவனைக் கோபப் படுத்தியது. அச்சூழ்நிலையில், சாமுவேல் தீர்க்கதரிசி சவுலைப் பார்த்து நீங்கள் என்ன செய்கிறீர்களோ அது முக்கியமல்ல, நீங்கள் விரும்பியபடி செய்யுங்கள் என்று சொல்லாமல், பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தாலும் உத்தமம் என்றல்லவா கடிந்து கொண்டார் (1சாமு. 15:22).

அதேபோல், ஊசா என்ற மனிதனும் தேவன் கட்டளையிடாத ஒன்றைச் செய்து தேவ கோபத்துக்கு ஆளானான். மாடுகள் மிரண்டு தேவனுடைய பெட்டியை அசைத்தபடியினால், அவன் தேவனுடைய பெட்டியினிடமாய்த் தன் கையை நீட்டி அதைப் பிடித்தான். ஊசாவினுடைய துணிவினிமித்தம் தேவன் அங்கே அவனை அடித்தார் (1சாமு. 6:6,7).

இந்தப் பழைய ஏற்பாட்டு சம்பவங்களுக்கும் புதிய ஏற்பாட்டு, காலத்தில் வாழும் மக்களுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? ஆம். பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் இன்றளவும் பாதுகாக்கப்படுவதற்கான காரணங்களுள் ஒன்று அவைகள் நமக்கு திருஷ்டாந்தகளாயிருந்து நம்மை எச்சரிக்கிறது (1கொரி 10:6,11).

தேவனுக்கான பலியானது மிருகபலியாக இருந்தாலும் சரி, கனிகளின் பலியாக இருந்தாலும் சரி, தூய கலசத்திற்கான அக்கினி பலிபீடத்திலிருந்து வந்தாலும் சரி, அது சமையலறையிலிருந்து வந்தாலும் சரி இவைகள் நம்மால் அற்பமாகவே பார்க்கப்படுகிறது. மாறாக, தேவன் தாம் கட்டளையிடாத ஒன்றை நாம் செயய்யும்போது, அதை அவர் மிகப்பெரிய பாவமாகவே பார்த்து, அதற்குத் தக்க தண்டனையும் வழங்குகிறபடியால் எச்சரிக்கையாயிருப்போம்.

காயீன், நாதாப், அபியூ, சவுல் ராஜா, ஊசா போன்ற மரித்தோரிடமிருந்து வரும் குரல்கள் உரத்த சத்தமாய் வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே பேசவேண்டுமென்றும், வேதாகமம் எங்கே மௌனமாயிருக்கிறதோ அங்கே மௌனமாயிருக்க வேண்டுமென்றும் போதிக்கிறது. பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் கர்த்தருடைய போதனைகளோடு கூட்டுகிற அல்லது குறைக்கிற எந்த மனுஷனும் பாவி என்று உரக்கச் சொல்லுகின்றன. (உபா. 4:2, 12:32; நீதி. 30:6; யோவான் 9-11 வெளி.22:18,19) தேவனுடைய மௌனம் எப்போதுமே தடைசெய்கிறதே தவிர அனுமதிப்பதில்லை. தேவன் மௌனமாயிருக்கும்போது பேசத்துணிகிற ஒரு மனிதன் தாழ்மையுள்ளவனாக இருக்க முடியாது. நாம் தாழ்மையாய் அவரைப் பணிந்து ஆவியோடும் உண்மையோடும் அவரை ஆராதிப்போம். தேவனுடைய மௌனம் எப்போதுமே ஒரு செயலைத் தடை செய்கிறதே தவிர அனுமதிப்பதில்லை. ✞

# நீங்கள் கவனித்திருக்கிறீர்களா?

## *Have You Noticed*

Dalton Key



**ஆ**ராதனையில் உண்மையாக நீங்கள் பங்குபெறும்பொழுது அது அதிக அர்த்த முள்ளதாக இருக்கிறது. இச்செயல் நமக்கு பெந்தெகொஸ்தே நாளின் அனுபவத்தை நமக்குக் கொடுக்கிறது. ஆம், அந்நாளில் அக்கூட்டத்தில் பங்கேற்றவர்களில் உண்மையாய் சுவிசேஷ செய்தியைக் கேட்டவர்கள்தான் இருதயத்தில் குத்தப்பட்டார்கள்.

ஆராதனையின் போது, பிரசங்கவேளையில் நீங்கள் தூங்கினால் ஆவிக்குரிய போஷாக்கை இழந்து விடும் அபாயம் உண்டு. அப்படித்தானே? ஆவிக்குரிய வகுப்புகளின்போது தூங்கியவர்கள், பல ஆவிக்குரிய காரியங்களைக் கோட்டை விட்டிருக்கிறார்கள். ஆனால், தூக்கப் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டிருகக்கும் ஒருவர் என்னிடம் சொல்லும்பொழுது, கண்விழித்து பிரசங்கத்தைக் கேட்டவர்களை விட, அதிகமான காரியங்களைத் தான் தூங்கும்போது, என் பிரசங்கங்களிலிருந்து கற்றுக்கொண்டதாகச் சொல்லி என்னை ஆச்சரியத்திற்குள்ளாக்கினார்.

ஆராதனையில் நம் பங்கேற்பு, நாம் ஆவிக்குரிய வாழ்வில் மேம்படவும், பக்திவிருத்தியடையவும் உதவுகிறது. ஆராதனையில் உண்மையான மன நிலையோடு பங்கேற்கிறவர்கள்தான் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை அளவில்லாமல் வீட்டிற்குச் சுமந்து செல்கிறார்கள்.

நாம் பாடல்களை உணர்ந்து பாடும்போதுதான் சபையாரின் பாடல், நம் காதுகளில் இனிமையாய் ஒலிப்பதை உணரமுடியும். இதிலே விநோதமான செயல் என்னவென்றால், தங்கள் வாயைத்திறந்து பாடல்களைப் பாடாதவர்கள்தான் சபையிலே பாடல் சரியில்லை என்று முதலில் முறையிடுகிறவர்களாக இருக்கிறார்கள். பாடல் பாடும்போதும், ஜெபங்கள் ஏறெடுக்கும்போதும் அதை உற்றுக் கவனித்தால் அநேகக் காரியங்களைக் கற்றுக்கொள்ள முடியும். தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளுகிறவர்களைத் தான் அவர் தேடிக்கொண்டிருக்கிறார் (யோவான் 4:23,24).

ஆராதனையில் நாம் நம்மை முழுமையாக ஈடுபடுத்தும்போது, நாழிகை நகர்வதே தெரியாது. அதே வேளையில், ஆராதனையில் குறைவான கவனம் செலுத்தும்போது நிமிடம் கூட யுகமாகத் தோன்றும். ஆகவே ஆராதனையில் நம்மை முழுமையாக ஈடுபடுத்தத் தீர்மானிப்போம்! ✞

# பவுலின் வாழ்க்கையில் நான் யார்?

## Who Am I in the Life of Paul ?

*Rebecca Rushmore*

என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கவனமாக வாசித்து, நீங்கள் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு நபருக்கும் 10 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொள்ளுங்கள். என் அடையாளத்தை நீங்கள் உறுதி செய்துவிட்டால் சரிபார்க்க தேவனுடைய வார்த்தையிலிருந்து வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

1. பவுலை தமஸ்குவில் ஞானஸ்நானப்படுத்தின, **நான் யார்?**
2. சவுல் என்னும் பவுலால் குருடாக்கப்பட்ட கள்ளதீர்க்கதரிசியாகிய, **நான் யார்?**
3. பவுலோடு இரண்டாம் சுவிசேஷப் பயணத்தில் இருந்த, **நான் யார்?**
4. பிலிப்பி பட்டணத்தில் ஆற்றங்கரையில் பவுலின் சுவிசேஷத்தை கேட்ட, **நான் யார்?**
5. கொரிந்து பட்டணத்தில் பவுல் எங்களோடு வாழ்ந்தார். **நாங்கள் யார்?**
6. இயேசு கிறிஸ்துவைப் பற்றி பவுலின் உபதேசத்தை எதிர்த்த தட்டானாகிய, **நான் யார்?**
7. பவுல் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது ஜன்னல் வழியாய்க் கீழே விழுந்த, **நான் யார்?**
8. பவுல் எருசலேமிலே கைது செய்யப்படுவார் என்று முன்னறிவித்த, **நான் யார்?**
9. பவுல் எருசலேமிலே கட்டப்பட்ட பிறகும் எங்களுக்குப் பிரசங்கித்தார். **நாங்கள் யார்?**
10. பவுலிடம் நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்ற **நான் யார்?**

# கிறிஸ்தவப் பெண்மையின் பண்புகள்

## ATTRIBUTES OF CHRISTIAN WOMENHOOD

*JIMMY JIVIDEN*

I **தீமோத்தேயு 2:9–15 வசனப் பகுதியில்** கிறிஸ்தவப் பெண்ணின் நான்கு பண்புகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

- பெண்ணின் **அழகு** தகுதியான வஸ்திரத்தில் வெளிப்பட வேண்டும் (9–10)
- பெண்ணின் **பேச்சுத்திறன்** மென்மையான சொற்களில் வெளிப்பட வேண்டும் (11–12)
- பெண்ணின் **பெலன்** தாழ்மையான கீழ்ப்படிதலில் வெளிப்பட வேண்டும்(13–14)
- பெண்ணின் **மகிமை** அன்பான தாய்மையில் வெளிப்பட வேண்டும் (15)



இன்று சமத்துவ கலாச்சாரத்தில் வாழும் சிலர், பெண்கள் இத்தகைய பண்புகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லுவது அவர்களை இழிவுபடுத்துகிற காரியமாயிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லுகிறவர்கள் தவறான புரிதலில் இருக்கிறார்கள். ஆனால், தேவனோ இந்த அற்புதமான பண்புகளை தம்முடைய **இறுதிப் படைப்பாகிய பெண்ணுக்கு** அள்ளி வழங்கி யிருக்கிறார்.

**தகுதியான வஸ்திரங்களை உடுத்துவது என்பது** அவர்கள் இப்படித்தான் ஆடை அணியவேண்டும் என்பதல்ல, அதற்கு மாறாக, மற்றவர்களின் பார்வையில் அது உகந்ததாயிருக்க வேண்டுமென்பதே ஆகும். அதேபோல், **நாணம், தெளிந்த புத்தி, தாழ்மை, அமைந்தலுள்ள ஆவி** போன்றவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள பெண்கள், பொன்னாபரணங்கள் மற்றும் விலையுயர்ந்த வஸ்திரங்களைத் தரித்துக்

கொண்டும் தங்கள் மேன்மையான அழகை வெளிப்படுத்துகிறார்கள். இத்தகைய பெண்களின் அழகு உள்ளிருந்து மிளிர்கிறது.

**அமைதி** என்பது அறியாமையின் அடையாளமல்ல, மாறாக, நாவை அடக்கி நாம் என்ன பேசுகிறோம், எங்கே பேசுகிறோம், எப்போது பேசுகிறோம், எப்படி பேசுகிறோம் என்பதை நிச்சயமாக அறிந்து கொள்ள உதவும் மிகப் பெரிய ஞானத்தின் வெளிப்பாடாகும்.

**கீழ்படிதல்** என்பது பெலவீனத்தின் ஓர் அடையாளமல்ல. மாறாக, தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாகக், கீழ்ப்படுத்துவதாகும். இயேசு கிறிஸ்துவும் தேவனுடைய சித்தத்திற்கு தம்மை முழுமையாகக் கீழ்ப்படுத்தியதால்தான் உயர்த்தப்பட்டார். அவர் சிலுவையை பயத்தினாலோ அல்லது சுமக்க வேண்டுமென்பதற்காகவோ சுமக்காமல், தேவனுடைய சித்தத்தின்படி சுமப்பதைத் தெரிந்து கொண்டார். அதுபோல பெண்களும் சுயத்தைக் கீழ்ப்படிதலினால் மேற்கொள்ளுவதுதான் மிகப் பெரிய

**தாய்மை** என்பது இயலாமையின் அடையாளமல்ல, மாறாக, தாய்மையானது கனத்தின் உயரிய நிலையாகவும், சேவையின் மிகப்பெரிய அம்சமாகவும் திகழ்கிறது. இத்தாய்மை என்பது **மகாராணி, இளவரசி, ஜனாதிபதி** போன்ற பதவிகளை விட மேலானது என்று சொன்னால் அது மிகையல்ல. இன்னும் சொல்லப்போனால் **அம்மா என்று அழைக்கும் போதுதான் தாய்மையின் உண்மையான அன்பு வெளிப்படுகிறது.** அப்படி வெளிப்படும் தாய்மையின் உணர்வுக்கு முன்னால் இவ்வுலகின் விலையுயர்ந்த பொக்கிஷங்களெல்லாம் ஒன்றுமில்லாமல் போய்விடுகிறது.

**பெண்மையின் தன்மை இத்தகைய உயரிய நிலையிலிருந்து**
**மாறினால் அது அவர்கள் வாழ்க்கையில்**
**கீழ்நோக்கிச் செல்வதற்குச் சமமாகிவிடும்.**
**ஓர் அழகிய வண்ணத்துப் பூச்சி – ஏன்**
**அருவருக்கப்படும் கம்பளிப்பூச்சியாக மாற வேண்டும்**

பெண்மையின் சிறப்பை வேதம் உயர்ந்த நிலையில் வைத்துப் போதிப்பதால் அக்குணங்களை அணிந்து ஆண்டவர் பணி செய்ய அர்ப்பணியுங்கள். ✞

# ஈவும், அதைக் கொடுத்தவரும்
# The Gift and the Giver

*Rex Banks*

**பா**பிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் தன்னுடைய அரமனை மேல் உலாவிக்கொண்டிருக்கும்போது, **இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின பாபிலோன் அல்லவா என்று சொன்னான்** (தானியேல் 4:30). கேள்வியை ராஜாவே கேட்டு, அதற்கான பதிலை அவரே சொன்னாலும், அதன் முழுமையான பதிலை தேவன் அந்த ராஜாவுக்கு ஏழுவருட தண்டனையின் மூலம் கொடுக்கிறார். மேலும், அந்தக் கொடுங்கோல் கோனுக்கு, உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் என்னும் பாடத்தையும் புகட்டினார் (தானியேல் 4:25). ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், பரலோகத்தின் தேவன்தான் தனக்கு ராஜரீகத்தையும், பராக்கிரமத்தையும், வல்லமையையும், மகிமையையும் அருளினார் என்பதை மறந்து விட்டபடியால் அவருக்கு நினைப்பூட்டல் அவசியப்பட்டது.

நம் எல்லோருக்கும் இப்பிரச்சனை இல்லாமலில்லை. தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட ஈவு குறித்து எண்ணாமல் மமதையாக இருந்து அதைக் கொடுத்த தேவனை எளிதாக மறந்து விடுகிறோம். மோசே, இஸ்ரவேலர்களை இவ்விதமாக எச்சரிக்கிறார். **என் சாமர்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிருந்து, உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்** (உபா.8:17,18). வெற்றி பெருமையை உண்டாக்குகிறதினால் தேசம் இவ்விதமாக எச்சரிக்கப்படுகிறது. **உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும், நான் இன்று உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையும் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு** (உபா.8:11). ஆனாலும், மீண்டும் மீண்டும் கானான் தேசம் இஸ்ரவேலர்களுக்குத்

தேவனால் கொடுக்கப்பட்ட ஈவாகவே நினைப்பூட்டப்படுகிறது (உபா.1:20,25;2:29;3:30:4:40;5:16). இது அவர்கள் நீதியினிமித்தமும், இருதயத்தின் உத்தமத்தினிமித்தமும் கொடுக்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக, ஒரு தேசம் பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது என்பதை மறக்கும்போது (சங்.24:1). பேராசையுள்ள, ஆசை அடங்காத, ஒரு போதும் திருப்தியடையாத, கர்வமுள்ள ஒரு சந்ததி எழும்பி தரித்திரரை ஒடுக்கி எளியவர்களை விழுங்கியது (ஆமோஸ் 5:11; 8:6). இப்படி தரித்திரரை ஒடுக்கியவர்கள், சக இஸ்ரவேலர் களாயிருந்தார்கள். இவர்களையும்தான் தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார் (லேவி.35:42). அவர்கள் குடியிருக்கும் தேசமும் தேவனுடையதாயிருக்கிறது (லேவி.25:23).

சகோதரர்களே, தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற ஈவுகளை நாம் எப்படிப் பயன்படுத்துகிறோம்? என் சாமர்த்தியத்தினால்தான் நான் இவைகளைச் சம்பாதிக்கிறேன் என்று நம்மை நாமே பெருமை பாராட்டும்படியாகத்தான் தேவன் நமக்கு வீடுகளை, வாகனங்களை, செல்வங்களைத் தந்திருக்கிறாரா? அல்லது நன்மைசெய்து நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாக இருக்கும்படியாகத் தந்திருக்கிறாரா? (1தீமோ.6:18). தேவன் உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் பிரியமாயிருக்கிறார் (1கொரி. 9:7). எப்படியெனில், **நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரவும் பரத்திலிருந்து உண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது என்பதை** ஒருவர் முழுமையாக ஏற்றுக்கொண்டால்தான் உற்சாகமாகக் கொடுக்க முடியும் (யாக். 1:17). நாம் நேபுகாத்நேச்சாரின் வலையில் (என் பலம் என் பராக்கிரமம்) விழுந்து விட்டால், நம்முடைய வாகனத்தை, நம் வீட்டை, நம் வருமானத்தை நம் எஜமானுடைய பாதங்களில் வைக்க மாட்டோம்.

நாம் நாமாகவே உண்டாகவில்லை. நாம் தேவனால் உண்டாக்கப் பட்டிருக்கிறோம். எப்படியெனில், நாம் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் (எபே.2:10). நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படியாகத்தான் தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டிருக்கிறோம் ( 1கொரி. 9:12). ஆகவே, தேவன் நமக்கு ஈவாகக் கொடுத்த அவருடைய வாக்குத்தத்தங்களை நினைத்துப் பார்க்க வேண்டும். என் **தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை யெல்லாம்** கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் (பிலிப்பியர் 4:19) என்ற நம்பிக்கையோடு நாம் அவர் பாதம் சேர வேண்டும். ✝

# இந்த வாரத்தில் நீங்கள் செய்த பத்துக்காரியங்கள். அவைகளை நீங்கள் ஒருபோதும் பரலோகத்தில் செய்யமாட்டீர்கள்

## *Ten Things You did This Week. That you will not do in Heaven*

*Mark Ray*

1. **நீங்கள்** ஈமச்சடங்குக்காக கல்லறைக்குச் சென்றீர்கள். **பரலோகத்தில்** மரணமில்லை (வெளி. 21:4).

2. **நீங்கள்** வெளிச்சத்திற்காக மின்விளக்கைப் போட்டீர்கள். **பரலோகத்தில்** தேவனே வெளிச்சமாய் இருக்கிறார் (வெளி. 21:23).

3. **நீங்கள்** சோதனையை எதிர்கொண்டீர்கள். சோதனைக்காரனான பிசாசுக்கு **பரலோகத்தில்** வேலையே இல்லை (வெளி.20:10).

4. **நீங்கள்** வியாதியஸ்தரைச் சந்தித்தீர்கள் **பரலோகத்தில்** வியாதி என்பதே இல்லை (வெளி. 21:4).

5. **நீங்கள்** உங்கள் கதவை அடைத்தீர்கள் **பரலோகத்தில்** தீங்கான சம்பவங்கள் காணப்படுவதில்லை (1வெளி. 21:27).

6. **உங்களுக்கு** வயதாகிவிட்டது நரைத்துவிட்டது போன்ற பிரச்சனைகள் இங்கே உண்டு. **பரலோகத்தில்** வயதாகுதல் போன்ற முந்தினவைகள் ஒழிந்துபோகும் (வெளி. 21:4).

7. **நீங்கள்** இங்கே கண்ணீர் விட்டீர்கள். **பரலோகத்தில்** கண்ணீர் இல்லை (வெளி. 21:4).

8. **நீங்கள்** இங்கே வலிநிவாரணிகளை எடுத்துக் கொண்டீர்கள். **பரலோகத்தில்** வலி, வேதனை ஏதுமில்லை (வெளி. 21:4).

9. **நீங்கள்** இங்கே பிழைக்க வேலை செய்தீர்கள். **பரலோகத்தில்** இளைப்பாறுவீர்கள் (வெளி. 14:13).

10. **நீங்கள்** இங்கே ஜெபித்தீர்கள் **பரலோகத்தில்** தேவனோடு முக முகமாய்ப் பேசுவீர்கள் (வெளி. 21::4). ✞

# ஊழியப் பணியில் ஒரு கிறிஸ்துவப் பெண்ணின் பங்கு

## A Christian Woman's Role in Evangelism

*Frank Chesser*

**தே**வனுடைய இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இழந்து போவார்கள் என்பதை உண்மையாகவே நாம் விசுவாசிக்கிறோமா? அதைக் குறித்து நாம் உண்மையாகவே அக்கறைப்படுகிறோமா? அடுத்த இருபத்திநான்கு மணி நேரத்தில் ஒரு இலட்சம் மக்கள் இழந்து போன நிலையில் காணப்படுவார்கள் என்பது நமக்கு நெருடலாக இல்லையா?

கிறிஸ்தவப் பெண்கள் மீது வேதாகமம் சில கட்டுப்பாடுகளை விதித்திருக்கிறது. ஆவிக்குரிய காரியங்களில் ஆண்களுக்கு அவர்கள் போதிப்பதோ அல்லது ஆண்கள் மீது அதிகாரம் செலுத்துவதோ கூடாது (1 தீமோ.2:12). ஒரு பெண்ணால் என்ன செய்ய முடியும் என்கிற தவறான புரிந்து கொள்ளுதலால், அநேகப் பெண்கள் எதையும் செய்யாமலிருந்து தங்கள் ஆத்துமாக்களை நரகத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆதிக்கிறிஸ்தவர்கள் எங்கும் சுற்றித்திரிந்து இயேசுவைப் பற்றி பிறருக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள். ஆண்களும், பெண்களும் கூடி வரும்போது ஒரு பெண்ணால் போதிக்க முடியாது என்றாலும், இரட்சிப்பின் இனிய செய்தியை மற்றவர்களுக்கு அவளால் எண்ணற்ற வழிகளில் சொல்ல முடியும்.

பெரும்பாலான ஊழியப் பணியில் இது தற்செயலாகவே நடக்கிறது. நம் அயலகத்தாரோடு ஒரு குவளை தேநீர் அருந்தி மகிழும்போது, நாம் கூடும் சபையின் பெயர் என்ன என்பதைக் குறிப்பிட்டு அப்படியே படிப்படியாக தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை அவர்களிடத்தில் எடுத்துரைக்கலாம். இத்தகைய எளிதான முறையில் ஒரு பெண் தன் அயலகத்தாரில் இருவரை கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார்.

நம் அயலகத்தாரை கிறிஸ்துவுக்குள் வழிநடத்துவது நம் விசேஷித்த பொறுப்பாயிருக்கிறது. உங்களுக்குப் பரிச்சயமான தெருக்களில் நடந்து, மூடப்பட்ட கதவுகளுக்குப் பின்னே வாழும் அந்த மக்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள். அவர்கள் தங்கள் நித்தியத்தை எங்கே கழிப்பார்கள்? சத்தியத்தை அறிந்து கொள்ள எங்கோ ஓரிடத்தில் ஒரு லீதியாள்

காத்திருக்கிறாள். சில வேளைகளில் முதியோர் தங்கள் தனிமை யினிமித்தம் வசனங்களைப் படிப்பதில் இளம்பெண்களை விட அதிக அக்கறையோடு ஏற்றுக் கொள்வார்கள். வீடுவீடாகச் சென்று மக்களை சந்தித்த போது, இப்படிப்பட்ட ஒரு வயதான பெண்ணை ஒரு கிறிஸ்தவ பெண் கண்டாள். அந்த கிறிஸ்தவப் பெண், தனியாக இருந்த அம்மாவிடம் வேதாகமப் படக்காட்சியைக் காட்டி வாரத்தின் இடைப்பட்ட நாளில் சந்திக்கத்தக்கதாக வசனங்களுடன் கூடிய சில வேதாகமக் கேள்விகளை விட்டுச் சென்று, இவ்விதமாக அவர்களோடு வேத பாடத்தைத் தொடர்ந்து படித்தாள். இறுதியில், எண்பத்தேழு வயதான அந்த அம்மா ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப் படிந்தாள்.

இளம் பெண்களும் பயனளிக்கும் இதே முறையை தங்கள் சக தோழிகள் மத்தியில் பயன்படுத்த முடியும். அவர்கள் தங்களோடு படிக்கும் மாணவிகளை வீட்டிற்கு வேத பாட வகுப்புக்கென்று அழைத்து, அதில் வேதாகமப் படக்காட்சியைக் காட்டி அல்லது திறந்த வேதாகமப் பாடம் நடத்தி வெற்றியடைந்ததை நான் பார்த்திருக்கிறேன்.

ஓர் இளம் பெண் திறந்த வெளி வேதபாட முறையைப் பயன்படுத்தி அநேகப் பெண்களைச் சந்தித்தாள். இந்தக் கிறிஸ்தவ இளம்பெண் தன்னோடு பள்ளியில் பணியாற்றும் ஆசிரியைகளை சாயங்காலத்தில் ஒவ்வொரு வாரமும் தன் வீட்டிற்கு வேதாகமத்தைப் படிக்க அழைத்தாள். அவர்கள் சுவிசேஷப் புத்தகங்களில் ஒன்றை வசன வசனமாகப் படிக்கத் தொடங்கி னார்கள். அந்தப் பெண்களில் அநேகர் வேதாகமத்தை வாசித்தது கூட இல்லை. சுவிசேஷப் புத்தகங்க ளில் ஒன்றை அவர்களோடு படித்தது, தொடர்ந்து அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை அவர்களோடு படிக்க வழி வகுத்தது. அதில் இடம்பெற்றுள்ள மனமாற்ற சம்பவங்களைப் படித்தவுடன் ஆர்வம் ஏற்பட்டு, ஞானஸ்நானத்தில் கர்த்த ருக்குக் கீழ்ப்படிய விரும்பினார்கள்.

ஒரு பெண் அறிமுகமில்லாத பெண்ணுடன் வேத வாக்கியங்களைப் படிக்கத் தயக்கம் காட்டினால், இன்னொரு வழியிருக்கிறது. அறிமுகமான ஒரு பெண் ஞானஸ்நானம் பெறும்போது, அவளிடத்தில் போய் நான் உங்கள் வீட்டுக்கு வசனங்களைப் படிக்க, சில அடிப்படைப் பாடங்களைப் படிக்க வரலாமா என்று கேளுங்கள். அவளுக்கு வசனங்களை எப்படி கண்டுபிடிப்பது எனக்காட்டி, பல்வேறுபட்ட தலைப்புகள் குறித்த வசனங்களை ஒரு நோட்டுப் புத்தகத்தில் எழுதிக்கொடுக்கும்போது, அந்தப் பெண் அந்தத் தகவல்களைத் தன் விரல் நுனியில் வைத்துக் கொண்டு எதிர் காலத்தில் மற்றவர்களுக்குப் போதிக்க முடியும்.

அஞ்சல் வழிப் பாடங்களைத் திருத்துவது ஒரு கிறிஸ்தவப் பெண் மற்றவர்களுக்கு போதிக்கும் இன்னொரு வழியாகும். இப்படிப்பட்ட வேலையாட்களை அநேக சபைகள் தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கின்றன. ஒரு மருத்துவமனையில் முடங்கிக்கிடந்த பெண் இழந்து போனவர்களை சந்திக்கும் முயற்சியில் ஈடுபட விரும்பினாள். அந்த வேலையை எளிதாக்க அந்த உள்ளூர் சபையில் உள்ள மூப்பர்கள் அவளுடைய சக்கர நாற்காலியில் ஒரு போர்டை வைத்துக் கொடுத்தனர். சீக்கிரமாக அந்த மருத்துவமனையிலிருந்த மற்றொரு பெண்ணை தன்னுடன் பிறருக்குப் போதிக்க தேர்வு செய்து கொண்டாள். ஒரு வருடத்தில் நூற்றுக்கணக்கான மக்களுக்கு இந்தப் பெண்கள் போதித்தார்கள். அந்த உள்ளூர் சபையால் கொடுக்கப்பட்ட ஞானஸ்நானங்களை விட இந்தப் பெண்களுடைய பணியால் அதிக ஞானஸ்நானங்கள் கொடுக்கப் பட்டுள்ளன!

ஒரு கிறிஸ்தவப்பெண் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் யாரோ ஒருவருக்கு போதிக்கும் பணியைச் செய்துவிட்டால், போதிக்கப்பட்டவர்கள் அப்படியே இருந்துவிடப் போவதில்லை. யாரோ ஒருவரை அடுத்ததாக கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்தும் வரை அவள் சமாதானமாக இருக்க மாட்டாள். அது அவளுக்கு ஒரு தொடர் சிந்தனையாகி விடும். என்ன ஓர் அருமையான அனுபவம்! ✞

## மூன்று வகையான தவறான ஆராதனைகள்

☞ **வீணான ஆராதனை** (மத்.15:8,9)

1. இது வெறுமையாகச் செய்யப்படும் ஆராதனை
2. இதற்கு நோக்கமும், ஆவிக்குரிய ரீதியில் அர்த்தமும் இல்லை.
3. ஆகவே, இது ஏற்றுக் கொள்ளப் படத்தக்கதல்ல

☞ **சுய இஷ்டமான ஆராதனை** (கொலோ.2:20,23)

1. மனிதனுடைய விருப்பத்தின்படி ஏறெடுக்கப்படுகிறது.
2. இது மனித வழிகாட்டுதலின் படியானது.
3. இது மனிதன் மனிதனை வழி நடத்துவது போன்றது.

☞ **அறியாத ஆராதனை** (அப்.17:23)

1. புரிந்து கொள்ளாமல் ஆராதிப்பது.
2. இது நேர்மையானதாகவும் நல்ல நோக்கமுடையதாக இருந்தாலும் கூட, ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதல்ல.

# மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள்

## *A Great Cloud Of Witnesses*

*Tim Nichols*

எபிரெயர் பன்னிரெண்டாம் அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களில் உண்மையுள்ள தேவனுடைய வேலைக்காரர்களாக நாம் இருப்பதற்கு நம் வாழ்க்கையில் தடையாக இருக்கும் எல்லாவற்றையும் நீக்கிப்போட வேண்டுமென்று எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட எபிரெய எழுத்தாளர் நாம் ஓர் ஓட்டப்பந்தயத்திற்கு ஆயத்தமாவதையும் அந்தப் பந்தயத்தில் ஓடுவதையும் உருவமாகப் பயன்படுத்தியிருக்கிறார். அவர், அநேகர் அந்த ஓட்டப் பந்தயத்தில் ஓடி ஓட்டத்தை முடித்ததையும் நம் முன்பாகக் காட்டுகிறார். அவர்களெல்லாரும் மிக பயங்கரமான விளைவுகளை எதிர்கொண்ட போதிலும் தேவனுக்குக் கீழ்ப்படிந்து விசுவாசத்தின் ஜனங்களாக இருந்தார்கள்.

விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான் (எபி. 11:4). விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான் (எபி. 11:5). நோவா பேழையை உண்டு பண்ணினான் (11:7). ஆபிரகாமும், சாராளும் தேவன் எங்கே போகச் சொன்னாரோ அதைச் செய்தார்கள். ஆபிரகாம் தன் ஒரே குமாரனாகிய ஈசாக்கை தேவனுக்குப் பலியாகக் கொடுத்ததினாலே தேவனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்தார். ஆபிரகாம் தன்னுடைய குமாரனனைத் தேவன் மறுபடியும் உயிரோடு எழுப்புவார் என்று விசுவாசித்தபடியால் ஈசாக்கைப் பலியாகக் கொடுத்தார் (11:8-12,17-19). ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு மோசே, ராகாப், கிதியோன், பாராக், சிம்சோன், தாவீது, யெப்தா மற்றும் தேவனுடைய தீர்க்கதரிசிகளெல்லாம் விசுவாசத்தில் செயல்பட்டார்கள். அவர்கள் தேவனை விசுவாசித்து அந்த விசுவாசத்தின் அடிப்படையில் அவருக்குக் கீழ்ப்படிய மனமுவந்துவந்தார்கள்.

அவர்கள் எதைச் சகிக்க வேண்டியதாயிருந்தது? அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிவதற்காக என்ன விலைகொடுக்க வேண்டிய தாயிருந்தது? மோசே எகிப்து ராஜாவின் கோபத்தையும், அவனுடைய வல்லமையுள்ள சேனையையும் எதிர் கொண்டான் (11:27). சிலர் சித்திரவதை செய்யப்பட்டார்கள். சிலர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். சிலர்

கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்தார்கள். சிலர் வனாந்திரங்களிலேயும், மலைகளிலேயும், குகைகளிலேயும், பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள் (11:36-38).

அவர்கள் தேவன் நிமித்தம் அப்படிச் செய்ததினால் என்ன நன்மை பெற்றார்கள்? நோவா தன் வீட்டாரை இரட்சித்தார். ஆபிரகாம் கிறிஸ்துவுக்கு முற்பிதாவானார். யோசேப்பு பஞ்சத்தினால் தேவனுடைய ஜனங்கள் மரணத்தினால் மடிந்து போகாதபடிக்கு அவர்களைக் காப்பாற்ற தேவனால் பயன்படுத்தப்பட்டார். மோசே எகிப்தின் அழிவிலிருந்து தேவன் தம்முடைய மக்களை மீட்கத் தேவனால் பயன்படுத்தப்பட்ட கருவியாக இருந்தார். ராகாப் எரிகோவில் பிரவேசித்த வேவுகாரரைக் காப்பாற்றினாள். தேவனுக்கு உண்மையாயிருந்தவர்களில் சிலர் ராஜ்யங்களைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கிறார்கள். நீதியை நடப்பித்திருக்கிறார்கள். வாக்குத்தத்தங்களைச் சுதந்திரித்திருக்கிறார்கள். சிங்கங்களின் வாயைக் கட்டியிருக்கிறார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்திருக்கிறார்கள், பட்டயத்திற்குத் தப்பியிருக்கிறார்கள். பலவீனத்தில் பலன் கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்திரீகள் சாகக் கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள் (11:33-35).

மேற்சொல்லப்பட்ட காரியங்களையெல்லாம் அவர்கள் எப்படி நிறைவேற்றினார்கள்? விசுவாசத்தினால் அவர்கள் இந்தக் காரியங்களை நிறைவேற்ற தேவனால் பயன்படுத்தப்பட இவைகளையெல்லாம் ஏன் சகித்தார்கள்? ஏனென்றால், அவர்கள் தங்கள் குறுகிய கால வாழ்வுக்கு அப்பால் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மேல் நோக்கமாயிருந்தார்கள். ஆபிரகாம் தேவன் தாமே கட்டி உண்டாக்கிய அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான் (11:10). மோசே அதரிசனமான தேவனைத் தரிசித்து எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் (11:24-27). இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைத் தூரத்தில் கண்டு விசுவாசத்தோடே மரித்தார்கள் (11:13-16). சிலர் உபத்திரவங்களை எதிர்கொண்ட போதிலும், மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள் (11:35).

அவர்களுடைய வாழ்க்கை, விசுவாசம், தியாகங்கள், செயல்பாடுகள் பற்றிய பதிவுகள் எல்லாம் நாம் ஓட்டத்தில் ஓடும்போது நம் வாழ்வில் அவர்களைப் பின்பற்றுவதற்காகத்தான் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவங்களெல்லாம் நம்முடைய

நன்மைக்காக எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 15:4). இந்த மாபெரும் மனிதர்களின் பக்தி வாழ்க்கை, ஓட்டத்தை ஓட முடியும் என்கிற உண்மைக்குச் சாட்சி பகர்கிறது. அவர்களுடைய உதாரணங்கள், நமக்குப் பலவீனங்கள் இருந்தாலும் அது சீர் செய்யப்பட முடியும், நம்மால் செய்ய முடியும் என்பதை நமக்குச் சத்தமிட்டுச் சொல்கிறது. அவர்கள் தேவனை நம்பினது போல் தேவனை நம்புங்கள். விளைவுகள் எதுவாக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள். நமக்குப் பரலோகத்தில் காத்திருக்கும் பலன் நாம் பெற்றுக் கொள்வதற்கு பாத்திரமான நம்பிக்கையாக இருக்கிறது. இந்தப் பூமிக்குரிய ஓட்டப் பந்தயத்தில் நம்மை உற்சாகப்படுத்துவதற்கு அநேகர் இருப்பதைப் போல் அவர்களுடைய உதாரணங்கள் பல ஆயிரமடங்கு பெருகி நம்மால் முடியும் என்று நம்மை உற்சாகப்படுத்துகிறது.

இந்த மாபெரும் மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து கிடைக்கும் உற்சாகத்தினால் நாம் மனப்பூர்வமாக ஓட வேண்டும். நாம் நம்மை ஆயத்தமாக்க வேண்டும்; நம்மை நல்ல நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் ஓடும்போது எவைகளை எடுத்துச் செல்ல வேண்டும், எவைகளை தூக்கி எறிய வேண்டும் என்பது சம்மந்தமாக தேவனுடைய ஆலோசனைகளை செவி சாய்த்துக் கவனிப்போம். நமக்காக வழியை ஆயத்தப்படுத்தி நமக்கு முன்பாக ஓடி, நம்மை வரவேற்பதற்காக எல்லைக்கோட்டில் நமக்காகக் காத்திருக்கும் இயேசு கிறிஸ்துவின் மீது நம் கண்களைப் பதிய வைப்போம்.

## கர்த்தர் ஆபிரகாமுக்குக் கொடுத்த ஏழு ஆசீர்வாதங்கள்

**ஆதியாகமம் 12:2-4**

1. நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன்
2. நான் உன்னை ஆசீர்வதிப்பேன்
3. நான் உன் பேரை பெருமைப்படுத்துவேன்
4. நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்
5. உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன்
6. உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன்
7. பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்.

# உக்கிராணத்துவத்தின் பரிபூரண ஜீவியம்

## The AbundaNT Life of Stewardship

*Demar Elam*

**யோசேப்பு எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டான். பார்வோனுடைய பிரதானியும் தலையாரிகளுக்கு அதிபதியுமாகிய போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் அவனை அவ்விடத்திற்குக் கொண்டுவந்த இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கினான்** (ஆதி.39:1). தேவன் யோசோப்போடு இருந்தபடியால் போத்திபாரின் வீட்டில் உண்மையுள்ள வாலிபனாக இருந்தார். அதினிமித்தம் யோசேப்பு செய்த காரியமெல்லாம் வாய்த்தது என்பதை போத்திபார் கவனித்துக் கொண்டிருந்தான். இதன் காரணமாக, போத்திபாரின் கண்களில் யோசேப்புக்கு தயவு கிடைத்தது. அதினால் அவன், தன் வீட்டுக்கும் தனக்கு உண்டான எல்லாவற்றிற்கும் யோசேப்பை விசாரணைக்காரனாக்கினான்.

**யோசேப்பினிடத்தில் உக்கிராணத்துவம் கொடுக்கப்பட்டது**

போத்திபார் தனக்கு உண்டான எல்லாவற்றையும் யோசேப்பினிடத்தில் ஒப்புவித்தான். தேவன் யோசேப்பினிமித்தம் போத்திபாரை ஆசீர்வதித்தார். உக்கிராணத்துவம் என்பது மேலாண்மை செய்வது அல்லது மேற்பார்வையிடுவது. போத்திபார் தனக்கு உண்டான எல்லாவற்றையும் யோசேப்பினிடத்தில் ஒப்புக்கொடுத்து அவைகளின் மீது அவனை அதிகாரியாகவும் வைத்தான். காரணம், யோசேப்பின் மீது அவனுக்கிருந்த நம்பகத்தன்மையினிமித்தம் அப்பொறுப்பை அவன் கொடுத்தான். ஆகவே, உக்கிராணத்துவத்துக்கு **உண்மைத்தன்மை** அவசியமாயிருக்கிறது. இதே கருத்ததை வலியுறுத்தும் வகையில் பவுல் 1 கொரி.4:1,2-ம் வசனங்களில் **இப்படியாக எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன் என்கிறான்.**

உக்கிராணத்துவம் நேர்மையையும், பொறுப்பையும் உள்ளடக்கியதாகும். இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களைப் பார்த்து ஐசுவரியவானாகிய ஒரு மனிதனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான். அவன் தன் எஜமானுடைய ஆஸ்திகளை அழித்துப்போடுகிறதாக எஜமானுக்கு அறிவிக்கப்பட்டது.

அப்பொழுது எஜமான் அவனை வரவழைத்து உன்னைக் குறித்து நான் இப்படிக் கேள்விப்படுகிறதென்ன? உன் உக்கிராணக்கணக்கை ஒப்புவி, இனி நீ உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாது என்றார் (லூக்கா 16:1,2).

ஆனால், யோசேப்போ தன்னிடத்தில் என்ன ஒப்புவிக்கப்பட்டதோ அதில் உண்மையுள்ளவனாகவும், நேர்மையுள்ளவனாகவும் இருந்தான். அவனுடைய செயல்பாடு இன்றைய நாட்களிலுள்ள எல்லா உக்கிராணக்காரர்களுக்கும் மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கிறது. யோசேப்புக்குத் தன் பக்தி வாழ்வில் ஓர் இக்கட்டான சூழல் ஏற்பட்டபோது, அவன் அதை உதறித் தள்ளிவிட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான் (ஆதி.39:8,9). இங்கே, யோசேப்பு தனக்கு ஒப்புவிக்கப்பட்ட உக்கிராணத்துவத்துக்கு உண்மையாயிருந்தது போல நாமும் தேவனுக்கு விரோதமான பாவச் செயல்களில் ஈடுபடாமல் உக்கிராண ஊழியத்தை நிறைவேற்றுவோம்.

**கிறிஸ்தவர்கள் தங்கள் பூமிக்குரிய உடமைகளுக்கு உக்கிராணக்காரர்களாக இருக்கிறார்கள்.**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூரணஜீவன் என்னும் வாக்குத்தத்தத்தை உண்மையுள்ள உக்கிராணக்காரர்கள் சுதந்தரித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். ஆகவேதான் அவர், **திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானே, அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்றார்** (யோவான் 10:10). இதினிமித்தம் தேவனுக்காக நல்ல உக்கிராணக்காரர்களாக இருப்பது நம் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொண்டுவரும்.

கிறிஸ்தவர்கள் வாங்குகிறவர்களாக அல்ல, கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். ஏன் சிலர் கொடுப்பதை விட மற்றவர்களிடமிருந்து வாங்குவதே சிறந்தது என்ற எண்ணம் கொண்டிருக்கிறார்கள்? ஏனென்றால், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது போதுமான விசுவாசம் இல்லாததுதான் காரணம். தேவன் உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கு அருமையான வாக்குத்தத்தங்களைக் கொடுக்கிறார். பூரணமான, ஜீவனுக்கான முதல்படி, பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது. தேவன் அவைகளைத் தம்முடைய பிள்ளைகளிடத்தில் ஒப்புக்கொடுத்து உக்கிராணக்காரர்களாக வைத்திருக்கிறார். (யோபு 4 1:11, சங் 24:1;50:10-1).

கிறிஸ்தவர்கள் கர்த்தாவே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கச் செய்யும் என்று ஜெபிக்கிறவர்களாக இருக்கவேண்டும். உண்மையுள்ள உக்கிராணக்காரர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை விசுவாசிக்கிறார்கள். **உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு. அப்பொழுது உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும், உன் ஆலைகளில் திராட்சரசம் புரண்டோடும்** (நீதி. 3:9,10) என்று தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

**கிறிஸ்தவனுக்கு தேவனுடைய வாக்குறுதி உண்டு**

**பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்** (2கொரி 9:6-8).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிபூரண வாழ்வின் அர்த்தத்தை உறுதி செய்திருக்கிறார். **கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்** (லூக்கா 6:38). போதுமான விசுவாசம் உண்மையுள்ள கிறிஸ்தவர்களைச் செயல்பட வைத்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கும். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்.

**என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசம பாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பல கணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும், உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்** (மல்கியா 3:10).

# தேவனுக்கு முதலிடம் கொடுத்து வாழ்வது எப்படி?

## How to Put and Keep God First?

*Marilyn Lastrap*

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்** (மத்தேயு 6:33) என்னும் கர்த்தருடைய கட்டளையைக் குறித்து நாம் பரிட்சயமானவர்களாகவே இருப்போம். மலைப் பிரசங்கம் என்று அழைக்கப்படுகிற இயேசு கிறிஸ்துவின் போதனைகள் நம் வாழ்க்கை முழுவதும் உயர்வாகப் பார்க்கப்படுகிற ஒன்றாகவே இருக்றது. மத்தேயு 6:33-ல் சொல்லப்பட்டுள்ள கிறிஸ்துவின் கட்டளைக்கு நாம் கீழ்ப்படிகிறோமா?

**தேவனுக்கு முதலிடத்தைக் கொடுக்க வேண்டுமென்றால், தேவன் ஒரு போதும் இரண்டாம் இடத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.**

தேவனாகிய கர்த்தர் யாத்திராகமம் 20:1-3 ம் வசனங்களில் இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்று மிகத் தெளிவாகச் சொல்லியுள்ளார்.

அப்படியானால், நவீன கால தெய்வங்கள் அல்லது விக்கிரகங்கள் எவை? அது பற்றி இக்கட்டுரையில் சிலவற்றைத்தான் என்னால் குறிப்பிட முடியும். சிலருக்கு குடும்ப அங்கத்தினர்கள்தான் தெய்வங்களாக இருக்கிறார்கள். சிலருக்கு நண்பர்களும், உடன் பணிபுரிபவர்களும் தெய்வங்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலருக்கோ பணம், உல்லாசம், பொழுதுபோக்கு, வேலை, விளையாட்டு, பள்ளி, கல்லூரி, வீடு, நிலம், வாகனம், ஆடைகள், விலையுயர்ந்த ஆபரணங்கள் போன்றவைகள் தெய்வங்களாக இருக்கின்றன. ஆனால், தேவனுக்கு முன்பாக இவ்வுலகப் பொருட்களோ, உறவுகளோ வராமல் தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

**தேவனுக்கு முதலிடத்தைக் கொடுக்க வேண்டுமென்றால், வேதாகமத்தில் ஆர்வமிக்கவர்களாக இருக்க வேண்டும்.**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 5:6 -ல் நீதியின் மேல் **பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள் என்று சொன்னார். அவர் உதடுகளின் கற்பனைகளைவிட்டு நான் பின்வாங்குவதில்லை; அவருடைய வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக் கொண்டேன்** என்று பக்தனாகிய யோபு சொன்னது போல் (யோபு 23:12) நாமும் சொல்லி ஆவிக்குரிய பிரகாரமாக மேம்பட வேண்டும். தேவனுடைய வார்த்தையானது எப்போதாவது உட்கொள்ளும் இணை உணவாக இல்லாமல், அது நம் அநுதின உணவாக இருக்க வேண்டும்.

**தேவனுக்கு முதலிடத்தைக் கொடுக்க வேணடுமென்றால் நாம் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்.**

நாம் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும் என்றால் நம்முடைய மனம் புதிதாகி மேலானவைகளை நாடுகிறவர்களாக இருக்க வேண்டும். (ரோமர் 12: 2), மேலும், கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே பூரணமாக வாசமாயிருக்க வேண்டும் (கொலோ. 3:16). அப்பொழுது, நாம் விசுவாச வார்த்தைகளினாலே போஷிக்கப்பட்டு நம் மனம் செழிப்பான நிலமாகும். **இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள், எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள், அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது** (1தெச. 5:17,18).

**தேவனுக்கு முதலிடத்தைக் கொடுக்க வேணடுமென்றால் நாம் எண்ணங்களை சிறைபிடிக்க வேண்டும்.**

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து பட்டணத்து சபைக்கு எழுதும்போது வாக்குவாதங்களை விட்டுவிட வேண்டுமென்று சொன்னார். **அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமைகளையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்படியச் சிறைப்படுத்துகிறவர்களா யிருக்கிறோம்** (2கொரி. 10:5). நம் வாழ்க்கையில் யோசித்துச் சில காரியங்களைச் செய்திருந்தால், அச்சூழ்நிலையில் நம் வாழ்க்கை எப்படி இருந்திருக்கும்! என்று சிந்தனை செய்வோம்.

இக்கருத்துக்கள் ஆலோசனையின் ஒரு பகுதிதான். தேவனோடு நம் ஐக்கியத்தைத் தொடர்வதற்கு நமக்கு முன்மாதிரி இயேசு கிறிஸ்துதான். அவர் அதை மிகச் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார். **என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறபடியால் பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்க விடவில்லை என்றார்** (யோவான் 8:29). இப்படிப்பட்ட தாழ்மையான செயல்தான் தேவனுக்கு முதலிடம் கொடுப்பதாகும். ✞

# பவுலின் வாழ்க்கையில் நான் எங்கே இருக்கிறேன்?

# Where Am I in the Life of Paul ?

*Rebecca Rushmore*

**என்னை உங்களால் அடையாளம் கண்டுகொள்ள முடிகிறதா? கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கவனமாக வாசித்து, நீங்கள் கண்டுபிடிக்கும் ஒவ்வொரு இடத்துக்கும் 10 மதிப்பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்துக் கொள்ளுங்கள். என் அடையாளத்தை நீங்கள் உறுதி செய்துவிட்டால் சரிபார்க்க தேவனுடைய வார்த்தையிலிருந்து வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.**

1. எங்கே பர்னபா என்னைக் கண்டான்?
   (அப்.11:22-26)
2. எங்கிருந்து என் மூன்று சுவிசேஷப் பயணங்கள் தொடங்கப்பட்டன?
   (அப்.13:1-3;15:35-39;18:22,23).
3. எங்கே பார்னபாவும் நானும் தேவர்கள் என்றழைக்கப்பட்டோம் ?
   (அப்.14:8-12)
4. எங்கே நான் தீமோத்தேயுவைக் கண்டேன்?
   (அப்.16:1-3)
5. எங்கே நான் மக்தோனியாவுக்கு செல்லும்படியான அழைப்புப் பெற்றேன்?
   (அப்.16:8-10)
6. எங்கே நான் அறியப்படாத தேவனைப்பற்றி பிரசங்கித்தேன்?
   (அப்.17:16-23)
7. எங்கே நான் ஒன்றரை ஆண்டு வேலை செய்து கொண்டே பிரசங்கித்தேன்?
   (அப்.18:1-11)
8. எங்கே நான் சிலருக்கு மறுபடியும் ஞானஸ்நானம் கொடுத்தேன்?
   (அப்.19:1-7)
9. எங்கே எங்களுக்கு கப்பற்தேசம் ஏற்பட்டது?
   (அப்.27:39-44;28:1).
10. எங்கே என்னை விசாரணைக்காகக் கொண்டு சென்றனர்?
    (அப்.25:12;28:16-19).

# குழந்தையில்லா வீடு - விரும்பப்படுகிறது !

## The Childless Home - by Choice !

*Brod Harrub*

**Time Magazine** என்னும் ஆங்கிலப் பத்திரிக்கையின் அட்டைப் படத்தில் குழந்தை இல்லா வாழ்க்கை என்னும் வாசகத்தைப் பார்த்து நான் வியந்துபோனேன். அப்பத்திரிக்கையின் உட்செய்தியில் அமெரிக்கர்கள் தங்கள் வேலையைப் பின் தொடர்வதற்காக, குழந்தை பெற்றுக்கொள்வதைத் தவிர்க்கிறார்களென்றும் இப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அச்சிடப்பட்டிருந்ததை அறிந்து அதிர்ந்து போனேன். பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு அதிகப் பணமும், அதிக நேரமும் தேவையாயிருப்பதினால், பிள்ளைகள் தங்கள் பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள் என்றும், தங்கள் நேரத்தை விரயம் செய்கிறார்கள் என்றும் அவர்கள் கருதுகிறார்கள் என்று அப்பத்திரிக்கையில் இடம்பெற்றுள்ள கட்டுரை, குழந்தைகள் வேண்டாமென்று எண்ணுகிற தம்பதிகளின் எண்ணிக்கை மிகவும் அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது என்பதை மிகத்துல்லியமாக புள்ளி விவரங்களுடன் தெரிவிக்கிறது.



அமெரிக்காவில் பிறப்பு விகிதம் வரலாற்றில் இல்லாத அளவுக்குக் குறைந்திருக்கிறது. சமீபத்தில் ஆய்வறிக்கையின்படி 2007 லிருந்து 2011 வரையுள்ள காலகட்டத்தில் அமெரிக்கப் பெண்களின் கருத்தரிப்பு விகிதம் 9% குறைந்துவிட்டது. 2010-ன் ஆய்வறிக்கையின்படி குழந்தையில்லா விகிதம் அமெரிக்கப் பெண்களிடத்தில் வெகுவாக அதிகரித்துள்ளது. 1970-களில் தாய்மைப் பருவத்தை அடையாமலேயே வாழ்ந்தவர்களின் விகிதம் பத்தில் ஒன்றாக இருந்தது, இன்று ஐந்தில் ஒன்றாக இருக்கிறது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் கருக்கலைப்பு போன்ற பிரச்சனைகளினால் கூட குழந்தை பிறப்பு விகிதம் குறைந்து விடுகிறது. அமெரிக்காவில் திருமண விகிதமும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. இன்றைய தலைமுறையில் சிலர், திருமணம் செய்து கொள்வதினால் வாழ்க்கையில் அநேக மாற்றங்களைச் செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே, அதைத் தவிர்த்து விடலாம் என்று நினைக்கிறார்கள். மேலும், பெண்களைப் பற்றிய உலகத்தின் பார்வை மனைவி மற்றும் தாய்மையின் பங்கைத் தலைகீழாக மாற்றிவிட்டது. திருமணம் என்பது இருமனங்கள் இணைவது என்றும் நிலை மாறி, அது ஒரு சமுதாய ஒப்பந்தம் போல் மாறிவிட்டது.

உலகத்தில் காணப்படும் கலாச்சார மாற்றங்களெல்லாம் குடும்பத்தைப் பற்றிய தேவனுடைய திட்டத்திற்கு நேர் எதிரானதாகும். ஆரம்பத்திலிருந்தே மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று நினைத்த தேவன், மனித இனத்தை ஆணும், பெண்ணுமாக உண்டாக்கினார். எபிரெய ஆசிரியர் விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும் விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக என்று சொன்னார். சாலொமோன் ராஜா, பிள்ளைகள் தாம் ஆசீர்வாதம் என்று சொன்னார். இதினிமித்தம் குழந்தைகள் தான் ஆசீர்வாதம் என்று இரண்டு அல்லது மூன்று தலைமுறைக்கு முன் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், இன்று மனிதர்களுடைய பேராசை மற்றும் சுயநலத்தால் குழந்தைகள் சாபமாக எண்ணப்படுகிறார்கள். இதில் வேதனையான விஷயம் என்னவென்றால், சபையும் கூட பிள்ளைகளைப் பற்றிய உலகத்தின் பார்வையை ஏற்றுக் கொண்டிருப்பதுதான். ஆனால், வேதாகமத்தில் கிறிஸ்துவுக்கும், சபைக்கும் உள்ள உறவு எவ்விதமாக விவரிக்கப்பட்டிருக்கிறது, என்பதையும் தேவனைக் கனப்படுத்தும் விவாகங்களே அவருக்குப் பிரியமானவை என்பதையும் நாம் கற்றுக் கொள்ள முடியும்.

தேவன் ஏதேன் தோட்டத்தில் ஆதி மனுஷனோடும், மனுஷியோடும் விவாகம் சம்பந்தமாக ஏற்படுத்தின உடன்படிக்கையை 1950-க்குப் பிறகு உள்ள தலைமுறையினர் மதிக்காமலும், கடைபிடிக்காமலும் போனதுதான் இன்று பல மணமுறிவுகளுக்கும், குடும்பப் பிரச்சனைகளுக்கும் காரணமாக அமைகிறது. ஆனால், நாம் நம் கலாச்சார பேதங்களையும் சுயநல ஆசைகளையும் களைந்து, தேவன் குடும்பத்தைப் பற்றியும் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கும் பொறுப்புகளையும் உணர்ந்து செயல்பட்டால், குடும்பத்தில் உள்ள எல்லாப் பிரச்சனைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்து தேவன் தந்தருளும் பிள்ளைப் பேற்றினாலே ஆசீர்வதிக்கப்பட முடியும். ✝

# விவாகம் எதை உள்ளடக்கியது?

## What Constitutes Marriage ?

Ian Mcpherson




**வி**வாகம் ஏதேன் தோட்டத்தில் தேவனால் ஏற்படுத்தப்பட்டது (ஆதி.2:23-25). விவாகம் மனிதனுக்கு ஏற்ற துணையை உண்டுபண்ணி (ஆதி.2:10), பிள்ளைகளை வளர்ப்பதற்குப் போதுமான, பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது (ஆதி.1:26-28; சங்கீதம் 127:3-5; மல்கியா 2:14,15). ஆனாலும், இன்றைய, நாட்களில் சாத்தான் தொடர்ச்சியாக பல இல்லங்களின் மீது சோதனைக் கணைகளை விடாது தொடுத்துக் கொண்டிருக்கிறான். அதினிமித்தம் சிலர் தங்களுக்கு திருமணம் ஆகிவிட்டதா, இல்லையா என்று தெரியாத அளவுக்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நாம் வேதாகம அடிப்படைக்குச் சென்று விவாகம் எதை உள்ளடக்கியது என்று பார்ப்போம்.

### *விவாகம் தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது*

**இப்படி இருக்கிறபடியால் அவர்கள் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்** (மத்.19:6). விவாகத்தில் இருவரை இணைக்கவோ அதன் பிறகு விவாகரத்து கொடுக்கவோ எந்த மனிதனுக்கும், அரசாங்கத்திற்கும் தேவனுடைய அங்கீகாரம் இல்லாமல் அதிகாரம் கிடையாது.

### *விவாகம் தேவச்சட்டத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது*

**மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங்காலமளவும்**

**பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள் ; தன் புருஷன் மரித்த பின்பு தனக்கு இஷ்டமானவனையும் கர்த்தருக்குட்பட்டவனுமாயிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள்** (1கொரி. 7:39). இங்கே, பிரமாணம் என்பது தேவனுடைய பிரமாணமாயிருக்கிறது. இதற்கு மிகச்சிறந்த ஓர் உதாரணம், ஏரோதுக்கும் ஏரோதியாளுக்கும் நடந்த திருமணம் ஆகும். அவர்கள் இருவரும் தேசச்சட்டத்தின்படி திருமணம் செய்திருந்தாலும் கூட (மாற்கு 6:17), யோவான் ஸ்நானன் ஏரோதைப் பார்த்து, நீர் அவளை வைத்துக் கொள்வது நியாயமல்லவென்று சொல்லியிருந்தான் (மத்.14:4). ஏரோது என்பவன் கிறிஸ்தவனாக இல்லாதிருந்தும் கூட, அவன் தேவனுடைய விவாகச் சட்டத்திற்குக் கணக்குக்கொடுக்க வேண்டியதாயிருந்தது. இதினிமித்தம் கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவரல்லாதவர்களும் தங்கள் திருமணத்தில் தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

## *விவாகம் யாவருக்கும் கனமுள்ளதாயும் அசுசிப்படாததாயுமிருக்கிறது*

**விவாகம் யாவருக்கும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்** (எபிரெயர் 13:4). ஒரு விவாகம் செல்லுபடியாக வேண்டுமென்றால், அது யாவருக்குள்ளும் கனமுள்ளதாய் இருக்க வேண்டும். விவாகம் சாட்சியுடனே கூடியதாகவும், வெளிப்படையாவும், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் சட்டப்பூர்வமாகவும் இருக்கவேண்டுமென்று சமுதாயத்தால் எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு விவாகம் தேசத்தின் சட்டத்திற்கு ஒத்திருக்கவில்லையென்றால், அது மனிதனுக்கு முன்பாக கனமுள்ளதாயிருக்காது. தவறான உறவுகள், திருமணத்திற்கு முன்பு சேர்ந்து வாழ்தல் போன்றவைகள் விவாகக் கணக்கில் வராது.

ஒருவர் வாகனத்தைப் பொறுப்பாக ஓட்டினால் அது மிகப்பெரிய ஆசீர்வாதமாகும். மாறாக, அவர் வாகன உரிமம் இல்லாமலும், அவர் விருப்பப் படியும் வாகனத்தை ஓட்டினால் அது சாலையில் எத்தனை உயிர்களைப் பறிக்கும் என்பதை கற்பனை செய்துபாருங்கள் . அதேவிதமாக, தாம்பத்ய உறவு விவாக மஞ்சத்திற்குட்பட்டால் அது கனமுள்ளதாயும் அசுசிப்படாததாயும் இருக்கும். விபசாரம், வேசித்தனம் போன்றவைகள் மோசமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும். சீர்குலைந்த குடும்பங்கள், பெற்றோர் இல்லாத பிள்ளைகள், தற்கொலை, கொலை, கொடிதான வியாதி போன்றவைகளே அதன் மோசமான விளைவுகளாகும்.

## விவாகம் உடன்படிக்கையால் உண்டாகிறது

விவாகம் தாம்பத்திய உறவினால் உருவாவதில்லை. **ஏன் என்று கேட்கிறீர்கள், கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்; நீ துரோகம் பண்ணினயே உன் தோழியும் உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு** (மல்கியா 2:14) உண்மையாகவே, விவாகம் மூன்று பேருக்கு இடையே ஏற்படும் உடன்படிக்கையாகும். அதாவது, தேவன், மனிதன், மனுஷி, ஆகிய மூவர் முன்னிலையில் உடன்படிக்கை ஏற்படுத்தப்படுகிறது. ஆகவே, ஆணும், பெண்ணும் விவாக மஞ்சத்திலல்ல, அதற்கு முன்பே விவாக வைபவத்தின் மூலமே கணவன் மனைவியாக இணைக்கப்படுகிறார்கள்.

**உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுவதாக; உன் இளயவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு. அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மானும் அழகான வரையாடும்போலிருப்பாளாக; அவளுடைய ஸ்தனங்களே எப்பொழுதும் உன்னைத் திருப்தி செய்வதாக, அவளுடைய நேசத்தால் எப்பொழுதும் மயங்கியிருப்பாயாக** (நீதி. 5:18,19). இப்படி இருக்கும்போது மாத்திரமே தேவன் எதிர்பார்க்கிற பக்தியுள்ள சந்ததியை உலகில் உதிக்கச் செய்ய முடியும். ✞

---

## ஒரு கிறிஸ்தவனாக நான் என்ன செய்ய வேண்டும்?

1. புதிதான ஜீவனுக்குள்ளவனாய் நடந்து கொள்ள வேண்டும் (ரோமர் 6 : 3 : 4)
2. நாம் வளரும்படி, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும் (I பேதுரு 2 : 1,2).
3. கிறிஸ்தவன் என்னும் நாமத்தைத் தரித்துக்கொள்ள வேண்டும் (I பேதுரு 4 : 16).
4. உறுதியாய்த் தரித்திருக்க வேண்டும் (அப்போஸ்தலர் 2:48).
5. பக்திவிருத்தி உண்டாக்கும் செயல்களில் தேறும்படி நாட வேண்டும் (I கொரி 14 : 12).
6. மேலானவைகளை நாடவேண்டும் (கொலோ. 3:8).
7. நம் இரட்சகரைப்பற்றி மற்றவர்களிடத்தில் சொல்ல வேண்டும் (அப்போஸ்தலர் 8:4).
8. கிறிஸ்தவப் பண்புகளைக் கட்டிக்கொள்ள வேண்டும் (II பேதுரு 1 : 5-11).
9. சபை ஆராதனைக்கு தவறாமல் வர வேண்டும் (எபிரெயர் 10 : 25)
10. வரவுக்குத்தக்கதாக தேவனுக்குக் கொடுக்க வேண்டும் (I கொரிந்தியர் 16 : 12)
11. எந்தச் சூழ்நிலையிலும் கர்த்தரை விட்டு விலகாமலிருக்க வேண்டும் (II தீமோ. 4 : 10)
12. மரணபரியந்தம் தேவனுக்கு உண்மையாயிருக்க வேண்டும் (வெளி 2 : 10)

# ஆத்துமாவின் அளவீடு

பொல்லாதவர்களைக்குறித்து எரிச்சலடையாதே;
நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளாதே.
அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு,
பசும்பூண்டைப்போல் வாடிப்போவார்கள்.
கர்த்தரை நம்பி நன்மைசெய்;
தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்.
கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு.
அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு
அருள்செய்வார்;
உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல்
நம்பிக்கையாயிரு;
அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.
உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும்,
உன் நியாயத்தை பட்டப்பகலைப் போலவும்
விளங்கப்பண்ணுவார்.
கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு;
காரியசித்தியுள்ளவன்மேலும் தீவினை செய்கிற
மனுஷன்மேலும் எரிச்சலாகாதே.
கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு;
பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு
வேண்டாம்.

(*சங்கீதம்* 37 : 1 -8)

# நீங்கள் வாழ விரும்புகிறீர்களா?

## *Do You Want To Live?*

*Neal Pollard*

**தீ**ர்க்கதரிசியாகிய ஆமோஸ் இஸ்ரவேலர்களுக்கு வரவிருக்கும் சிறைபிடிப்பைப் பற்றி எச்சரிக்கிறார். அதேநேரத்தில், தேவ கோபாக்கினை வெளிப்படுவதற்கு முன்பு மனந்திரும்ப வேண்டுமென்றும் இஸ்ரவேலர்களிடத்திலே கண்டித்து உணர்த்துகிறார். ஆமோஸ் ஐந்தாம் அதிகாரத்தில் தேவன் ஆவிக்குரிய ஜீவியத்தைப் பாதுகாக்க அல்லது புதுப்பிக்க மூன்று வகையான காரியங்களைக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேலர்கள் தேவனைத் தேடினால் கண்டடைவார்கள் என்ற வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. ஆகவே, இவ்வுலகத்தில் ஜீவனைப்பற்றி தேவனுடைய அறிவுரை என்னவென்று பார்த்து ஆவிக்குரிய வாழ்வில் மேன்மையடைவோம்.

### என்னைத் தேடுங்கள் (ஆமோஸ் 5:4,5)

**கர்த்தர் இஸ்ரவேல் வம்சத்தாருக்குச் சொல்லுகிறது என்னவென்றால் என்னைத் தேடுங்கள். அப்பொழுது பிழைப்பீர்கள், பெத்தேலைத் தேடாதேயுங்கள்; கில்காலிலும் சேராதேயுங்கள் பெயர்செபாவுக்கும் போகாதேயுங்கள், ஏனென்றால், கில்கால் சிறையிருப்பாகவும் பெத்தேல் பாழான ஸ்தலமாகவும் போகும்.**

தேவன் நம்மை இந்த வசனங்களின் வாயிலாக பெத்தேல் கில்கால் மற்றும் பெயர்செபா போன்ற வடக்கு ராஜ்யத்தின் மூன்று முக்கிய பட்டணங்களிலிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டுகிறார். **பெத்தேல் என்பதற்கு தேவனுடைய வீடு என்று பொருள்.** ஆனால், அவர்களோ அதை தீமையின் வீடாக மாற்றி விட்டார்கள். பெயர்செபாவும் மற்ற பட்டணங்களும் ஆராதனை ஸ்தலங்களாகக் காணப்பட்டது. ஆனபோதிலும், அவர்களுடைய ஆராதனையும் பக்தி வாழ்க்கையும் தேவனிடமிருந்து விலகிப்போய்விட்டன. இந்த மூன்று பட்டணங்களுமே உதவிக்காக தேவனை நாடாமல் மற்றவைகளைத் தான் நாடினார்கள்.

**கர்த்தரைத் தேடுங்கள் (ஆமோஸ் 5:6,7)**

**கர்த்தரைத் தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்; இல்லாவிட்டால் பெத்தேலில் இருக்கிற ஒருவராலும் அவிக்கப்படாத அக்கினி யோசேப்பின் வீட்டில் பற்றி அதைப் பட்சிக்கும். நியாயத்தை எட்டியாக மாற்றி, நீதியைத் தரையிலே விழப்பண்ணுகிறவர்களே அவரைத் தேடுங்கள்.**

இந்த வசனப்பகுதியில் ஆமோஸ் தீர்க்கன் தன்னுடைய வார்த்தைகளைக்ஷ; கர்த்தர் பக்கமாகத் திருப்புகிறார். அதாவது, தவறான மாற்றுக் காரியங்களை வெளிப்படுத்தாமல், ஆவிக்குரிய விளைவுகளைப் பற்றி விவரிக்கிறார். தேவனுடைய செயல்பாடுகளை அங்கீகரிக்காதவர்களுக்கு மாபெரும் தண்டனை காத்திருக்கிறது. ஆகவே, நியாயத்தை மாற்றி நீதியை தரையிலே விழப்பண்ணுகிறர்களை ஆமோஸ் கடுமையாகச் சாடுகிறார்.

**தீமையை அல்ல நன்மையைத் தேடுங்கள் (ஆமோஸ் 5:14)**

**நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையை அல்ல நன்மையைத் தேடுங்கள் அப்பொழுது நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்.**

இஸ்ரவேலர்கள் சரியானவைகளைப் பேசினார்கள். ஆனால், அவர்கள் சரியான வாழ்க்கையை வாழவில்லை. அவர்கள் நம் சர்வஞானிக்கு முன்பாக அறிவிலிகளாகவே இருந்தனர். அவர்கள் தங்கள் உதவிக்காகவும், விடுதலைக்காகவும் தேவனை நோக்கி விண்ணப்பித்தபோது, தேவன் அவைகளை நிராகரித்துவிட்டார். இங்கே, மனந்திரும்புதல் என்பது சரியானதைப் பிடித்துக் கொண்டு தவறானதை நிராகரித்து விடுவதாகும்.

ஆமோஸ் ஐந்தாம் அதிகாரத்தில் **தேடுங்கள்** என்பது **திரும்ப வாருங்கள்** என்ற பொருளினடிப்படையில் இருப்பதாகச் சிலர் சொல்லுகின்றனர். இன்று சிலர், முதன்முதலாகத் தேவனைத் தேடுகிறவர்களாக இருக்கலாம். எப்படி வந்தாலும் தேவன் நம்மை அரவணைத்து ஏற்றுக் கொள்கிறார்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். ✝

# பரிசேயர்களின் நீதி

## THE RIGHTEOUSNESS OF PHARISEES

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் நம் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக ராஜயத்தில் பிரவேசிக்க மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார் (மத்.5:20). வேதபாரகர் பிரமாணங்களை எழுதும் வேலையைச் செய்து வந்தார்கள். எனவே, நம் நீதி எப்படி பரிசேயர், வேதபாரகர் போன்றவர்களுடைய நீதியிலும் அதிகமாக இருக்கமுடியும்?

இதற்கான பதில், வேதபாரகர் மற்றும் பரிசேயர்கள் பிராமணங்களை ஏட்டு வடிவில் நன்றாய் அறிந்திருந்தார்களே தவிர அதன் உண்மையான நோக்கத்தை அறியவில்லை. யோவான் ஸ்நனானும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் அவர்களைப் பார்த்து விரியன் பாம்புக்குட்டிகளே என்றழைத்தனர் (மத்.3:7;12:34;23:33). கிறிஸ்துவானவர் மத்தேயு 23-ம் அதிகாரத்தில் வேதபாரகரையும், பரிசேயரையும் கடுமையாகச் சாடுகிறார். ஏழுமுறை அவர்களை மயக்காரரே என்று சாடினார். மேலும், அவர்களை மதிகேடரே, குருடரே என்றும் (வச.19) வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே (வச.27) என்றும் சாடினார்.

இவைகளையெல்லாம் நாம் 23,24-ம் வசனங்களில் வாசிக்கலாம். வேதபாரகரும், பரிசேயரும் பரிசுத்தவான்களாக, நீதிமான்களாக இருக்கும்படி மிகவும் எதிர்பார்க்கப்பட்டார்கள். ஆனால், அவர்களோ நியாயப்பிரமாணத்தின் சில காரியங்கள் முக்கியத்துவமில்லாதவைகள், எனவே, அவைகளை அனுசரிக்கவேண்டியதில்லை என்றும் போதித்து வந்தார்கள். இவைகளை வைத்துப் பார்க்கும் போது, வேதபாரகர் மற்றும் பரிசேயருடைய நீதியிலும் நம் நீதி அதிகமாயிருக்க வேண்டுமென்றால் நாம் தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் அறிவிக்க வேண்டும் (அப்.20:27). ✞

# அன்பின் வாழ்க்கை வாழுங்கள்

# Live a life of love

*Demar Elam*

**ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப் போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள்** என்று அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு பட்டணத்து சபைக்கு நிருபம் எழுதி அவர்களை உற்சாகப்படுத்துகிறார் (எபேசியர் 5:1,2).

**தேவனைப் பின்பற்றுங்கள்**

சிறுபிள்ளைகள் எதைப் பார்க்கிறார்களோ, எதைக் கேட்கிறார்களோ, அதிலிருந்துதான் காரியங்களைக் கற்றுக் கொள்கிறார்கள். குறிப்பாக, மொழியையும் இன்னும் எண்ணற்ற காரியங்களையும் இவ்விதமாகத்தான் கற்றுக்கொள்கிறார்கள். நாமும் இயற்கையாகவே மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்கிறவர்களாகத்தான் இருக்கிறோம். அதாவது, நம் வீட்டில் எப்போதும் சண்டை சச்சரவைக் கவனிக்கிறவர்களாக இருந்தால் அதைத் தான் நாமும் கற்றுக் கொள்கிறோம். இங்கே, **வார்த்தைகளை விட செயல்கள் உரக்கப் பேசுகின்றன.** ஒரு குழந்தையின் இளம் மனதில் எது நன்மை என்பது பற்றிய சரியான உருவம் உருவாக வேண்டும். இது குடும்பத்தில் பெற்றோர்கள் தேவனைப் பற்றி பேசுவதாலும், வேதாகம சம்பவங்களை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதாலும் உண்டாகிறது. தேவன் பரிசுத்தமுள்ளவராயிருக்கிறார் என்பதை நாம் தெளிவாகக் கண்டு, பின்பு அவரைப் போலிருக்க நம் மனதைப் பக்குவப் படுத்திக் கொள்ளவேண்டும்.

நம் ஆவிக்குரிய வாழ்க்கைப் பயணத்தில் தேவபக்தியுள்ள சிலரையும் நாம் இணைத்துக்கொள்ளலாம். அவர்களுடைய வாழ்க்கை நமக்குத் தூண்டுகோலாகவும், அவர்களைப் பின்பற்றத்தக்க நல்ல முன்மாதிரியாகவும் அது இருக்கும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான் நமக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார். ஆகவே, நாம் கிறிஸ்து இயேசு மூலமாக நாம் தேவனைப் பின்பற்றும்படியான கட்டளை பெற்றிருக்கிறோம்.

மேலும், நாம் அன்பிலே நடந்து கொள்ளும்படி வலியுறுத்தப்படுகிறோம். நாம் தேவனால் நேசிக்கப்படுவது மாத்திரமல்ல, நம் வாழ்க்கையின் அங்கமாக அன்பு இருக்க வேண்டும். அதினிமித்தம், முதலாவது நாம் தேவனிடத்தில் அன்பு கூர வேண்டும் (மத்தேயு 22:37). பின்பு நாம் நம் இடத்தில் அன்பு கூருவது போல பிறரிடத்திலும் அன்பு கூரவேண்டும் என்பது உண்மையாக இருந்தாலும் கூட தேவனை விட அதிகமாக நம்மை நேசிக்கக் கூடாது. அன்பு செலுத்துவதில் யாருக்கு முதலிடம் கொடுப்பது என்பது மிகப் பெரிய பிரச்சனையாக இன்று உலகத்தில் உருவெடுத்திருக்கிறது. இதனால், நாம் நமக்கு முதலிடம் கொடுத்து தேவனுக்கு இரண்டாம் இடத்தைக் கொடுக்கிறோம். சிந்திப்போம்!

அன்பு கிறிஸ்தவ வாழ்க்கையின் அங்கமாக இருக்கிறது. இது மிகவும் இன்றியமையாததாயிருக்கிறது. அன்பு உலகத்தாருக்கு தேவையான ஒரு செயலாய் இருக்கிறது. அன்பு அனைத்து இல்லங்களுக்கும், ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவசியமாயிருக்கிறது. நாம் அன்பு அன்பு என்று வெறுமனே பேசுகிறவர்களாயிராமல் அதை நடைமுறைப் படுத்துகிறவர்களாயிருக்க வேண்டும். நம்மைச் சிநேகிக்கிறவர்களை மாத்திரம் சிநேகிக்காமல் மற்றவர்களையும் சிநேகித்து, நம் சத்துருக்களையும் சிநேகிக்க வேண்டும். இதுதான் கிறிஸ்தவப் பண்பாயிருக்கிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார். எனவே, அவர் தம்முடைய பிள்ளைகளும் அதே தன்மையும் கண்ணோட்டத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் எவ்வித ஆச்சிரியமும் இல்லை. ஆகவே, நாம் அன்பிலே நடந்து கொள்ள வேண்டும்.

அடுத்ததாக, அப்போஸ்தலனாகிய பவுல், நாம் சுலபமாகப் பின்பற்றத்தக்க ஒரு ஜீவனுள்ள உதாரணத்தைத் தருகிறார். கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தது போல, நீங்களும் அன்பிலே நடந்து கொள்ளுங்கள் என்று நம்மை உற்சாகப்படுத்துகிறார். அன்பிற்கான மிகச்சிறந்த இலக்கணம் இயேசு கிறிஸ்துதான். இவ்வுலகம் இவ்விதமான அன்பை இதுவரைக் கண்டதில்லை. அவரைப் பற்றிய சம்பவங்களை உள்ளடக்கிய தகவல்கள் சுவிசேஷம் என்றழைக்கப்படுகிறது. சுவிசேஷம் என்றால் நற்செய்தி என்று பொருள். நமக்காக, அவர் தம் ஜீவனை விடும் அளவுக்கு நம்மீது அன்பு கூர்ந்தார். தேவன் நம்மில் அன்பு கூர்ந்து நாம் இரட்சிக்கப்பட

வேண்டுமென்று விரும்பி நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பிக் கொடுத்தார்.

இச்சம்பவங்கள், எல்லாவற்றிலேயும் தேவனுடைய அன்பும் கிறிஸ்துவினுடைய அன்பும், பரிசுத் ஆவியானவரின் வழிநடத்தலும் ஊடுருவிச் செல்வதை நம்மால் காணமுடியும்.

அன்பும், தியாகமும் கிறிஸ்தவ வாழ்க்கையின் அங்கமாக இருக்கிறபடியால் தேவனிடத்திலிருந்து நாம் எவைகளைப் பெற்றுக் கொள்கிறோம் என்பது முதன்மையானதல்ல. நாம் அவருக்காக என்ன கொடுக்கிறோம் என்பதுதான் கேள்வியாயிருக்கிறது. தேவன் நம்மிடத்திலிருந்து எவைகளை எதிர்பார்க்கிறாரோ அவைகளில் அன்புதான் முதலிடத்தைப் பிடிக்கிறது. ஆகவே, நாம் நேர்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

நாம் உண்மையாகவே உபதேச சத்தியத்தின்படி கிறிஸ்துவுக்குள்ளாக அன்புள்ள வாாக்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? அன்பு என்னும் மாபெரும் பொக்கிஷம் நம்முடைய வார்த்தைகளை, செயல்களை, நாட்களை விவரிக்குமா?

அன்பு இவ்வுலகத்தில்தான் அரிதான பொருளாக இருக்கிறது. பரலோகத்தில் அல்ல. அன்பு ஒரு போதும் குறையாத உலகில் வாழ நீங்கள் இவ்வுலகத்தில் ஆயத்தமாகுங்கள். ✝


## ஏன் அநேகர் இன்னும் இரட்சிக்கப்படவில்லை?

1. தேவனுடைய வார்த்தையை சாத்தான் தங்கள் இருதயங்களிலிருந்து பறித்துக் கொள்ள அனுமதிப்பதால் (மத்தேயு 13 : 19)
2. தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்புவதால் (யோவான் 16 : 43)
3. கர்த்தரை விட குடும்பத்தை அதிகமாக நேசிப்பதால் (மத்தேயு 10 : 37)
4. இரட்சிப்பு பற்றி கவலையில்லாமல் இருப்பதால் (எபிரெயர் 2 : 4).

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை | 7:10 மணி |
| தமிழன் | TV | வியாழன் | இரவு | 9:30 மணி |
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 மணி |



## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.


தொடர்புக்கு

இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.

தமிழ்நாடு, இந்தியா.


**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள் (Tracts) வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**



E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382

P.R. **சுவாமி** : 098440 70763

P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420

B. **அர்ஜுனன்** : 994435 58041


## சத்திய வழி




- பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி (ஊழியர்)**
- ரேடியோ : ஞாயிறு to வெள்ளி 5.30 p.m.
- நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.
போன் : 080-25463507, செல் : 098440 70763

## கிறிஸ்துவின் வசனம்




- பேச்சாளர் : **சகோ. B. அர்ஜூனன்**
- நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி
- மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்
- ரேடியோ : 31 Meter Band (சனி மாலை 5.30 5.45)
  Srilanka all Asia Service



<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;
கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்தலகுண்டு – 624 206.
திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

## கிருபையுள்ள வார்த்தை



- பேச்சாளர் : **சகோ. P.C. பிலேமோன் ராஜா**
- தமிழன்/நம்பிக்கை : ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி
- பைபிள் பாடங்கள் : அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்
- பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)
- தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை
- **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL
- **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.
செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## ‘ சத்தியத்தின் குரல் ‘ சந்தா விண்ணப்பம்

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( 4 இதழ்கள் ) (அ) ரூ. 200 ( 8 இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழுக்கு என்னுடைய .............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ “சத்தியத்தின் குரல்” நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி

**E.Z.S. ராஜநாயகம்**
“சத்தியத்தின் குரல்” காலாண்டு இதழ்
**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**
**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**
**E-mail : rajarichal@yahoo.co.in**

பெயர் : ______________________________

தெரு / ரோடு : ______________________________

நகரம் : ____________________ பின் கோடு : ______________

மாநிலம் : ______________________________